# கிறிஸ்துவின் நாமம்

- ஜே.சி.சோட்

முதன்மை ஆசிரியர்



நாம் அணிந்து மகிழ்ந்திட கிறிஸ்துவின் பெயரைக் காட்டிலும் மேலான பெயர் வேறே எதுவாயிருக்க முடியும்?.

''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும்; மனுஷர்களுக்குள்ளே ***அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை***'' என்கிறார் பேதுரு (அப் 4:12).

பவுல் இதைக் குறித்து சொல்வதைக் கவனியுங்கள் : ''இதினிமித்தம் நான் ***பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய.... கிறிஸ்து இயேசுவின்*** மூலமாய் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்''. (எபேசி. 3:14,15,21) பரலோகமே இப்பெயரில் பெருமிதம் கொள்ளுமென்றால் பூமிக்கும் இது பெருமைக்குரியதல்லவா? **இந்த பெயரைக் குறித்து நாம் வெட்கப்படுவோமானால் நமது ஆண்டவரும் தமது பிதாவுக்கு முன்பாக நம்மை மறுதலித்து விடுவார்.** (மத்தேயு 10:32,33; லூக்கா. 9:26)

கிறிஸ்துவுக்குத்தான் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உண்டென்பதை அவர் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் (மத்தேயு 28:18). பவுல் தன் நிருபத்தில், '' கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு,

மரணபரியந்தம், அதாவது சிலுவையில் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, ***இயேசுவின் நாமத்தில்*** வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், ***எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார் என்று கூறி இருக்கிறார்.*** (பிலிப்பியர் 2:5-11). இந்த வேத வசனப்பகுதியை வாசிக்கும் எவருக்கும் கிறிஸ்துவினுடைய பெயரின் மேன்மையும் முக்கியத்துவமும் நன்கு புலப்படும். அப்படியிருக்க வேறு எந்தப் பெயராவது இதற்கு ஈடு இணையாகுமா?

கிறிஸ்துவைப் பின்பற்றும் சீஷர்களுக்கு ***கிறிஸ்தவர்கள்*** என்ற பெயர் வழங்கிற்று என அப்போஸ்தலர் நடபடிகள் 11 : 26ல் காண்கிறோம். பவுலின் பிரசங்கத்தைக் கேட்ட அகிரிப்பா ராஜாவும் கூட, ''நான் ***கிறிஸ்தவனாகிறதற்கு*** கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய்'' என்றான் (அப். 26:28). பேதுரு இதை சுட்டிக்காட்டும் போது ''ஒருவன் ***கிறிஸ்தவனாயிருப்பதினால்*** பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, இதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்'' என்கிறார். (I பேதுரு 4:16)

அதாவது, ஒருவன் கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியை கேள்விப்பட்டு, அவர்மேல் விசுவாசம் வைத்து (யோவான் 14:1), மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று வாயினால் அறிக்கையிட்டு (ரோமர் 10:9;10), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டால் (அப் 2:38), அவன் இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டு (அப் 2:47 ; 1 தீமோ 3:15) அவர் பின் செல்லும் 'கிறிஸ்தவன்' என்கிற பெயரால் அழைக்கப்படுகிறான். அன்று முதல் கிறிஸ்துவின் பெயரை அவன் தரித்துக் கொண்டு, ஆண்டவரும் இரட்சகரும், எஜமானனுமாகிய அவருக்கே புகழ்ச்சி உண்டாகும்படி வாழ்ந்திடுவான்.

அன்றியும், கிறிஸ்து தமது சபையைக் கட்டப் போவதாக வாக்களித்திருந்தாரே (மத் 16:18), அது எருசலேமில் நிறைவேறிற்று. அன்று ஏராளமானோர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டறிந்து அதற்குக் கீழ்ப்படிந்தனர் (அப் 2:1-41). இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். (அப் 2:47)

திட அஸ்திபாரமான கன்மலையாகிய கிறிஸ்துவின்மேல் சபையானது கட்டப்பட்டுள்ளது. (மத்தேயு 16:18; I கொரி 3:11). இந்த சபைக்காக கிறிஸ்து தம்மை பலியாக ஒப்புக் கொடுத்து தமது விலையேறப் பெற்ற இரத்தத்தை சிந்தி இதனை சம்பாதித்துக்கொண்டார். (எபேசியர் 5:25-27, அப்.20:28) கிறிஸ்துவே இந்த சபையின் தலைவராகவும், இரட்சகராகவும் உள்ளபடியால் அவர் பெயரையே இது தாங்கி நிற்கிறது. (கொலோ 1:18; எபேசி 5:23; ரோமர் 16:16). மேலும் இந்த சபையை மகிமையுள்ள சபையாகத் தமக்குமுன் நிறுத்துவதற்காக அவர் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

எனவே 'வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாக பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்' என பவுல் அறிவுறுத்துகிறார். (கொலோ 3:17) கிறிஸ்துவின் பெயர் தேவதூதரைக் காட்டிலும் விசேஷித்த நாமம் என எபிரெய எழுத்தாளன் குறிப்பிடுகிறார். (எபி 1:4). இது "உங்களுக்கு தரிக்கப்பட்ட நல்ல நாமம்" என யாக்கோபு வருணிக்கிறார் (யாக் 2:7). பெர்கமு சபையின் அன்றைய விசுவாசிகள் கிறிஸ்துவின் நாமத்தை பற்றிக்கொண்டிருந்தார்கள் என கர்த்தர் பாராட்டுகிறார் (வெளி 2:13).

மேற்கூறிய வேத வசனங்களின் வாயிலாக, நாம் தனிப்பட்ட விதத்திலும், சபையாகவும் சேர்ந்து, கிறிஸ்துவின் பெயரையே தரித்துக் கொள்ள வேண்டுமென திட்ட வட்டமாக அறிய வருகிறோம். கர்த்தர் தம்முடையவர்களை நிச்சயம் அறிவார். (2தீமோ 2:19) அதாவது அவருடைய பெயரை தரிக்க தகுதியானவர்கள் யார் என்பது அவருக்குத்

தெரியும். கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்வது, "கிறிஸ்தவர்கள்" என அழைக்கப்படுவது, ஓர் மாபெரும் சிலாக்கியம். ஆயினும் அவர் பெயரைத் தரித்துக் கொள்ள மறுப்பதும், அவர் பெயருக்கு களங்கத்தையும், அவமானத்தையும் உண்டுபண்ணுவதும் எவ்வளவு பயங்கரமான ஆக்கினைக்குரியது என்பதை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

முதல் நூற்றாண்டில், முதன்முதலாய் சபையானது உருவான காலகட்டத்தில் பிரிவுக்கூட்டங்கள் (DENOMINATIONS) எதுவும் காணப் படவில்லை; எனவே "சபை", "கிறிஸ்துவின் சரீரம்", "தேவனுடைய குடும்பம்", "தேவனுடைய சபை", "முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை", "கிறிஸ்துவின் சபை" என்கிற இந்த பெயர்களில் எதைச் சொன்னாலும், அது கர்த்தருடைய ஒரே சபையைத்தான் குறிப்பிடுகிறது என்று அன்றைய மக்கள் விளங்கிக் கொண்டனர். வேதம் கூறும் சபையின் பெயர்களில் எதைப் பயன்படுத்தினாலும் அன்று எவ்விதக்குழப்பமும் இருந்ததுமில்லை.

ஆனால் இன்றோ கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் எனச் சொல்லிக் கொண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரிவுக் கூட்ட சபைகளாக (DENOMINATIONS) செயல்படுவதைப் பார்க்கிறோம். இவைகள் எல்லாவற்றிற்கும் வித்தியாசப்பட்ட உபதேசங்கள், பெயர்கள், பாரம்பரியங்கள் இருப்பதையும் காண்கிறோம். அதில் சில விஷயங்கள், வேதத்திலுள்ளவைகளாகவும், இன்னும் பல போதனைகள் அந்த பிரிவுக் கூட்டங்களை ஏற்படுத்திய மதத்தலைவர்களாலும் புகுத்தப்பட்டவை களாகக் காணப்படுகிறது.

இந்தக் குழப்பமான சூழ்நிலையில் மெய்யான கர்த்தருடைய சபையை அடையாளம் காண்பதற்காக, வேதத்திலுள்ள ஓர் குறிப்பிட்ட பெயரை மட்டுமே பயன்படுத்துவது தேவனுடைய பிள்ளைகளுக்கு ஞானமாய் தென்பட்டது. இதனால் வெளியூர் செல்லும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய சபையை மிகவும் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது.

வேதத்திலுள்ள ஒரு பெயரை மட்டும் பயன்படுத்துவது வேத உபதேசங்களுக்கு முரணானது அல்ல; ஏனெனில் ''தேவனுடைய சபை'', ''தேவனுடையகுடும்பம்'', ''தேவனுடைய வீட்டார்'', ''முதற்பேறானவர்களின் சபை'' என்ற பெயர்களை தேவ பிள்ளைகள் அறிந்திருந்தார்கள். மொத்தத்தில், நாம் கர்த்தருடைய சபையாய் இருந்தால் அவருடைய பெயரை தரித்துக் கொள்வோம். அவர் பெயரைத் தரிக்காத எவரும் அவருடைய சபை அல்ல.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா, இல்லையா?

நீங்கள் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவரா, இல்லையா? என்பதை நீங்கள் தரித்திருக்கும் பெயர் வெட்டவெளிச்சமாக காட்டிக் கொடுத்து விடும்.

கிறிஸ்து மீண்டும் வரும்போது, தேவ வசனங்களின்படி, அவருடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனமாகிய தமது சபையை கூட்டிக் செல்வார். அவர் நாமம் தரிக்காதிருந்தால் உங்களை அவர் புறக்கணிப்பார். ஏனெனில் நீங்கள் அவருக்கு சொந்தமானவர்கள் அல்ல என்றும், அவர் குடும்பத்தில் உள்ளவர்கள் அல்ல என்றும் அது காட்டுகிறது.

இயேசு கிறிஸ்துவே ''வழியும், சத்தியமும், ஜீவனுமாய்'' இருக்கிறார். அவர் மூலமாய் அல்லாமல் வேறு எவ்வழியிலும் பரம பிதாவினிடத்தில் செல்ல முடியாது (யோவான் 14:6).

பவுல் சொன்னதுபோல, ''அவருக்கு சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக . ஆமென்!'' (எபேசியர் 3:20,21)

# மணவாழ்வில் மனவேதனை



- பைரன் நிக்கல்ஸ்.

நிர்வாக ஆசிரியர்

பலரது திருமண வாழ்வில் ஏற்பட்டுள்ள மனவேதனைகளையும் துயரங்களையும் நாம் பரவலாக காணும்போது நம் கண்கள் குளமாகின்றன. இந்நாட்களில் விவாகரத்து கட்டுக்கடங்காமல் பெருகி வருகிறது. அதுவுமன்றி, பிரிந்தும் போகாமல், விவாகரத்தும் செய்யாமல் பெயரளவுக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் கணவன் மனைவி எண்ணிக்கையும் ஏராளம்! ஏராளம்!!

இப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலைகளில் சரியான ஆலோசனை அளிப்பதும் மிகவும் கடினமாயிருக்கிறது.

என்னதான் நடக்கிறது? இவைகள் எங்குபோய் முடியுமோ? இதில் நாம் என்ன செய்வது? பின் விளைவுகளைப் பற்றி இந்த இளைஞர்கள் கவலைப்படுவதே இல்லையா? என்ற கேள்விகள் நமது மனதைத் துளைக்கின்றன.

இந்நிலையில், திருமணம் செய்யத் துடிக்கும் இளைஞர்களுக்கு வேத வசனத்தின்படியான தக்க ஆலோசனைகளை வழங்க கிறிஸ்துவின் சபையார் முழு மூச்சுடன் செயல்படவேண்டும். அதுவுமன்றி அன்றாட குடும்ப வாழ்வில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளையும் குறித்து அவர்களுக்கு நாம் போதிக்க வேண்டிய அவசியமும் உண்டு.

சரி, திருமணத்திற்கு திட்டமிடும் வாலிபர்களுக்கு வேத வசனத்தின்படியான விளக்கங்களையும், திருமணவாழ்வின் பொறுப்பு களையும் சபையாராகிய நாம் சொல்லிக் கொடுக்க வேண்டியது அவசியம்தான். ஆயினும், இவர்களின் பெற்றோர்களுக்கும், தங்கள்

பிள்ளைகளுக்கு தக்க ஆலோசனை கொடுத்து அவர்களை வழிநடத்தும் கடமை உண்டென்பதையும் நாம் மறந்து போகலாகாது.

என்னுடைய ஆழ்ந்த அபிப்பிராயம் என்னவென்றால், கிறிஸ்தவர்களை மட்டுமே, அதுவும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களை மட்டுமே ஒவ்வொருவரும் திருமணம் செய்து கொள்ள வேண்டும். திருமண ஆலோசனையின்போது அநேக கேள்விகள் நம் மனதில் எழும்பலாம். ஆயினும் அவையெல்லாவற்றைக் காட்டிலும் மிக முக்கியமான கேள்வி ஒன்றுண்டு. அதாவது, நான் திருமணம் செய்யப்போகும் இந்த நபர், நான் பரலோகம் செல்வதற்கு உறுதுணையாய் இருப்பாரா, இல்லையா? என்ற கேள்வி முதலாவது உங்கள் மனதில் எழ வேண்டும். பிற்பாடு எல்லாம் சரியாகிவிடும் என்ற எண்ணத்தில் காலெடுத்து வைக்கலாகாது. இன்று இருவரும் சரியாயிருந்தால், தொடர்ந்து இவர்கள் ஆவிக்குரிய வகையில் வளர வாய்ப்பிருக்கிறது.

தெய்வப்பற்றுள்ள, ஒரே விசுவாச குடும்பத்தைச் சேர்ந்த தம்பதியினர்தான் ஒத்துப்போகவும், வெற்றியுள்ள இல்லறத்தை நடத்தவும் முடியும் என்று திருமண ஆலோசகர்களும் மதத் தலைவர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இல்லையென்றால் பிரச்சனைகள் எப்போதும் வந்துகொண்டே இருக்கும். ஒருவேளை வித்தியாசப்பட்ட மதத்தைச் சேர்ந்த கணவனோ மனைவியோ எந்த எதிர்ப்பையும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும், உரிமை பிரச்சனை, கருத்து வேறுபாடுகளும், முரண்பாடுகளும் மனதில் இருக்கத்தான் செய்யும். பிற்காலத்தில் இவர்களின் பிள்ளைகளின் வாழ்க்கையிலும் ஓர் குழப்பமான சூழ்நிலை (தகப்பன் மார்க்கத்தைப் பின்பற்றுவதா அல்லது தாயின் மார்க்கத்தைப் பின்பற்றுவதா) காணப்படும்.

அப்படியானால் இந்த பிரச்சனைகளை எல்லாம் தவிர்த்து நிலையான, அமைதியான நிலமையை உருவாக்க நாம் என்ன செய்யக்கூடும்?

1. மூப்பர்கள், சபை என்னும் மந்தையின் மேய்ப்பர்களாய், ஆத்துமாக்களைக் காக்க விழித்திருக்கிறவர்களானபடியால், இவர்கள் வாலிப சகோதர சகோதரிகளுக்கு திருமணத்திற்கு முன் ஆலோசனைகளை வழங்கிட வேண்டும். அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மூப்பர்கள் முன்வந்து இதனை செய்திட வேண்டும். ஆபத்தான சூழ்நிலைகள் வருவதை அறிந்த பின்னரும் பொறுப்புள்ள மூப்பர்கள் பாராமுகமாயிருக்க முடியுமா? வெள்ளம் வருமுன் அணை போடுவது நல்லது.

2. பிரசங்கிமார்கள், திருமணத்தைக் குறித்த பல்வேறு அம்சங்கள் பற்றி தேவனுடைய புத்தகம் என்ன போதிக்கிறது என்பதை மிக விளக்கமாக சபைகளில் அடிக்கடி பிரசங்கிக்க வேண்டும்.

3. வேதாகம போதகர்கள், வாலிப பிள்ளைகளின் மனதில் நன்கு பதியும் வண்ணம் திருமணம் குறித்த உபதேசங்களை கற்றுத் தர வேண்டும். ஏற்ற காலத்தில் அவர்கள் தங்களுக்கு ஏற்ற துணையை தேர்ந்தெடுக்க இது பேருதவியாயிருக்கும்.

4. திருமணத்திற்குப் பிறகு தேவ சித்தப்படி சிறப்பாய் இல்லறம் நடத்திவரும் முன்மாதிரியான தம்பதிகளை, சபையார் அனைவரும் பாராட்டி கனப்படுத்த வேண்டும்.

5. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கவும், அவர்களுக்கு முன்மாதிரியான வழிகாட்டிகளாகவும் வாழ்ந்து, கிறிஸ்தவ குடும்பத்தின் பொறுப்புகளைக் குறித்து நன்கு போதித்திட வேண்டும்.

6. வாலிப சகோதர சகோதரிகள், வேத போதனைகளுக்கும், மூப்பர்களின் ஆலோசனைகளுக்கும் விருப்பத்தோடு செவிமடுக்க முன்வர வேண்டும். நல்ல மனைவி, ஏற்ற துணை கிடைக்க தேவனிடத்தில் அனுதினமும் ஜெபிக்க வேண்டும். நல்ல குடும்பங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதமாய் மூப்பர்களும், பிரசங்கிமார்களும், போதகர்களும், சபையார் அனைவரும் திருமணம் பற்றிய தேவ ஆலோசனைகளை சத்தியத்தைச் சத்தியமாக அறிவிப்பதில் ஒன்றுபட்டு செயல்பட்டால் புதிதாய் திருமண பந்தத்தில் இணையும் இளைய தலைமுறையினருக்கு வெற்றிகரமான ஓர் அடித்தளம் அமைந்திடும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

பிரியமானவர்களே, நம் குடும்ப உறவுகள் பலப்பட கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக! பிறர் வாழ்வில் நல்ல வாழ்க்கைத் துணை கிடைக்கும்படிக்கும், வெற்றியுள்ள இல்லற வாழ்க்கையை நடத்தவும் நாம் அவர்களுக்கு உறுதுணையாயிருப்போமாக!

அநேகரின் நித்திய முடிவு மிகவும் அபாயகரமானதாக போய்க் கொண்டிருக்கிறதே !

# மனிதனுக்கு தேவன் வேண்டும்

**- ஆன்ஸில் ஜென்கின்ஸ்.**

தேவனைப்பற்றிய தவறான எண்ணம் மிகவும் அபாயகரமானது. எனது நண்பர் அவருக்குத் தெரிந்த ஒருவரிடம் நடந்த உரையாடலைக் குறித்து என்னிடம் குறிப்பிட்டார். அவர் ஒரு சமயம் ஓர் பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்த போது அவள் திடீரென குறுக்கிட்டு, ''கடவுள் என்ற ஒருவர் இல்லை! ஒருவேளை அவர் இருந்தாலும் அவர் பெண்ணாகத் தான் இருப்பார்'' என்று கூறினாளாம்.

இதுபோன்று தேவனைப்பற்றிய பல தவறான அபிப்பிராயங்கள் உலகில் காணப்படுவதற்கு காரணம் என்ன? தேவன் தம்மைக் குறித்து மனிதனுக்கு வெளிப்படுத்தாமல் இல்லை. இயற்கை என்பது தேவனைப் பற்றி அறிய உதவும் ஆரம்ப பாடம் ஆகும்! (சங்கீதம் 19:1, ரோமர் 1:19,20). வேதாகமம் என்பது தேவனைப்பற்றி அறிய நமக்குக் கிடைத்த எழுதப்பட்ட வார்த்தைகள். அவரைக் குறித்த முழுமையான, இறுதியான வெளிப்பாடுதான் மனிதனாக வந்த இயேசு! (யோவான் 5:39; 20:30,31) ஒருமுறை தமது சீஷனாகிய பிலிப்புவை நோக்கி, '' என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, 'பிதாவை எங்களுக்கு காண்பியும்' என்று நீ எப்படி சொல்லுகிறாய்?'' என்றார். (யோவான் 14:9 கொலோசெயர் 1:19; 2:3,9; எபிரெயர் 1:3)

தேவனைப் பற்றி மனிதன் சரிவர அறிந்து கொள்ளாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, மனிதன் வேண்டுமென்றே அறியாமையில் இருப்பது. தம்மைப்பற்றி மனிதன் தெளிவாக அறிந்துகொள்ள தேவன் வாய்ப்புகளை கொடுத்திருந்த போதிலும் இது தேவையற்ற, பிரயோஜனமில்லாத ஒரு விஷயம் என்று அநேகர் நினைக்கின்றனர்.

தேவனை அறிய தடையாக இருக்கும் மற்றொரு காரணம் மனிதனுடைய மேட்டிமை. தேவனைப் போற்றி துதிப்பது மட்டுமே மனிதனுடைய சரியான செயலாகும். பாட்டு, ஜெபம் முதலியவற்றால் அவரை ஆராதிப்பதன் மூலமும், தியாகத்தின் அடிப்படையிலான வாழ்க்கை முறையாலும் இதை வெளிப்படுத்தலாம். புசிப்பதிலும் குடிப்பதிலும் கூட இதை செயல்படுத்தமுடியும் (I கொரி 10:31)

தேவனைப்பற்றி அறிந்து கொள்ளாமலும், அவரை மகிமைப்படுத்தாமலும் இருப்பதன் முடிவு என்ன? ரோமர் 1-ம் அதிகாரத்தில் இரண்டு மோசமான விளைவுகள் குறிப்பிடப் பட்டுள்ளன. மனிதன் பாவத்தில் சீர் கெட்டுப்போகிறான். அவன் ஆராதனை, விக்கிரக ஆராதனையாகவும், அவனது வாழ்க்கை முறை சிற்றின்பத் திலும் சென்று விடுகிறது. பின்னர் அவன் செயல்கள் எல்லாம் தாறு மாறாகி மரணத்துக்குப் பாத்திரனாகிறான். (ரோமர் 1:28-32).

இதைவிட தேவன் எடுக்கும் நடவடிக்கை நடுங்க வைக்கும் காரியம், அப்படிப்பட்டவர்களை தேவன் ஒப்புக் கொடுப்பார் என்று பவுல் கூறுகின்றார் (ரோமர் 1:24,26,28). தேவனைப் பற்றி அறிந்து கொள்ளாதவர்களுக்கு தவிர்க்க முடியாத முடிவு ஆக்கினை. ஒருவன் வேண்டும் என்றே தேவனை அறிய மறுத்தால், தேவனும் அப்படிப் பட்டவனுக்கு அப்படியே செய்வார், மறுதலிப்பார். நாம் இதுவரை தேவனை அறியவில்லை என்றால், அவரை அறிய முயற்சி எடுப்போம். ஏனெனில் அவருக்குள் ஜீவன் (வாழ்வு) உண்டு. அது மெய்யான வாழ்வு.

பிரியமானவர்களே நாம் தேவனைப்பற்றி உண்மையிலே அறிந்திருக்கிறோமா என்பதை வேத வசனங்களின் அடிப்படையில் காண மேற்கூறிய காரணங்கள் நம்மைச் சிந்திக்க வைக்கும்.

# பிதாவின் சித்தம் செய்தல்

- கேரி சி. ஹாம்டன்,

## கிறிஸ்துவின் அதிகாரத்துக்கு ஓர் சவால் !

இயேசு தேவாலயத்தில் உலாவிக் கொண்டிருக்கையில் பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பரும் அவரை எதிர் கொண்டனர். (மாற்கு 11:27). போதிக்கவோ, தேவாலயத்தை தூய்மையாக காக்கவோ, இயேசுவுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என வெளிக்காட்டவே அவர்கள் இம்முறை வந்திருக்கிறார்கள். யூதர்களின் வாழ்வில் தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ளவே இந்த முயற்சி. எனவே அவர்கள் இயேசுவை நோக்கி, ''இவைகளை செய்கிறதற்கு அதிகாரத்தை உமக்கு கொடுத்தவர் யார்?'' என்று கேட்டார்கள்.

தம்முடைய ஒரு கேள்விக்கு பதில் சொன்னால், தாம் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்வதாக இயேசு கூறிவிட்டு அவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். 'யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தேவனால் உண்டானதா, இல்லை மனிதரால் உண்டானதா?' என்பதே அந்த கேள்வி. இப்பொழுது இந்த யூத ஆலோசனை சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ஒரு பிரச்சனை. யோவானின் ஸ்நானம் பரலோக அதிகாரத்துடன் கொடுக்கப்பட்டது என்று பதில் சொன்னால், பின்னை நீங்கள் ஏன் அவனை விசுவாசிக்க வில்லை என்று கேட்டு விடுவார். ஏனெனில் யோவானிடம் இவர்கள் ஞானஸ்நானம் பெறவுமில்லை, அவனுக்குப் பிறகு வந்த இயேசுவையும் பின்பற்றவுமில்லை. (யோவான் 1:6,7,15,32-34; 3:22-36; 10:40-42)

ஒருவேளை அவனது ஞானஸ்நானம் மனுஷனிடத்தில் இருந்து தோன்றியது தான் என்று பதில் சொன்னால், ஏற்கனவே யோவானை விசுவாசிக்கிற திரளான மக்களுடைய கோபத்துக்கு ஆளாக வேண்டி வரும். எனவே ''எங்களுக்குத் தெரியாது'' என்று கூறினர். இதன் மூலம்,

தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்களை ஏற்றுக் கொள்ள இவர்களுக்கு மனமில்லை என்பதைக் காட்டினார்கள். எனவே இயேசுவும் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்ல மாட்டேன் என்று கூறினார்.

## மனந்திரும்பிய மைந்தன்

அதன் பிறகு இரு குமாரர்களையுடைய தகப்பனைப் பற்றிய ஒரு உவமையை இயேசு கூறினார். (மத்தேயு 21:28-32). கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் இருந்த கூட்டத்தினருக்கு இந்த இரண்டு குமாரர்கள் மாதிரியாக உள்ளனர். முதல் கூட்டம் யூதருக்குள்ளிருந்த பொதுமக்களைக் குறிக்கிறது.

இந்த உவமையில் தகப்பன் தனது மூத்த குமாரனிடம் சென்று அவனை நோக்கி ''மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்'' என்றான். அவன் அன்போடு கேட்ட போதிலும், அவனோ ''மாட்டேன்'' என்றான். ஆயக்காரரும் வேசிகளும் தேவ சித்தத்தைப் புறக்கணித்தார்கள் என்பதற்கு அவர்கள் பாவ வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டு. இந்தக் குமாரனைப் போல வெளிப்படையாக தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். மூத்த மகன் பின்னர் மனந்திரும்பி தகப்பனின் திராட்சைத் தோட்ட வேலைக்கு சென்றதை போலவே, அந்த ஆயக்காரரும் வேசிகளும் யோவான் ஸ்நானனின் பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பி தேவ சித்தத்திற்கு கீழ்பணிந்தனர் (மத்தேயு 3:1-6)

இயேசு எரிகோவின் வழியே நடந்து போகையில் இதுபோல் ஆயக்காரன் ஒருவனை சந்தித்தார். அவன் பெயர் சகேயு. இவன் தன் வாழ்வில் பிறருக்கு செய்த அநியாயங்களுக் கெல்லாம் ஈடு செய்ய தீர்மானித்த போது இயேசு, '' இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே'' என்றார் (லூக்கா 19:1-10) இவ்விதமாக பொது மக்களில் பலர் தேவனுடைய வார்த்தை அறிவிக்கப்பட்டபோது மனந்திரும்பி இருக்கின்றனர்.

## தகப்பனின் விருப்பத்தை நிறைவேற்றாத மகன்

இந்த உவமையில் வரும் இளைய குமாரன், பிரதான ஆசாரியர், வேதபாரகர், மற்றும் மூப்பர்களைக் குறிக்கிறான். திராட்சைத் தோட்டத்திற்கு போய் வேலை செய்யச் சொன்னவுடன் உடனடியாக ''போகிறேன்'' என்று சொல்லி விட்டு, போகாமல் இருந்து விட்டான். இந்த பரிசேயர்களும் மற்றவரும் மதப் பெரியவர்கள் என்று தங்களை எண்ணிக் கொண்டவர்கள், தேவன் கூறியதற்கு கீழ்ப்படிய விருப்பப்படுபவர்களைப் போல காட்டிக்கொண்டார்கள். ஆயினும் தங்கள் வாழ்க்கை முறைகளில் பரம பிதாவின் விருப்பத்தை முற்றிலும் அவமதித்தார்கள் (மத்தேயு 3:7-12). 'இவர்களது மாய்மால வாழ்க்கையை இயேசு, மத்தேயு 23-ல் கடிந்து கொண்டு, கண்டனம் பண்ணினார். அமைதியான தெய்வப்பற்றுள்ளவர்கள் போல நடித்துக் கொண்டு உள்ளத்திலோ மோசமாக பாவங்களை மறைத்து வாழ்ந்தனர்.

## தங்கள் சொந்த வார்த்தையாலேயே சிக்கிக் கொண்டவர்கள்

தகப்பனின் விருப்பத்தை நிறைவேற்றியது யார்? என்ற இயேசுவின் கேள்விக்கு ''மூத்தவன்தான்'' என்று அவர்கள் பதிலளிக்க வேண்டியதாயிற்று. கர்த்தருக்கு அவர்கள் கொடுத்த பதில், ஆயக்காரர், வேசிகள், யூத ஆலோசனை சங்கத்தாரைக் காட்டிலும் மேலானவர்கள் என்பதை அவர்கள் வாயாலேயே சொல்ல வைத்து விட்டார் இயேசு.

மதப் பெரியவர்கள், பொதுமக்களுக்கு விசேஷமாக, ஆயக்காரர் -களுக்கும் வேசிகளுக்கும், தேவனுடைய சித்தத்தைக் குறித்து ஒன்றுமே தெரியாது என்று இவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு விசேஷ ஞானம் இல்லை என்று எண்ணியிருந்தனர். வேதத்தை அறியாத ஜனங்கள் என்று கூறினர். (யோவான் 7:45-49). சத்தியத்தை அறிந்திருப்பதைவிட அதற்குக் கீழ்ப்படிவது பாராட்டுக்குரியது என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

**தேவ செய்தியாளர்களை புறக்கணித்தல்**

இவைகள் எல்லாவற்றிற்கும் மத்தியில், ஆயக்காரரும், வேசிகளும் யோவான் ஒரு தீர்க்கதரிசி என்று ஏற்றுக்கொண்டனர். ''மனந்திரும்புங்கள்'' என்ற அவன் அழைப்புக்கு கவனம் செலுத்தினர். ஆனால் பக்திமான்களென்று தங்களை எண்ணிக் கொண்ட மத தலைவர்களோ இந்த தேவ அழைப்புக்கு செவிசாய்க்கவில்லை.

நீதியைக் குறித்துப் பேசும் இவர்களோ நீதிமானாகிய யோவான் ஸ்நானகனை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். இது அவர்களது மனந்திரும்பாத நிலை என்பதை இயேசு அறிந்திருந்தபடியால், தாம் தேவனால் அதிகாரம் பெற்றவர் என்பதை அவர்களிடம் சொல்லுவதில் எந்த பயனுமில்லை என்று தீர்மானித்துவிட்டார். யோவான் ஸ்நானகனை ஏற்றுக் கொள்ளாத இவர்கள் இயேசுவை எப்படி ஏற்றுக் கொள்ளுவார்கள்?

**திராட்சை தோட்டத்தில் (சபை) வேலை செய்ய நம்மையும் கர்த்தர் அழைக்கிறார்.**

மேற்கண்ட இந்த உவமை இன்றும் நமக்கு பொருந்துகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உலகில் உள்ள மக்கள் அனைவருமே மனந்திரும்ப வேண்டியவர்கள் தான். அவர்களுக்கு இந்த செய்தி நம்மால் சொல்லப் பட வேண்டும். (லூக்கா 24:46,47. I தீமோத்தேயு 2:4)

ஒருவன் நல்லவனாயிருந்தால் மட்டும் போதாது, ஒவ்வொரு -வரும் பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்தால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும். (மத்தேயு 7:21) ''இன்று போய் வேலை செய்'' என்ற நம் தகப்பனின் வார்த்தைக்கு இன்றே நாம் கீழ்ப்படிந்து செயல்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. (நீதிமொழிகள் 27:1; II கொரிந்தியர் 6:2). நமது ஆண்டவர் இயேசுதான் தேவனுடைய குமாரன் என்று நாம் விசுவாசித்து அவருடைய வார்த்தைகளுக்கு முற்றிலுமாய் கீழ்ப்படிந்திட வேண்டும். (எபிரெயர் 1:1-4) தேவன் தமது சத்தியத்தை முற்றிலுமாக நமது கைகளில் கொடுப்பதற்காகவே தமது பரிசுத்த ஆவியானவரை

இவ்வுலகிற்கு அனுப்பினார். (யோவான் 16:13) இவ்வுலகிலே தேவ பக்தியுள்ளவர்களாய் வாழவும், நித்தியஜீவனை சுதந்தரித்துக் கொள்ளவும் தேவையான சகல வழிமுறைகளையும் நாம் திட்டவட்டமாக அறிந்திருக்கிறோம்! (II பேதுரு 1:3).

இன்றே தேவ சித்தம் செய்ய நாம் முன்வருவோமா? தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிப்பாராக.

இதைக் குறித்து மேலும் விவரங்களை அறிய,

எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**சத்தியத்தின் குரல்,**

போன் : 080 - 25463507,

செல் : 98440 70763

# தேவன் ஒருவர் இருக்கிறார்

-E. கிளாட் கார்ட்னர்

உங்களைச் சுற்றிலும் உள்ள நிலம், நீர், மலைகள், குன்றுகள் மரங்கள், செடிகொடிகள், விலங்குகள், மனிதர்கள் ஆகியவற்றை சற்று உன்னிப்பாய் கவனியுங்கள். இவை அனைத்தும் நன்மைக்காகவே நிலைத்திருக்கின்றன. இவைகள் எவ்வாறு தோன்றின? வல்லமையுள்ள ஒரு ஜீவனுள்ள தேவன் இவைகளைப் படைத்திருக்க வேண்டும். அல்லது தேவன் இல்லை என்று நாத்திகன் சொல்லும் கூற்று உண்மையாயிருக்க வேண்டும். தேவன் இவைகளைப் படைக்கவில்லையென்றால் நம் உலகம் தற்செயலாய் தோன்றிவிட்டது என்று தான் அர்த்தம். இதைத் தீர்மானிப்பது சுலபம்; ஏனெனில் தேவன் இல்லை என்று மறுப்பு கூறி, எல்லாம் தற்செயலாக, விபத்தைப் போல தோன்றியவை என்று நம்புவதைப் பார்க்கிலும், தேவன் ஒருவர் இருக்கிறார் என்று விசுவாசிப்பது விவேகமான காரியம். ''தேவன் இல்லையென்று மதி கெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான்.'' (சங்கீதம் 14:1).

மனிதனும் மலைகளும் தங்களைத் தாங்களே படைக்கவில்லை. சர்வ வல்லமையுள்ள ஒருவரே இவைகளை படைத்திருக்கிறார் என்பது வெளிப்படையாக இருக்கிறது. இதற்கு நிருபணம் அவசியம் இல்லை. இவர் ''வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவன்...'' (அப்போஸ்தலர் 14:15) நாம் இயற்கையில் காண்கின்ற யாவும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்று பறைசாற்றுகின்றன. ''வானங்கள் தேவனுடைய மகிமையை **வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது**''. (சங்கீதம் 19:1)

வேதாகமத்தின் முதல் வசனமே தேவன் ஒருவர் இருக்கிறார் என்ற கருத்தில் ஆரம்பிக்கிறது. (ஆதியாகமம் 1:1)

மனிதன் தேவ சாயலில் உண்டாக்கப் பட்டபடியால் அவரை அறிந்து கொள்வது அவன் பொறுப்பு. (ஆதியாகமம் 1:27). தன்னிலும் மேலான ஒன்றைத்தான் பொதுவாக மனிதன் வணங்க முற்படுகிறான்.

சர்வ சக்தி படைத்த தேவன் ஒருவர் உண்டென்று சொல்லும் அநேகரும் கூட பல தெய்வங்களை நம்புகிறார்கள். மரத்தாலும் கல்லாலும் உண்டாக்கப்பட்ட சிலைகளுக்கு முன்பாக விழுந்து வணங்குபவர்களும் உண்டு. சிலர் மனிதர்களையே வணங்குகிறார்கள். இன்னும் சிலர் விலங்குகளையும், நதிகளையும், சூரிய சந்திர நட்சத்திரங்களையும் ஆராதிக்கிறார்கள். சாத்தானை வணங்கி சேவிக்கிறவர்களும் மனிதர்களிடையே உண்டல்லவா? வேத வசனமோ, **''உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக''** என அறிவுறுத்துகிறது. (மத்தேயு 4:10) மெய்யான ஒரே தெய்வமாகிய அவரைத்தவிர வேறு எந்த உருவத்தையோ, எந்த மனிதர்களையோ, முன்னோர்களையோ நாம் வணங்கிடலாகாது.

அந்த ஒரே நித்திய தேவன் நம்மேல் மிகவும் அன்புள்ளவராயிருக்கிறார்; அவர் நமக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் அளிக்கிறவர்; நம் அனைவரையும் சதா காலமும் பரலோகத்தில் அவரோடு வாழும்படி கொண்டுபோக விரும்புகிறவர் என்றெல்லாம் வேதாகமம் விவரிக்கிறது. **'' தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்''** (யோவான் 3:16) **''தேவன் அன்பாகவே இருக்கிறார்''**, (I யோவான் 4:8) **''....உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர் -களாயிருங்கள்''** (லூக்கா 6:36). ரோமர் 2:4ல் பவுல், **''தேவனுடைய தயவை''** குறிப்பிடுகிறார். ஒரு மனிதனுக்கு நல் நம்பிக்கையும், பாவ மன்னிப்பையும் பெற்ற புது வாழ்வை தேவன் தருகிறார். மனிதன், முற்றிலும் ஓர் புது சிருஷ்டியாகவே மாறி, ஓர் புது வாழ்வை அடையும் பாக்கியத்தைப் பெறுகிறான் (II கொரிந்தியர் 5:17)

வேதாகமம் கூறும் தேவன் எப்படிப்பட்டவர்? அவர் பரிசுத்தமுள்ளவரும், நீதியுள்ளவரும், நல்லவரும், உண்மையுள்ளவரும் அதரிசனமுள்ள ராஜாவும், பூரண சற்குணரும், எல்லாம் அறிந்தவரும், எங்கும் நிறைந்தவரும், நித்தியமானவருமாயிருக்கிறார். (I தீமோத்தேயு 1:17, யாக்கோபு 1:17, மத்தேயு 19:17, I பேதுரு 4:19, யோவான் 4:24; அப்போஸ்தலர் 10:34,35; I பேதுரு 1:16; எபிரெயர் 4:13; I கொரிந்தியர் 10:26) அவர் எல்லா மகிமைக்கும் பாத்திரமானவர். அவருக்கு முன்பாக நம்மை தாழ்த்தி அவரை வணங்குவோமாக.

தேவனை மறக்கிற எந்த ஜனமும் நித்தியமாக கெட்டுப் போவார்கள். (சங்கீதம் 9:17). புராதன ரோமர், கிரேக்கர், கல்தேயர் ராஜ்யங்கள் விசயத்தில் இது எவ்வளவு உண்மையோ, இன்றைய நவீன நாடுகள் விசயத்திலும் இது உண்மையே.

தேவன் ஒருவரே; ஆயினும் அவர் தம்மை பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூன்று நபர்களாக வெளிப்படுத்தியிருக்கிறார். (மத்தேயு 28:19 ; எபேசியர் 4:4-6).

மனிதன் தம்மைக் கண்டறிந்து மகிமைப்படுத்துவதற்காகவே அவனை படைத்து, அழகிய இவ்வுலகில் வாழும்படி செய்தார். பவுல் தேவனைக் குறித்து அத்தேனே பட்டணத்தில் பிரசங்கிக்கும் பொழுது, **''உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால்... மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி... கர்த்தராகிய தம்மை தடவியாகிலும் கண்டு பிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படி செய்தார் ''** என்று கூறினார். (அப்போஸ்தலர் 17:24,26,27). அவரை நாடித் தேடி அவருக்கு சேவை செய்வது நாம் இவ்வுலகத்தில் வாழ்வதின் நோக்கமாகும். கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் அவரிடத்தில் சேர்ந்தால், பரலோகத்தில் மிகுதியான பலனை நாம் பெற்றிட முடியும். **''விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனெனில், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்''** (எபிரெயர் 11:6)

# கிறிஸ்துவே, கிறிஸ்தவ மார்க்கத்தின் மையமாக இருக்கிறார்.

**- லியான் பார்னஸ்**

கிறிஸ்து இல்லையென்றால் கிறிஸ்தவ மார்க்கமில்லை! சபையும் இன்று இத்தனை முக்கியமாகக் கருதப்படுவதின் காரணம், கிறிஸ்துவுடன் அது கொண்டிருக்கும் உறவுதான். அவரே சபையை கட்டியவர் (மத்தேயு 16:18). அவர் தமது சொந்த இரத்தத்தினால் சபையை விலைக்கு வாங்கினார். (அப்போஸ்தலர் 20:28). அவருடைய நிறைவாகிய சரீரம் தான் சபையாக இருக்கிறது. (எபேசியர் 1:22, 23) கொலோசெயர் 1:18ல், **"அவரே சபையாகிய சரீரத்துக்கு தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி**, அவரே ஆதியும் மரித்தோரில் இருந்து எழுந்த முதற்பேறுமானவர்" என நாம் வாசிக்கிறோம். முதன்மையாயிருத்தல் என்ற இந்த வார்த்தை III யோவான் நிருபத்திலும் வருகிறது. இங்கு தியோத்திரேப்பு என்பவன் முதன்மையாயிருக்க விரும்பினான். அந்த மனப்பான்மை கண்டிக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்தவ வாழ்வின் எல்லா அம்சங்களிலும் கிறிஸ்துவே மையமாக இருந்திட வேண்டும். ஆராதனையில் கர்த்தரின் இராப் போஜன பந்தியில் கலந்து கொள்ளும்போது கிறிஸ்துவின் மரணம் அடக்கம் உயிர்த் தெழுதலை நினைவு கூருகிறோம். பாடல்கள் பாடினாலும், அது கிறிஸ்துவின் பலியினால் பெற்ற தேவகிருபையை புகழ்வதாக இருக்கிறது, ஜெபமும் கூட இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால்தான் ஏறெடுக்கப் படுகிறது. பிரசங்கமும்கூட நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவையே மையமாகக் கொண்டிருக்க வேண்டும் (எபிரெயர் 12:1). சபையின் அமைப்பைப் பாருங்கள், அதிலும் கிறிஸ்துவே தலைவராயிருக்கிறார்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உள்ள அனைவரும் கிறிஸ்துவையே நம் மாதிரியாக வைத்துச் செயல்படுவோமானால்,

சபையானது எவ்விதமான பிரிவினையுமில்லாமல் ஒன்றாக இணைந்திருக்க முடியும்! கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்பதை விட்டு விட்டு நாம் ஒருவரையொருவர் கூர்ந்து நோக்கிக் கொண்டிருப்பதால்தான் குழப்பங்கள் உருவாகின்றன. கிறிஸ்துவின் வாழ்வை கூர்ந்து நோக்கிப் பார்த்தால் அதில் ஒரு குறையும் காணப்படுவதில்லை. ஆனால் நம் வாழ்வில் குறைகள் பல உண்டு என்பது நாமறிந்ததே.

கிறிஸ்துவே மையம் என்றால் அவர் வார்த்தைகள் முக்கியமில்லையா என்று நீங்கள் கேள்வி எழுப்பலாம். அப்படியல்ல, அவருக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உண்டு (மத் 28:18) என்பதையும், அவருடைய வார்த்தைகள் தான் ஒருவனை கடைசி நாளில் நியாயம் தீர்க்கும் (யோவான் 12:48) என்பதையும் நாம் மறுக்கவில்லை. கிறிஸ்துவின் வார்த்தைகளை மதித்து நடப்பதுதான் அவருக்கு நாம் காட்டும் மரியாதை அல்லவா! ''மரணத்துக்கு ஏதுவான பாவத்துக்-கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்கு கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள் என்று அறியீர்களா?'' (ரோமர் 6:16)

கிறிஸ்துவின் மேல் நம் கவனத்தை முழுமையாக வைப்பதனால் அவரது சபையையும் அவரது வார்த்தைகளையும் நாம் குறைத்து மதிப்பிடுகிறோம் என்று பொருளல்ல. முழுமையான கீழ்ப்படிதல் மிகவும் அவசியமாயிருக்கிறது.

இனிமேல் நாம் சுவிசேஷம் அறிவிக்கச் செல்லும் போது, ''உங்கள் சபையைவிட எங்கள் சபை மேலானது'' என்று சொல்வதை விட்டு விட்டு, ''நான் செய்த எல்லாவற்றையும் ஒருமனுஷன் எனக்குச் சொன்னார், அவர் கிறிஸ்துதானோ என்று வந்து பாருங்கள்'' என்று

சொல்வோமாக. (யோவான் 4:29) இதைக் கேட்டு மனம் மாறி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் தேவ மகத்துவங்களையும் அவர் கிருபைகளையும் மட்டும் நோக்கிப் பார்ப்பார்களேயானால், பிற்காலத்தில் சில விசுவாசிகளைப் பார்த்து இடறலடைய வேண்டிய சூழ்நிலை வராது.

நாம் சேவிக்கிற கர்த்தர் பரிபூரணமானவர், அவரில் எந்த குறையும் இல்லை. ஆனால் நாமோ பூரணமானவர்களல்ல! எனவே நாம் அவரையே நமது இலட்சியமாக நோக்கிப்பார்ப்போமாக!

## சபையைப்பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்

1. புதிய ஏற்பாட்டில் நீங்கள் காணும் ஒரே சபை, "*கிறிஸ்துவின் சபை*" (ரோமர் 16:16)

2. சபைக்கு என்று ஒரு பெயர் சூட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், சபை கிறிஸ்துவுக்கு சொந்தமானது. அவரே தம் ரத்தத்தினால் விலைக்கு வாங்கினார். (அப். 20:28). ஆகவே *கிறிஸ்துவின் சபை* என்று புதிய ஏற்பாட்டில் காண்கிறோம்.

3. *கிறிஸ்துவின் சபை* என்றால் கிறிஸ்துவுக்கு சொந்தமான சபை என்று பொருள். மேலும், கிறிஸ்துவே அதற்கு தலையாக இருக்கிறார். (எபேசியர் 1:21-23) (கொலோசெயர் 1:18) (எபே. 5:23).

4. *கிறிஸ்துவின் சபைக்கு* ஒரு மனிதன் தலையாக இருக்க முடியாது. சபை எந்த மனிதனுடைய நாமத்தையும் தரித்துக்கொள்ள இயலாது. எந்த மனிதனும் கிறிஸ்துவின் சபையை ஸ்தாபித்திருக்க முடியாது.

6. கிறிஸ்து சொன்னார் "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?" (லூக்கா. 6:46)

# "அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்"

**- லீவிஸ் ஜி. ஹேறல்**

கர்த்தருடைய தூதன் யோசேப்பிடம், "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள், என்று சொன்னான், இம்மானுவேல் என்பதற்கு, "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தமாம்" (மத்தேயு 1:23)

**பரிணாமமா? படைப்பா?**

விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால், "ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகாது" என்பது நிச்சயம். இருப்பினும் பரிணாமக் கொள்கையை நம்பும் அநேகர், இந்த பூமியும் மற்ற படைப்புகள் யாவும் வெறுமையிலிருந்து திடீரென தோன்றி, பின்னர் வெகுகாலம் கழித்து ஓர் ஒழுங்கு முறையும், புத்திக்கூர்மையும் வந்து விட்டது என்கிறார்கள். ஒன்றுமில்லாமையிலிருந்து இத்தனை அண்ட சராசரங்களும் வந்திருக்கமுடியுமா? சர்வ ஞானம் படைத்த தேவனே இவைகளை படைத்தார் என்பதை ஒத்துக் கொள்ளுதலே சரியான தீர்வு!

**தேவன் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார்**

தம்மால் படைக்கப்பட்ட சிருஷ்டிகளுக்கு தேவன் தம்மை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார். தாம் யார்? தம்முடைய விருப்பம் என்ன? முறையாய் வாழ்வது எப்படி? தம்மை பிரியப் படுத்துவது எப்படி? என்ற கேள்விகளுக்கெல்லாம் உரிய விடைகளை தமது சிருஷ்டிகளுக்கு அளிக்க அவர் விரும்புவது இயற்கையன்றோ! ஆரம்பத்தில் தேவ வெளிப்பாடுகள் யாவும் வாய்மொழியாகவே வழங்கப்பட்டன. மோசேயின் காலத்தில் இவை எழுத்து வடிவம் பெற்று தீர்க்கதரிசிகளால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. இறுதியாக புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் மூலமாக, "வேதாகமம்" என்ற தேவனுடைய முழுமையான வெளிப்பாடாக பூரணவடிவம் பெற்றது.

**தமது குமாரன் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்.**

ஏற்ற சமயத்தில் தேவன் தமது குமாரனை பூமிக்கு அனுப்பி, மனுக்குலத்தின் பாவத்திற்காக மரிக்கவும் செய்தார். இவர்தான் மெய்யான தேவனுடைய தற்சொரூபமாயிருக்கிறார். ''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்'' என்று இயேசு மொழிந்தார். இந்த இயேசுதான் ''இம்மானுவேல்'' என அழைக்கப்பட்டார். அதன் பொருள் ''தேவன் நம்மோடு இருக்கிறார்'' என்பதாகும். (மத்தேயு 1:23) அவர் இப்போது தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்து இராஜாவாய் அரசாண்டு கொண்டிருக்கிறார். ஒரு ஆச்சரியம் என்ன வென்றால், இன்று கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வாசம் பண்ணுகிறவரும் அவரே! ●

## விசுவாசம்

''விசுவாசம்'' என்பது மனிதனிடத்தில் இருந்து புறப்படும் ஒரு உள்ளுணர்வு அல்ல. ''விசுவாசம் கேள்வியினால் வரும். தேவனுடைய வசனத்தினாலே வரும்'' என்று வேதம் சொல்லுகிறது. தேவனைப் பற்றியும், கிறிஸ்தவனைப் பற்றியும், வேதாகமத்தில் வெளிப்படுத்தப் படாமல், நாம் இவைகளைப் பற்றி ஒன்றும் அறிய முடியாது. ''தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள்'' என்று இயேசு சொன்னார்.

''இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' என்று இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதி இருக்கிறார்.

''தேவனுடைய வார்த்தையை நான் உட்கொண்டேன். அவைகள் எனக்கு சந்தோஷமும், இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது'' என்று எரேமியா தீர்க்கதரிசி கூறி இருக்கிறார்.

ஆம்! சத்தியம் ஒன்று தான் நம்மை உண்மையிலேயே மகிழ்விக்கும். பாவத்தின் உளையில் உழன்று தவிக்கும், பல கோடிக்கணக்கான மனிதர்கள் விடுதலை பெற்று, கிறிஸ்துவுக்குள் சுதந்திரர்களாக ஜீவிக்க வேண்டும். பாடுகள், சோதனைகள், துன்பப் புயல்கள் இவற்றில் சிக்கி நிம்மதி இழந்து வாடும் அனைவரும் கிறிஸ்துவுக்குள்ளான சமாதானத்தைப் பெற்று இவ்வுலகில் வாழ வேண்டும். எந்த பாதுகாப்பும் இல்லாமல், நம்பிக்கையற்று நடை பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனுக்குலம் நித்திய நாளுக்கான நம்பிக்கையுடன் கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியோடிருக்க வேண்டும் என்பதே எங்கள் அனுதின ஜெபமாகும். அதற்கு ஒரே வழி கிறிஸ்து! ஆம்! அவர் வழியே சத்திய வழி. அவராலன்றி ஒருவனும் மேற்கூறிய ஆசீர்வாதங்களைப் பெறமாட்டான். ஆகவே தேவனுடைய சத்திய வசனங்களைக் கேளுங்கள், விசுவாசியுங்கள், கீழ்ப்படியுங்கள்.

◆◆◆◆◆

# தமஸ்கு பட்டணம்

- G.F. ரெய்ன்ஸ்

சீரியாவின் தலைநகரான தமஸ்கு பட்டணம், உலகிலேயே மக்கள் பெருக்கம் நிறைந்த ஓர் புராதன பட்டணமாகும். தர்சு பட்டணத்து சவுல், இந்த இடத்தில் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்ட படியால், கிறிஸ்தவ வட்டாரத்திலும் இப்பட்டணம் மிகப் பிரபலமாயிற்று. (அப். 22:1-16)

பல ஆண்டுகளாக செல்வச் செழிப்பும், கல்வி அறிவும், வலிவுமிக்க பட்டணமாய் இது திகழ்ந்தது. அன்றைய ஜரிகைப் பட்டும், எஃகு போர் வாள்களும், சித்திர மர வேலைப்பாடுகளும் மிகவும் புகழ் வாய்ந்ததாக காணப்பட்டன.

நோவாவின் மகனான சேமின் குமாரன் ஆராமுக்கு பிறந்த ஊத்ஸ் என்பவன் தான் இந்த தமஸ்கு பட்டணத்தை உருவாக்கியவன் என்று யூத சரித்திர ஆசிரியரான ஜோசிபஸ் கூறுகிறார்.

இந்த தமஸ்கு பட்டணத்தில் சரித்திர புகழ் வாய்ந்த பல பகுதிகள் இன்றும் காணப்படுகின்றன. அவையாவன ஜூபிடர் கோவிலின் நுழைவாயில், இராஜ அரண்மனை, பண்டைய துருக்கி அரசர்களின் அந்தப்புரம், சவுல் தங்கியிருந்த நேர்த்தெருவு, பழைய அலங்கம், இன்னும் பல. இவற்றைக் காண ஆண்டுதோறும் எண்ணற்ற சுற்றுலாப்பயணிகள் வந்து போகின்றனர்.

ஜூபிடர் என்பது இடி மின்னல், மழை இவைகளுக்கெல்லாம் தெய்வம் என்றும், தேவர்களுக்கெல்லாம் அரசன் என்றும் பழங்கால புராணம் ஒன்று கூறுகிறது.

மக்கார்வி கூறுகையில்: "நேர்த்தெருவு என்கிற தெரு மட்டும் இன்றும் பளிச்செனத் தெரிகிறது. மற்ற தெருக்களெல்லாம் வளைந்தும் நெளிந்தும், 50 அல்லது 100 கஜத்துக்குள் கடினமான திருப்பங்களைக்

கொண்டிருக்கையில், இந்த நேர்த்தெரு மட்டும் ஏறக்குறைய ஒருமைல் தூரத்திற்கு நேராகவே இருக்கிறது'' என்கிறார்.

தமஸ்கு பட்டணத்து மதில் சுவரும் மிகவும் பிரசித்தி பெற்றது. மனம் மாறிய சவுல் உடனடியாக தமஸ்குவிலிருந்த ஜெப ஆலயங்களில் கிறிஸ்துவை குறித்து பிரசங்கித்ததைக் கண்ட யூதர்கள் எரிச்சலடைந்து அவனைக் கொலைசெய்ய திட்டமிட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

''சவுல் அதிகமாய் திடன் கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான்.

அநேக நாள் சென்ற பின்பு, யூதர்கள் அவனை கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள்.

அவர்களுடைய யோசனை சவுலுக்கு தெரிய வந்தது. அவனைக் கொலை செய்யும்படி அவர்கள் இரவும் பகலும் கோட்டை வாசல்களை காத்துக் கொண்டிருந்தார்கள்.

சீஷர்கள் இராத்திரியிலே அவனைக் கூட்டிக் கொண்டு போய், ஒரு கூடையிலே வைத்து, மதில் வழியாய் இறக்கி விட்டார்கள்'' (அப்போஸ்தலர் 9:22-25).

## புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள பாடல்கள்

1. *ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினார்கள். மத்: 26:30*
2. *துதித்துப்பாடினார்கள். அப் : 16 : 25*
3. *சங்கீதப்பாட்டு பாடினார்கள். ரோம : 15 : 9, யாக். 5 : 13*
4. *இருதயத்தில் கர்த்தரை பக்தியோடு பாடினார்கள். எபே. 5 : 19*
5. *ஆவியோடும், கருத்தோடும் புரிந்து கொள்ளுதலோடும் பாடும்படி அப்போஸ்தலன் பவுல் கூறுகின்றார். 1 கொரி , 14 : 15*

*ஆதலால், நமக்கு கிறிஸ்து கொடுத்துள்ள புது உடன்படிக்கையில் பாடும்படி கொடுத்த கட்டளையில் எங்கும் வாத்தியக் கருவிகள் இடம் பெறவில்லை.*

# உண்மையைக் கண்டறிதல்

**- மேக்ஸ் பேட்டர்சன்**

கார்ல் சாகன் என்ற அறிஞர் ஒருவர், தமது புத்தகத்தில், ''மதசம்பந்தமான கருத்துக்கள் விஞ்ஞானத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தேய்ந்து வருகின்றன. எனவே விஞ்ஞானத்திற்கு முரணான வேதகருத்துக்களை மக்களில் பலர் புறக்கணிக்கின்றனர்'' என்று எழுதியுள்ளார் (Broca's Brain பக்கம் 283)

''எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள்'' என்ற வேத வாக்கியத்திற்கு இப்படிப்பட்ட அறிவாளிகள் ஓர் பெரிய உதாரணம். இந்த அறிஞர்கள் சிறந்த கல்வி மான்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை. ஆயினும் நாம் தேவனைப்பற்றியும் வேதத்தைபற்றியும் அறிந்து கொண்ட ஆதாரபூர்வ மான தகவல்கள் இந்த அறிஞருக்கு தெரியவில்லை என்பதுதான் உண்மை. தனக்கு எல்லாமே தெரியும் என்ற மமதையாலோ அல்லது அறியாமையாலோ இந்த ஆதாரபூர்வமான உண்மைகளை ஆராய்ந்து அறியத் தவறியிருக்கிறார் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

விஞ்ஞானத்திற்கும் வேதாகமத்திற்கும் இடையே எந்த முரண்பாடுகளும் எக்காலத்திலும் இருந்தது இல்லை. பரிணாமக் கோட்பாடுகள் போன்ற சில ஆதாரமற்ற கருத்துக்கள் வேண்டுமானால் வேதாகமத்திற்கு முரணாக தோன்றியிருக்கலாம். ஆனால் திட்ட வட்டமான விஞ்ஞான உண்மைகள் என்றுமே வேதத்திற்கு துணை நிற்கின்றன. ஒருவேளை தனக்கு எல்லாமே தெரியும் என்ற நினைப்பில் தான் இந்த கார்ல் சாகன் இது குறித்து விஷயம் புரிந்தவர்களுடன் விவாதிக்க வராமலிருக்கிறார் போலும்.

வேதம் கூறும் தீர்க்கதரிசன வார்த்தைகளை விஞ்ஞானம் பொய்யென கூறவில்லை. சொல்லப்போனால், புதை பொருள் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ள விஞ்ஞானிகள் தான் வேதத்தின் தீர்க்கதரிசனங் -களையும், வேதம் கூறும் சரித்திர சான்றுகளையும் உண்மையென்று நிரூபித்து வருகிறார்கள்.

சிலருக்கு சில தகவல்கள் தெரியவில்லை என்பதினால், அவைகள் இல்லையென கூறிவிட முடியாது. திரும்பத்திரும்ப செய்து காட்ட முடிந்த ஒன்றைத்தான் விஞ்ஞானபூர்வமான ஆதாரம் என்று பொதுவாக கருதுகிறோம்.

அப்படியானால், இந்த கொள்கையை வைத்துக் கொண்டு ஜார்ஜ் வாஷிங்டன் என்ற ஒருவர் வாழ்ந்திருந்ததை எவ்வாறு நிரூபிக்க முடியும்? அல்லது இந்த கொள்கையை வைத்து, இயேசு உயிரோடு எழுந்தார் என்று எப்படி நிரூபிக்க முடியும்? இது சாத்தியமல்ல; ஏனென்றால் இந்த சம்பவங்களுக்கு விஞ்ஞான ஆதாரம் தேட முடியாது. ஆயினும் இவைகளுக்கு ஆதாரபூர்வமான வேறு சான்றுகளை நாம் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு; கிடைத்த தகவல்களை ஒன்று சேர்த்து புத்தி கூர்மையுடன் ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும். கண்ணால் கண்டுதான் எதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனெனில் சில உண்மைகளை அறிந்து கொள்ள வேறு பல வழிகளும் உண்டு. உதாரணமாக ஆபிரகாம் லிங்கன் ஒரு காலத்தில் உலகில் வாழ்ந்தார் என்பதை என் கண்ணால் கண்டு அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. இருப்பினும், அந்த சமயத்தில் வரையப்பட்ட அவரது படங்கள், அவரை நேரில் கண்ட நபர்களின் சாட்சி, அவரது வாழ்க்கைத் தடயங்கள் இவைகளை வைத்து அவர் உலகில் வாழ்ந்தது உண்மைதான் என்று நம்மால் முடிவு செய்ய முடியும்.

அதே விதமாகவே, இயேசு உயிரோடு எழுந்ததைக் கண்ட 12 விதமான கூட்டத்தாரின் சாட்சிகளை நான் வேத வசனத்தை வைத்து ஆராய்ந்து பார்த்து, அதோடு சரித்திர சான்றுகளை இணைத்துப் பார்த்து, அவரது உயிர்த் தெழுதல் உண்மை என்று என்னால் அறிந்து கொள்ள முடியும்.

இன்று பிரச்சனை என்னவென்றால், நம்மிடம் உள்ள எல்லா ஆதாரங்களையும் ஆராய்ந்து பார்க்க விருப்பமுள்ள, நேர்மையுள்ள ஆட்கள் தேவை. யாரோ சொல்லுவதைக் கேட்டுவிட்டு தன் வழியே போகின்ற நபர்களால் சத்தியத்தை அறிந்து கொள்ள இயலாது.

''சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' (யோவான் 8:32)

# வேதம் ஓர் அரிய பொக்கிஷம்

**- ஜிம் ஷீரர்**

உலகின் தலைசிறந்த புத்தகம் வேதாகமம். இது மாத்திரமே தேவனால் நமக்கு அருளப்பட்ட உன்னத வழிகாட்டி. (II தீமோத்தேயு 3:16,17). தேவனிடமிருந்து வந்த ஓர் அரிய பொக்கிஷம் இதுவே!

தேவன் எப்படிப்பட்டவர் என்பதை இது விளக்குகிறது. இயேசு எப்படிப்பட்டவர் என்றும், பரிசுத்த ஆவியானவர் எப்படிப்பட்டவர் என்றும் இது தெளிவாக கூறுகிறது. தேவனுக்கு பிரியமானவர்களாய் நடந்து கொள்வது எப்படி என்று வேதாகமம் விளக்குகிறது. இரட்சிக்கப்படுவது எவ்விதம் என்றும், கிறிஸ்தவனாக வாழ்வது எப்படியென்றும் இது விவரிக்கிறது.

சோதனைகளை மேற்கொள்ளவும், பாடுகள், தோல்விகள், வியாதிகள், சோர்வுகள் நேரிடும் சமயங்களில் அவைகளை சமாளிக்கவும் நமக்கு வழிகாட்டுகிறது. ஜெபத்திற்குரிய வழிமுறைகளையும் நாம் வேதாகமத்தில் காணலாம். சபையைக் குறித்தும் அதன் பணிகள் குறித்தும் ஏராளமான தகவல்களை நாம் இதில் காணலாம். பரலோகத்திற்குரிய நம்பிக்கையையும், நரகம் பற்றிய எச்சரிப்பையும் இது நமக்கு அளிக்கிறது. இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்ல நமக்கு ஓர் வழிகாட்டியாய் இது விளங்குகிறது.

ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் இதைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். அன்றாடம் இதை வாசித்து இதன் பொக்கிஷங்களை அநேகருக்கு எடுத்துரைக்க வேண்டும். இரவும் பகலும் இதன் தியானம் நம் வாழ்வை வளமாக்கும். உங்கள் ஆசீர்வாதத்தை இன்றே பெற்றிடுவீர்!

# வேத வசனத்தை பிரசங்கம் பண்ணு

**- ஏவன் மலோன்**

"திருவசனத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணு" என்று பவுல் கட்டளையிடுகிறார். (II தீமோத்தேயு 4:1,2) வேறு எதுவும் பிரசங்க பீடத்தைத் தீட்டுப்படுத்தி விடும். வேறு எதை பிரசங்கித்தாலும், இது பசியுள்ள ஆத்துமாக்களுக்கு குப்பையை அள்ளி ஊட்டினது போலிருக்கும். வசனத்தை பிரசங்கியாவிட்டால் நாம் கிறிஸ்துவை கனவீனப்படுத்தி, நமது சேவைக்காக காத்திருக்கும் உலகத்திற்கு நம்பிக்கை துரோகம் செய்கிறவர்களாயிருப்போம்.

இவ்விஷயத்தில் பிசாசானவன் நமது கவனத்தை திசை திருப்பிவிடுவான். மேலோட்டமான பல பிரச்சனைகளை நம் கண்களுக்கு காட்டி, வசனப் பிரசங்கமாகிய மிக முக்கியமான பணியை கிடப்பிலே போட்டு விடுவான். சரியான செய்தி பிரசங்கிக்கப்படாத பிரசங்க மேடை சீக்கிரமாய் காணாமற்போகும் என்பது நிச்சயம்.

இந்த உன்னதமான திருவசனத்தை பிரசங்கிக்க வேண்டியதின் முக்கியத்துவத்தை கவனியுங்கள். "அவர் சித்தம் கொண்டு, தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்" (யாக்கோபு 1:18)

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத் தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபிரெயர் 4:12).

"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17) "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

''இரட்சண்யமெனும் தலைச்சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்'' (எபேசியர் 6:17)

''இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தி அடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்கு சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்'' (அப்போஸ்தலர் 20:32)

''மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசியல் பிரதிநிதி, தனது பொறுப்பில் மட்டுமல்ல கருத்திலும் கூட வாக்காளர்களுக்கு கடன்பட்டிருக்கிறார். மற்றவர்களின் அபிப்பிராயத்திற்காக தனது சொந்தக்கருத்தை தியாகம் செய்பவர் மக்களுக்கு துரோகம் செய்பவராவார்'' என்று எட்மண்ட் பர்க் எனும் அரசியல் மேதை குறிப்பிடுகிறார். அதுபோலவே ஓர் சுவிசேஷ பிரசங்கியும் கூட தேவனுடைய நியாயத் தீர்ப்பையும் (மன எண்ணத்தையும்) அவரது வார்த்தைகளையும் மக்களுக்கு எடுத்துரைக்க கடனாளியாயிருக்கிறான். மக்களது அபிப்பிராயத்திற்காக இதனை தியாகம் செய்பவன் மக்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்கிறான்.

''திருவசனத்தை பிரசங்கம் பண்ணு'' என்கிற இந்த புனிதமான உத்தரவு எக்காலத்து மக்களையும் தட்டியெழுப்புகிறது பாருங்கள்!

## மாயையே

**நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும்,**

**உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு.**

**இளவயதும் வாலிபமும் மாயையே.**

(பிரசங்கி 11:10)

# அதிகாரப்பூர்வமான அளவுகோல் எது?

**- வெண்டெல் விங்க்லர்**

ஆவிக்குரிய விஷயங்களில் நாம் அனுசரித்து வரும் காரியங்களை எந்த அதிகாரத்தின் கீழ் செய்துவருகிறோம்? கீழ்க்கண்ட கேள்விகளை கவனியுங்கள்.

### பெரும்பான்மையான மக்கள் போகும் வழி அதிகாரப்பூர்வமானதா?

நிச்சயமாக இல்லை. ஏனெனில் கடந்த கால சம்பவங்களை நோக்கிப் பார்க்கையில் பெரும்பான்மை மக்கள் தவறான பாதையில் சென்றுள்ளனர். நோவா காலத்து ஜலப் பிரளயத்தில் அழிந்தவர்கள் பெரும்பான்மை மக்கள் தானே. சோதோம் கொமோரா பட்டணம் அழிக்கப்பட்டபோது பெரும் பான்மை எந்தப்பக்கம் என்று சிந்தித்துப் பாருங்கள். கேட்டுக்குப் போகிற விசாலமான வழியில் பிரவேசிக்கிற வர்கள் அநேகர் என்று இயேசு சொல்லுகிறார். (மத்தேயு 7:13,14) எனவே பெரும்பான்மை மக்கள் போகும் வழி அதிகாரபூர்வமான சரியான அளவுகோல் அல்ல.

### நம் உறவினர் போகும் பாதை அதிகாரப்பூர்வமான அளவுகோலா?

நிச்சயமாக இல்லை. அப்படியிருந்தால், ஒவ்வொரு மார்க்கத் திலும், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையும், வேதவசனங்களை வழிகாட்டியாய் ஏற்றுக் கொள்ளாத பல உறவினர்கள் நமக்கு உண்டு. இந்நிலையில் அவர்கள் அனைவரும் போகும் பாதையும் சரியானதென்று எப்படி கூற முடியும்?

### மனித கோட்பாடுகள் நம்பத்தகுந்தவையா?

இல்லை என்றே சொல்லலாம். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட வேத சத்தியங்களுக்கும் மனித கோட்பாடுகளுக்கும் ஏகப்பட்ட முரண்பாடுகள் உண்டு. மனிதனால் புகுத்தப்பட்ட பல சடங்காச்சாரங்கள் பிரயோஜனமற்றவை என்று இயேசு கூறுகிறார்.

''மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாக போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்'' (மத்தேயு 15:9) எனவே மனிதனால் உருவாக்கப்பட்ட சடங்குகள், சம்பிரதாயங்கள் நம்பகமானவை அல்ல.

**எனக்கு சரியென்று தோன்றுபவை அதிகாரபூர்வமானதா?**

நிச்சயமாக அது இல்லை. ஏனெனில், ''கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்'' என்று எரேமியா கூறுவதைக் கவனியுங்கள் (எரேமியா 10:23) மேலும், நீதிமொழிகள் 14:12ல் ''மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்'' என்று வேதம் கூறுகிறது. ஆகையால் நமக்கு சரியென்று தோன்றுபவைகளும் நம்பகமானவை அல்ல.

**கிறிஸ்து காட்டும் பாதை அதிகாரப்பூர்வமானது.**

அவர் ஒருமுறை தம் சீடர்களைப் பார்த்து ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்றார் (மத்தேயு 28:18). அவரது புதிய ஏற்பாடு பரிபூரணமான, இறுதியான, எல்லாவற்றிற்கும் போதுமான வழிகாட்டியாகத் திகழ்கிறது. (யோவான் 16:13, யூதா 3). ஆன்மீக விஷயங்களில் நாம் கடைபிடிக்கும் அனைத்து வழிமுறைகளும், அவரது வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். பேதுரு இது குறித்து, ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்'' என எச்சரிக்கிறார் (I பேதுரு 4:11)

எனக்கு அன்பானவர்களே, இன்று நீங்கள் கடைபிடித்து வரும், ஆன்மீக விஷயங்கள் புதிய ஏற்பாட்டில் எந்த புத்தகத்தில், எந்த அதிகாரத்தில், எந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது என்பதைப் பார்த்துச் செய்யுங்கள்!

# அன்பு கலந்த சத்தியம்

**- ஜோ மலோன்**

எபேசுவில் வாழ்ந்த விசுவாசிகளுக்கு பவுல் அப்போஸ்தலன் ''அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ளும்படி'' அறிவுறுத்துகிறார், (எபேசியர் 4:14-16) அன்பினால் மட்டுமே தேவ சித்தம் நிறைவேற்றப்பட முடியும். சத்தியத்திற்கும் அன்பிற்கும் ஓர் நெருங்கிய தொடர்பு உண்டு. எவ்வாறெனில், சத்தியம் வழி காட்டும், அன்போ அவ்வழியில் உந்தித்தள்ளும். இவ்விஷயத்தில் மூன்று காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது.

***1. சத்தியம் அறிவிக்கப்பட வேண்டிய ஒன்று.*** தேவனுடைய வசனம் மட்டுமே சத்தியமாய் இருக்கிறது. (யோவான் 17:17) அதை ஏற்றுக் கொள்பவர்களுக்கு மட்டுமே நித்திய மகிழ்ச்சியும் விமோசனமும் கிட்டும். பிறருக்கு அத்தியாவசியமாய் தேவைப்படுகிற இந்த சத்தியத்தை நாம் பதுக்கி வைப்பது கொடூரமான ஒரு செயல் அல்லவா? சத்தியத்தை ஏற்றுக்கொள்ள எந்த தடை வந்தாலும் அவைகளை உதறித்தள்ள வேண்டியது மிகவும் அவசியம். (மத்தேயு 10:34-38)

***2. சத்தியம், அன்போடு அறிவிக்கப்பட வேண்டிய ஒன்று.*** அறிவிக்கப்பட வேண்டியது அவசரம்தான் என்றாலும் இது அன்பு கலந்த அறிவிப்பாய் இருத்தல் வேண்டும். பிறர்மேல் உள்ள பாசத்தால், அவர்மேல் அக்கரை கொண்டு, நன்மை செய்யும் நோக்கத்தோடு இதை நாம் அறிவிக்க வேண்டும். சத்தியத்தின் அடிப்படையில் பிறரது தவறுகளைச் சுட்டிக் காட்டும் போதும் கூட சாந்தத்தோடே புத்தி சொல்ல வேண்டும். (II தீமோத்தேயு 2:25,26) தவறு செய்யாதவர்கள் இவ்வுலகில் எவரும் இல்லை என்பதை நாம் மறந்து போகக்கூடாது. (I இராஜாக்கள் 8:46)

**3. சத்தியம், தகுதியுடன் அறிவிக்கப்பட வேண்டிய ஒன்று.**

சத்தியத்தை அறிவிப்பவர்கள் சத்தியத்தின்படி நடக்கிறவர் -களாயிருக்க வேண்டும். சத்தியத்தைக் கைக்கொள்ளுதல் என்பது கிறிஸ்தவத்தின் வலிமையாய் இருக்கிறது. வெறும் வாய்ஜாலம் சத்தியத்தின் பால் மக்களை ஈர்க்காது!

''அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்கு பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதை செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது''. (I கொரிந்தியர் 13:4-8)

மேற்சொன்ன வசனங்கள் நம் வாழ்வின் அனுபவமானால், நாம் அறிவிக்கும் செய்தி திக்கெட்டும் பரவி பலன் தரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை!

## விசுவாச வீரன் தாவீது

*இஸ்ரவேல் இராஜாக்களில் ஒருவனான தாவீது தேவன் வாக்குதத்தம் பண்ணின கானான் தேசத்தை, இஸ்ரவேல் மக்கள் பெறுவதற்கு உதவியாக ராஜ்யத்தை விஸ்தரித்தான்.*

*தாவீது ஒரு அறிவுள்ள வழி நடத்துனன். இருப்பினும் அவன் வாழ்வு பாவத்தால் கறைபட்டது. உண்மையான மனந்திரும்புதலினால் தேவமன்னிப்பை பெற்றான். சரீர வளர்ச்சி குன்றியவன். தன் பிள்ளைகள் பாவத்தினாலும், தன் மகன் அப்சலோமின் கலகத்தாலும் நொறுக்கப்பட்டு போயிருப்பான். எவ்வளவு பெரிய பாவத்தை செய்தவனாக இருந்தாலும், தேவனிடத்தில் மனந்திரும்பி வரக்கூடும் என்பதற்கு ஒரு அழகிய எடுத்துக்காட்டு தாவீதுதான். ஆகவேதான் ''தேவனுடைய இருதயத்துக்கேற்றவன்'' என்று புகழப்பட்டான்.*

# மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்

**- சன்னி டேவிட்.**

**கிறிஸ்து**வானவர் இவ்வுலகை நியாயம்தீர்க்க மீண்டும் வரப்போகும் அந்த மகா நாளிலே, இதுவரை வாழ்ந்து மரித்த அனைவரும் மீண்டும் உயிர்பெற்று எழும்புவார்கள் என்பது வேதசத்தியங்களில் ஒன்றாகும். I கொரிந்தியர் 15ம் அதிகாரம், ''உயிர்த்தெழுதலின் அதிகாரம்'' என்றழைக்கப்படுகிறது. பவுல் அப்போஸ்தலன் இப்பகுதியில் பின்வருமாறு கூறுகிறார்:

''கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்று உங்களில் சிலர் எப்படி சொல்லலாம்? மரித்தோரின் உயிர்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்றால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்து சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காக பொய்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே! மரித்தோர் உயிர்த் தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திரா விட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்! கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்''. (I கொரி 15:12-19)

கிறிஸ்துவின் வருகையிலே நாமும் உயிரோடு எழுந்திருப்போம் என்பதற்கு, அவரது உயிர்த்தெழுதல் ஓர் நிரூபணமாயிருக்கிறது. (அப். 17:31). கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின பரலோகத்தின்

தேவன் நம்மையும் அவரது வல்லமையால் உயிரோடு எழுப்புவார் என்பது நிச்சயம்.

இவ்விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் பவுல் ஒரு கேள்வி கேட்கிறார்:, ''..... மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தோர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?'' (I கொரி 15:29)

இந்த வசனப்பகுதியின்மேல் பல்வேறு விவாதங்கள் நடைபெறுவதுண்டு. அன்றைய நாட்களில் ஞானஸ்நானம் பெறாமல் மரித்துப் போனவர்களுக்கு பதிலாக உயிரோடிருப்பவர்கள் ஞானஸ்நானம் பெறும் வழக்கம் இருந்ததாக சிலர் கருதுவதுண்டு. அப்படிப்பட்ட தவறான பழக்க வழக்கம் அன்று கொரிந்துவில் நடந்திருக்குமானால், அதைக் கண்டிப்பதை விட்டுவிட்டு அதை ஓர் உதாரணமாக பவுல் எடுத்துக் கூறியிருக்க மாட்டாரே. கொரிந்துவில் காணப்பட்ட பிரிவினைகளை கண்டித்த பவுல் (I கொரி 1:10-13; 3:1-4), சபையை தீட்டுப்படுத்தும் வேசித்தன பாவத்தை கண்டித்த அவர் (I கொரி 5:1), இராப்போஜனம் பற்றிய முறைகேட்டை கடிந்து கொண்ட அவர் (I கொரி 11:17-34) இந்த தவறான ஞானஸ்நான முறையை கொண்டு மேன்மையான உயிர்த்தெழுதலை விளக்கியிருக்க மாட்டாரே!

உயிர்த்தெழுதல் இல்லையென்று மறுதலிக்கிற கள்ளப் போதகர்களுக்கு சாட்டையடி கொடுப்பதற்காகவே பவுல் இந்த அதிகாரத்தை எழுதியிருக்கிறார். அவருடைய வாதம் என்னவென்றால் கிறிஸ்து உயிரோடு எழுந்தபடியால் நாமும்கூட உயிர்தெழுவோம் என்பதுவே. மரித்தோர் உயிரடைவார்கள் என்ற நம்பிக்கையின் பேரில்தான் நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம். கொரிந்து விசுவாசிகள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றவர்களாயிருந்தனர் (அப் 18:8). அவ்வாறு ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் அவர்கள் மனந்திரும்பினவர்களாய். அதாவது தங்கள் பாவ வாழ்க்கைக்கு மரித்தவர்களாயிருக்க வேண்டும். (அப் 2:38, ரோமர் 6:11) அவ்வாறு

மரித்தவர்கள்தான் ஞானஸ்நான தண்ணீராகிய கல்லறைக்குள் அடக்கம் பண்ணப்படுகிறார்கள். உயிரோடு இருப்பவர்களை யாரும் அடக்கம் செய்வதில்லையே! கிறிஸ்துவின் அடக்கத்தின் சாயலிலும் உயிர்தெழுதலின் சாயலிலும்தான் நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம். ஆக, இவர்கள் மரித்தவர்களைப் போல தண்ணீர்க்கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு உயிரோடே எழுந்தவர்களாய் இருக்கிறார்கள். (ரோமர் 6:3-5)

அதாவது, பாவத்திற்கு மரித்தவர்களாகிய (மனம் திரும்பிய) கொரிந்து மக்கள் தங்கள் புது வாழ்விற்காக ஞானஸ்நானம் பெற்ற சம்பவத்தைத்தான் பவுல் இங்கே சுட்டிக் காட்டுகிறார். கிறிஸ்து மெய்யாகவே உயிர்த்தெழாதிருந்தால் அவரது அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் சாயலில் ஞானஸ்நானம் பெறுவதில் எந்தவித அர்த்தமும் இல்லையே. எனவே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நம்பித்தான் ஆவிக்குரிய மரணமடைந்த கொரிந்தியர்கள், தங்களை ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்து புத்துயிர் அடைந்திருக்கின்றனர். இவர்களைத்தான் மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார்.

கொலோசெ பட்டணத்து விசுவாசிகளுக்கு பவுல் இதுபற்றி எழுதுகையில், ''ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின்மேல் உள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்'' என்றார். (கொலோ 2:12) அதைத் தொடர்ந்து, '' நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியில் உள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது'' என்றும் பவுல் கூறுகிறார். (கொலோ 3:1-3).

உயிரோடிருந்த கொலோசெ விசுவாசிகளைப் பார்த்து அவர் கூறுவதைக் கவனியுங்கள் : " நீங்கள் மரித்தீர்கள்". அப்படியானால் அவர்கள் எப்போது மரித்தார்கள்? - ஞானஸ்நானம் பெறும் முன்பு! அப்படியானால், இவர்களும் கூட, கொரிந்தியர்களைப்போலவும், நம் எல்லோரையும் போலவும், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெற்றவர்கள்தானே! உயிரோடிருப்பவர்களை ஒருபோதும் ஞானஸ்நானப்படுத்தாதீர்கள் (அடக்கம் பண்ணாதீர்கள்). ஆக உயிரோடிருப்பவன் வேத வாக்கியத்தின்படி ஞானஸ்நானம்பெற இயலாது. மனந்திரும்பி, தன் பாவ வாழ்விற்கு மரித்துப்போன ஒருவன்தான் ஞானஸ்நானக் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு, புது சிருஷ்டியாய் வெளியே உயிரோடு எழும்பி வருகிறான்!

---

## யார் வேதாகமத்தைப் படிக்க வேண்டும்?

| | | |
|---|---|---|
| வாலிபர் | : | எவ்வாறு வாழ்வது என்பதை கற்க |
| வயோதிகர் | : | எவ்வாறு மரிப்பது என்பதை அறிய |
| அறிவீனர் | : | ஞானத்திற்காக |
| படித்தவர் | : | தாழ்மைக்காக |
| பணக்காரர் | : | மன உருக்கத்திற்காக |
| ஏழை | : | ஆறுதலுக்காக |
| கனவு காண்பவர் | : | உண்மை நிலை அறிய |
| செயல் வீரன் | : | ஆலோசனைக்காக |
| பலவீனன் | : | பெலத்துக்காக |
| பலமுள்ளவன் | : | வழிகாட்டப்பட |
| கர்வமுள்ளவன் | : | எச்சரிக்கப்பட |
| தாழ்மையுள்ளவன் | : | உயர்த்தப்பட |
| கலக்கமடைந்திருப்பவன் | : | சமாதானத்துக்காக |
| களைப்புற்றவன் | : | இளைப்பாறுதலுக்காக |
| பாவி | : | ரட்சிப்புக்காக |
| ஐயுறவாதி | : | மனத் தெளிவடைவதற்காக |
| எல்லா கிறிஸ்தவர் | : | வழிகாட்டுதலுக்காக |

*கர்த்தாவே உமது வசனம் என் கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.*

*சங்கீதம் 119 : 105.*

# இயேசு ஏன் வந்தார்?

O.P. பெயர்ட்

இவ்வுலகிற்கு இயேசு எதற்காக வந்தார் என்பதற்கான காரணத்தை வேத வசனங்கள் பல, விவரமாக எடுத்துரைக்கின்றன. அவரை விசுவாசிக்கிறவன் எவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்பதற்காக அவர் வந்தார் (யோவான் 3:16). இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் அவர் வந்தார். (லூக்கா 19:10) நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் அவர் வந்தார் (யோவான் 10:10). மனுஷருக்கு ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தமது ஜீவனைக் கொடுக்கவும் அவர் வந்தார் (மத்தேயு 20:28). தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்க வந்தார் (மத்தேயு 1:21) போன்ற பல்வேறு பகுதிகளில் அவரது வருகையின் நோக்கம் விவரிக்கப்பட்டிருப்பினும் இங்கு நாம் பின்வரும் வேத பகுதியின் சத்தியத்தைக் கவனிப்போம்.

''பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்''(I யோவான் 3:8)

இந்த உலகத்தையும் அதிலுள்ள உயிரினங்கள் அனைத்தையும் தேவன் படைத்தார். அதன் மணிமகுடமாக மனிதகுலத்தையும் உருவாக்கினார். ''அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது''. (ஆதியாகமம் 1:31). ஆனால் இதைக் காணப் பொறுக்காத பிசாசானவன் இந்த உலகிற்குள் சோதனையைக் கொண்டு வந்து பாவத்தைக் கொட்டி விட்டான். தேவனுடைய கிரியைகளை அழிப்பதற்கென்றே பிசாசு எந்த நேரமும் அலைந்து கொண்டிருக்கிறான். அவனது செயல்களை அழிப்பதற்காகவே இயேசு வெளிப்பட்டார். தம்மை விசுவாசித்து தம்மைப் பின்பற்றும் மக்களின் வாழ்வில் பிசாசின் கிரியைகள் இயேசுவால் முறியடிக்கப்படுகின்றன. இறுதியில் பிசாசையும் அவனது

கூட்டாளிகளையும் அவர் நித்திய அக்கினியில் தள்ளப்போகும் நியாயத்தீர்ப்பின் நாளிலே அவனது கிரியைகள் முற்றிலும் ஒழிந்து போகும்.

''பாவத்தின் சம்பளம் மரணம்'' (ரோமர் 6:23) எனவேதான் '' மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு'' இயேசு மாம்ச சரீரமுடையவராய் இந்த உலகில் அவதரித்தார் (எபிரெயர் 2:14). பாவத்தின் தண்டனையிலிருந்து அவரது மரணம் நமக்கு விடுதலையைக் கொடுக்கிறது. அப்படியானால் ஒரு பாவி கிறிஸ்துவின் மரணத்துக்கு உட்பட்டு இந்த பாவ விமோசனத்தைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு? வேத வசனம் பதில் சொல்லுகிறது, கவனியுங்கள்: ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?'' (ரோமர் 6:3) '' நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராய் இருக்கிறீர்களே! ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே'' (கலாத்தியர் 3:26,27). ஆக, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்போது மட்டுமே ஒருவன் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக்கப்பட்டு, கிறிஸ்துவை தரித்துக் கொண்டு கிறிஸ்துவுக்குள் வருகிறான். இந்த ஞானஸ்நான சம்பவத்திற்கு முன்னதாக அவன் இயேசுவை விசுவாசித்து, தன் பாவ வாழ்வை விட்டு மனந்திரும்பியவனாய் இருக்க வேண்டும்.

எருசலேமின் மக்கள் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு இயேசுவை விசுவாசித்தபோது, தங்கள் பாவச் செயல்களை நினைத்து வேதனைப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து,''சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்கள். பேதுரு அவர்களை நோக்கி,''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது

பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்று சொன்னான். (அப்போஸ்தர் 2:37,38). ''அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்''

கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே நாம் இரட்சிக்கப்படுகிறோம். நாம் அவரது வார்த்தைகளை ஏற்றுக் கொள்வது தான் உண்மையான விசுவாசம் ஆகும். அவரது வார்த்தைகளை அன்றைய மக்கள் எப்படி ஏற்றுக்கொண்டார்களோ, அதேவிதமாக நாமும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். கிறிஸ்துவின் சொல்லுக்கு கீழ்ப்படியாதவர்கள் அவர்மேல் விசுவாசம் வைக்கவில்லை என்பது தான் உண்மை.

எங்கெல்லாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து கொண்டு அவரை ஏற்றுக்கொண்டு மக்கள் இரட்சிக்கப்படுகிறார்களோ, அங்கே பிசாசின் கிரியைகள் அழிக்கப்படுகின்றன. இதற்கென்றே அவர் வந்தார் !

---

## காலம்

*காத்திருப்போருக்கு*
*மிகவும் மெதுவாகச் செல்லும்*
*பயப்படுகிறவர்களுக்கு*
*வேகமாகச் செல்லும்*
*வருத்தப்படுகிறவர்களுக்கு*
*மிகவும் நீளமாக இருக்கும்*
*சந்தோஷப்படுகிறவர்களுக்கு*
*மிகக் குறுகியதாக இருக்கும்*
*ஆனால்*
*கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ*
*காலம் ஒரு நித்தியம்*

# நாம் ஏன் விசுவாசிக்கிறோம்?

**- டேவிட் டெபன்பாப்**

**விசுவாசம்** இல்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம் என்று வேதம் கூறுகிறது. ஆயினும், இன்றைய நாட்களில், விசுவாசம் என்றால் என்ன என்பதைப் பற்றித்தான் நாம் அதிகமாக வலியுறுத்துகிறோமே அல்லாமல், எதை விசுவாசிக்கவேண்டும், ஏன் விசுவாசிக்க வேண்டும் என்ற விஷயங்களை விட்டு விடுகிறோம். ''கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள், உங்களில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்'' என்று பேதுரு இவ்விஷயத்தில் நமக்கு அறிவுரை கூறுகிறார்.( I பேதுரு 3:15) எனவே ஒரு கிறிஸ்தவன், தான் எதை விசுவாசிக்கிறேன் என்றும் அதை ஏன் விசுவாசிக்கிறேன் என்றும் உறுதியாக அறிந்திருக்கவேண்டும்.

**விசுவாசத்திற்கான** ஓர் நம்பகமான ஆதாரமூலம் வேத வசனம் என்று வேதம் கூறுகிறது. '' ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17) வேறு எந்த வழியில் வந்தாலும் அது நம்பகமானது அல்ல. சிலருடைய விசுவாசம் அவர்களது முன்னோர்கள் மற்றும் பெற்றோர் மூலமாக வந்ததாக இருக்கலாம். இது காலங்காலமாக விசுவாசத்தை பகிர்ந்து கொள்வதற்கு அளிக்கப்பட்ட ஓர் அருமையான வழிமுறைதான். பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வேதத்தை கற்றுக் கொடுக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.(உபாகமம் 6:7 எபேசியர் 6:4). இந்த வழியில்தான் தீமோத்தேயுவிற்கு விசுவாசம் வந்தது (II தீமோத்தேயு 1:5). ஆயினும், பெற்றோர் சொன்னார்கள் என்பதினாலல்ல, அவைகள் வேத வாக்கியங்கள் என்பதால் விசுவாசிக்கப்பட வேண்டும்.

பவுல் இதுபற்றி தீமோத்தேயுவிடம் கூறுவதை கவனியுங்கள்: ''கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கு ஏற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவன் என்றும் உனக்குத் தெரியும். (II தீமோ 3:15) ஆக, தீமோத்தேயுவின் விசுவாசம், வேத வசனங்களின் அடிப்படையில் உருவானதாகும்.

இந்த அருமையான விசுவாசத்தை பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கு தேவன் ஓர் நல்ல வழிமுறையை வைத்திருக்கிறார். (ரோமர் 10:13-15). இவைகளை தங்களுக்கு எடுத்துரைக்கிற ஊழியக்காரர்கள் மேல் தங்கள் விசுவாசத்தை வைக்காமல், சொல்லப்படுகிற வேத வாக்கியங்களின் மேல் தங்கள் விசுவாசத்தை வைக்கவேண்டும் என்பதுவே தேவனுடைய விருப்பம். விசுவாசக் காரணி தேவ வசனம் மட்டுமே. இதற்கு பெரோயா பட்டணத்து மக்கள் ஓர் நல்ல எடுத்துக் காட்டு. அவர்கள், பவுல் சொன்னதினால் மட்டும் அவைகளை ஏற்றுக்கொள்ளாமல், அவைகள் வேதவாக்கியங்களில் உள்ளதா என்று ஆராய்ந்து பார்த்து விசுவாசித்தார்கள் அல்லவா? (அப் 17:11)

விசுவாசக் குறைவு இன்று எங்கும் காணப்படுகிறது. நாம் எதை விசுவாசிக்கிறோம், அதை ஏன் விசுவாசிக்கிறோம் என்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் நம்மை நாமே பரிசீலித்து பார்க்க வேண்டிய நேரம் இது. ''நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்.'' என்று பவுல் அறிவுறுத்துகிறார். (II கொரிந்தியர் 13:5)

'' நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்!'' (I யோவான் 5:4)

☆☆☆

# இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார்!

- டேவிட் பார்

கிறிஸ்தவர்களின் நம்பிக்கையில் இதுவும் ஒன்று. இயேசு பரமேறிய வேளையில் அப்போஸ்தவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்ததாக வேதம் கூறுகிறது. அச்சமயத்தில் வெண்மையான வஸ்திரம் தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று '' கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடமிருந்து வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்'' என்றார்கள் (அப்போஸ்தலர் 1:10,11)

இயேசுவானவர் இது குறித்து தமது சீஷர்களுக்கு அளித்த இனிய வாக்குறுதியை இன்று உலகில் வாழும் கிறிஸ்துவர்கள் அனைவரும் நம்பி அணைத்துக் கொண்டிருக்கின்றனர். இயேசு சொன்னார், ''நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்'' (யோவான் 14:1-3) ஆகவேதான், நாம் நம்பியிருக்கும் ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி (தேவகிருபை) நமக்கு போதிக்கிறது'' (தீத்து 2:13). ''அவர் வெளிப்-படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்-கிறோம்'' என்றார் யோவான். (1 யோவான் 3:2)

மனிதனால் கற்பனை செய்ய முடியாத அளவில் அவரது வருகை

மிகவும் பிரம்மாண்டமாயிருக்கும். அதன் நிகழ்ச்சிகள் அனைத்தும் எனக்குத் தெரியும் என்று ஒருவன் நினைத்தால் அது அறிவீனம். அதன் சிறப்பை சரியாய் விளக்குவதற்கு நம் மொழியில் வார்த்தைகளே கிடையாது. மனித மனம் புரிந்து கொள்ள முடியாத விசித்திர விநோதமான சம்பவமாய் அது நடைபெறவிருக்கிறது. இருப்பினும் அவரது வருகையில் சம்பவிக்கும் சில விஷயங்களை மட்டும் தேவன் நமக்கு அறிவித்திருக்கிறார். அவைகளை நாம் உறுதியாய் நம்பிச் சார்ந்து, பிறரையும் வழி நடத்த இயலும்.

***1. இயேசு மீண்டும் வரப்போகிறார்*** என்று வேதம் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறது.(அப்போஸ்தலர் 1:9-11: பிலிப்பியர் 3:20: 1தெசலோனிக்கேயர் 1:10: 4:16 எபிரெயர் 9:28 வெளிப்படுத்தின விசேஷம் 1:7) சிலருக்கு அவரது வருகையில் நம்பிக்கையில்லை. (2 பேதுரு 3:3,4) இன்னும் சிலர் நினைப்பதைப் போல தேவன் தாமதம் பண்ணுகிறவராயிராமல், நீடிய பொறுமையுள்ளவராய் காத்துக் கொண்டிருக்கிறார். எனினும் கிறிஸ்துவின் வருகை நிச்சயம் சம்பவிக்கும் என்பது உறுதி. (II பேதுரு 3:8-10).

***2. அவர் வரும் வேளையை முன்கூட்டியே அறிய இயலாது.*** இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்போது சம்பவிக்கும் என்று மனிதரில் எவருக்கும், தேவதூதருக்கும், பூமியிலிருந்தபோது நமது ஆண்டவருக்கும் கூட தெரியாது என்று வேதம் கூறுகிறது. (மத்தேயு 24:42-44; மாற்கு 13:32,33; I தெசலோனிக்கேயர் 5:1-3). அவரது வருகையின் நாளை சிலர் கணித்துக் கூறிய வேடிக்கையும் சில வேளைகளில் நடந்ததுண்டு. ஆனால் அவை யாவும் பொய்த்துப் போயின. தேவன் நியமித்துள்ள அந்த மகா நாள் எப்போது என்பது அவருக்கு மட்டுமே தெரியும். (அப்போஸ்தலதர் 17:31)

***3. அன்று, மரித்தோர் எல்லோரும் உயிரோடு எழுந்திருப்பார்கள்.*** நீதிமான்கள் மட்டும் அல்ல, அநீதிமான்களும் கூட உயிரோடு எழுந்திருப்பார்கள் என்பது வேதத்தை அறிந்தவர்களின் நம்பிக்கை.(அப்போஸ்தலர் 24:15). அதாவது நல்லவர்களானாலும்

கெட்டவர்களானாலும் அவர்கள் அனைவரும் கடைசி நாளில் உயிரடைவார்கள். யோவான் 5:28,29ல் இயேசு இதனை தெளிவாக்கியிருக்கிறார். இயேசு மீண்டும் வரும் வேளையில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள். உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் அதே சமயத்தில் மருரூபமடை -வார்கள். இந்த இருதிறத்தாரும் கர்த்தரை சந்திக்க, ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (I தெச 4:13-18; I கொரிந்தியர் 15:51-54) மேலும் இவ்வேளையில்தானே, பாவிகள் தண்டனையைப் பெறும்படிக்கு கிறிஸ்துவின் முன்பாக நிற்க வேண்டியிருக்கும் (II தெசலோனிக்கேயர் 1:7-10). மரித்தோர் அனைவரும், கிறிஸ்துவின் "பெரிய வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பாக கொண்டு வரப்பட்டு எல்லா ஜனத்திற்குமுரிய நியாயத்தீர்ப்பு நடைபெறும்" என்று வேதம் கூறுகிறது. (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-13 ; மத்தேயு 25:31-46). தண்டிக்கப்படப் போகிறோம் என்று அறிந்த பொல்லாதவர்கள் கதறி ஓலமிடும் கர்த்தரின் வருகையில் தேவ ஜனங்களோ களிகூர்ந்து மகிழுவார்கள் (I பேதுரு 4:13)

***4. வானம், பூமி அழிந்து போகும்.*** கிறிஸ்துவின் வருகையில் நாம் காண்கிற யாவும் வெந்து உருகி அழிந்து போகும். (II பேதுரு 3:10-14, வெளி 21:1) அதற்கு பதிலாக ஓர் புதிய வாசஸ்தலம்; இங்கு அல்ல, நமது ஆண்டவராகிய இயேசு நமக்காக ஓர் வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவதற்காக பரலோகத்திற்கு சென்றிருக்கிறார் அல்லவா? அங்குதான் அவரோடு கூட சதாகாலமும் இன்புற்று வாழ்ந்திருப்போம் (யோவான் 14:1-3)

***5. பூமியில் கிறிஸ்துவின் அரசாட்சி முற்றுப் பெறும்.*** பெந்தெகொஸ்தே தினத்தன்று கிறிஸ்து தமது இராஜ்யத்தை பூமியில் ஸ்தாபித்தார். அது சில சந்தர்ப்பங்களில் பரலோக இராஜ்யம் என்றும், தேவனுடைய இராஜ்யம் என்றும் அழைக்கப்படுகிறது. தம் அப்போஸ்தலரில் சிலர் மரிப்பதற்கு முன்பாகவே அந்த இராஜ்யம் வந்துவிடும் என்று அவர் முன்னுரைத்திருந்தார் (மாற்கு 9:1) அந்த இராஜ்யம் பலத்தோடு வரும் என்றும், அந்த பெலன் பரிசுத்த

ஆவியானவர் வரும் போது அப்போஸ்தலர்களுக்கு கிடைக்கும் என்றும் ஆண்டவர் கூறியிருந்தார். (அப்போஸ்தலர் 1:8) அவர் சொன்னபடியே எல்லாம் நிறைவேறியதாக அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காண்கிறோம்.

அன்று பேதுரு பிரசங்கிக்கையில், இயேசுவானவர் உயிரோடெழுந்து, தேவனுடைய கரத்தினாலே உயர்த்தப் பட்டு, அவரது வலது பாரிசத்தில் சிங்காசனத்தில் உட்கார்ந்தார் என்றும், அவர் தம்முடைய சத்துருக்கள் எல்லாரையும் தமது பாதபடியாக்கிப் போடும் வரை ஆட்சி செய்வார் என்றும் குறிப்பிடுகிறான். (அப்போஸ்தல நடபடிகள் 2:31, 34, 35) இதன் முக்கியத்துவத்தை I கொரிந்தியர் 15:23-26ல் பவுல் மிகவும் அழகாக வருணிக்கிறார்.

பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். அது கடைசி உயிர்த்தெழுதலின் நாளில் நிறைவேறும். அதன் பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் தமது இராஜ்யத்தை பிதாவின் கையில் ஒப்படைத்து விடுவார் (I கொரி 15:24)

## *வேதாகமத்தில் சொல்லப்பட்ட சில மருத்துவ ஆலோசனைகள்*

1. *கன்னிகைகளின் வளர்ச்சிக்கு திராட்சை ரசம் : சகரியா 9:17*
2. *உடல் பலவீனத்திற்கும், வயிற்றுக்கும் திராட்சை ரசம் : 1 தீமோ 5:23*
3. *வாலிபரின் வளர்ச்சிக்கு தானியம் : சகரியா 9:17*
4. *இலைக்கறியே நல்லது : நீதி மொழி 15:17*
5. *எண்ணெய், முகக்களையை உண்டு பண்ணும் : சங்கீதம் 104:15*
6. *உடல் பிளவு காயங்களை ஆற்ற அத்திப்பழ அடை : 2 இராஜா 20:7*
7. *முகக்களைக்கும், சரீர புஷ்டிக்கும் பருப்பு, காய்கறிகள் : தானியேல் 1:12-15*
8. *காயங்கள் ஆற வேண்டுமா? எண்ணெய், திராட்சை ரசம் : லூக்கா 10:30-34*
9. *அத்திப்பழ அடையும், வற்றலான திராட்சைப் பழங்களையும் சாப்பிட்டபின் அவனுக்கு உயிர் வந்தது. : 1 சாமு 30:11-12*
10. *தேனை சாப்பிடு அது நல்லது : நீதி 24: 13*
11. *மன மகிழ்ச்சியே நல்ல மருந்து : நீதி 17:22*
12. *இரட்சிக்கப்படுதலே மனமகிழ்ச்சியைத் தரும் : அப் 8:39*

# தலையில்லா உடலும் உடலில்லா தலையும்

- பேசில் ஓவர்டன்,

மனித தலையொன்று உடலின்றி அலைவதையும், தலையில்லா முண்டம் ஒன்று தனியே நடமாடுவதையும் நீங்கள் எப்போதாவது கண்டதுண்டா? இணைந்திருக்க வேண்டிய தலையும் உடலும் வெவ்வேறாக பிரிந்து நின்றால் இரண்டுமே பிழைக்க இயலாதென்பது நாமறிந்ததே.

சபை என்கிற கிறிஸ்துவின் சரீரத்திற்கு இயேசுவே தலையாக இருக்கிறார் என்று வேதவசனம் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. அப்படியிருக்க, இன்று அநேகர், தங்களுக்கு சபை வேண்டாம், இயேசு மட்டும் போதும் என்று எண்ணுகின்றனர். இது நடக்கிற காரியமா? இயேசு எங்கேயோ, அங்கே அவரது சரீரமாகிய சபையும் உண்டு. அவரது சபைக்குள் நீங்கள் இருந்தால் மாத்திரமே, அவரைத் தலையாக நீங்கள் கனப்படுத்துவீர்கள். (கொலோசெயர் 1:18)

சபையைக் குறித்து பிரசங்கிக்காத எவரும், கிறிஸ்துவை உள்ளபடியே அறிவிக்க இயலாது.

யாரேனும் கிறிஸ்துவின் அன்பைப் பற்றி பிரசங்கிப்பதாயிருந்தால், அவர் சபையை நேசித்து அதற்காக தம்மைத் தாமே தியாகம் செய்ததைக் கூறாமல் இருக்க முடியாது (எபேசியர் 5:25)

கிறிஸ்துவே இரட்சகர் என்று பிரசங்கிக்கும் ஒருவரால், அவர் சபையாகிய தமது சரீரத்துக்கு இரட்சகராயிருக்கிறார் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. (எபேசியர் 5:23).

கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றி பிரசங்கிக்கிற ஒருவர், அவரது இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட சபையைப் பற்றி பிரசங்கியாமல் இருக்க முடியுமா?

கிறிஸ்துதான் இராஜா என பிரசங்கிக்கும் ஒருவரால், அவர் தமது இராஜ்யமாகிய சபைக்கு இராஜாவாய் இருக்கிறார் என்பதை எப்படி சொல்லாமல் இருக்க முடியும்? (கொலோ 1:13,18; 3:15)

ஆகவே, சபையைக் குறித்து பிரசங்கிக்காமல், கிறிஸ்துவை மட்டும் பிரசங்கித்தல் என்பது சாத்தியமானது அல்ல! அதுபோலவே சபைக்குள் இல்லாத ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியாது! கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும் வரை, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக பிரவேசிக்க முடியாது!. (ரோமர் 6:3, 4)

## ஊக்கம் அருளும்

*ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே*
*நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே*

*வீசீரோ வான ஜோதி கதிரிங்கே*
*மேசியா எம் மணவாளனே*
*ஆசாரியரும் வான்ராஜனும்*
*ஆசீர்வதித்திடும்.*

*இத்திருச்சபையோடென்றும் என்றென்றும் தங்கிடும்*
*உம்மையே கண்டும் பின் சென்றும் ஓங்க செய்தருளும்*
*இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே*
*இன்பத்தோடுன் பாக்கியம் சூட்டுமே*
*உம்மிலே தங்கி தரிக்கவே ஊக்க மருளுமே.*

# தேவனுடைய வீட்டார்

- ஹார்வி போர்ட்டர்

சபையைப் பற்றிய பல்வேறு வருணனைகள் வேதத்தில் காணப்படுகின்றன. அது ஒரு அழகான மாளிகை என்றும் அதில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஓர் விலையேறப் பெற்ற கல்லாக இணைத்து கட்டப்படுகிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சபையானது ஓர் இராணுவம் என்றும் அதன் படைத்தளபதி கிறிஸ்து என்றும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதில் சேர்ந்து போர் செய்யும் வீரர்கள் என்றும் வேதம் கூறுகிறது. சபை என்பது கிறிஸ்துவாகிய திராட்சைச் செடியின் கொடிகள் எனவும் நாம் காண்கிறோம். இந்த உவமைகளுக்கிடையே, சபையானது ***தேவனுடைய குடும்பம்*** என்கிற ஓர் அழகான விளக்கமும் சொல்லப் பட்டுள்ளது.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்து சபையாருக்கு எழுதுகையில், ''ஆகையால் நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் **தேவனுடைய வீட்டாருமாயிருந்து** அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர் களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்துதாமே மூலைக் கல்லாயிருக்கிறார்''. (எபேசியர் 2:19,20) என்று குறிப்பிடுகிறார்.

மேலும் தீமோத்தேயுவுக்கு அவர் இதுபற்றி கூறுகையில், ''தாமதிப்பேனேயாகில், **தேவனுடைய வீட்டிலே** நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய், சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது'' என்கிறார் (I தீமோ.3:15)

நம்மில் ஒவ்வொருவருக்கும் நம்மைப் பெற்ற தாயும் தகப்பனுமுண்டு. அவர்களில்லாமல் நாம் இந்த பூவுலகில் பிறந்திருக்க முடியாது. குடும்பம் என்பது எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு தேவன் அருமையான வழிமுறைகளை வகுத்துள்ளார். அவர் காட்டும்

வழியைவிட்டு விலகி இன்று அநேக பெற்றோரும் பிள்ளைகளும் பெரும் துயரத்தில் மூழ்கியுள்ளனர். ஆயினும் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்த குடும்பங்களில், அன்பும், அரவணைப்பும், ஆறுதலும், அக்கறை உணர்வும் மேலோங்கியிருப்பதைக் காணமுடிகிறது. குடும்பத்தில் உள்ள எல்லோரும் முக்கியமானவர்களே. நம் ஒவ்வொருவருக்கும் உரிய பொறுப்புகளை நாம் மறந்து விடக் கூடாது.

சபை என்பதுவும் ஒரு குடும்பமே. எனவே நம்மில் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் நேசிக்கவும், உதவி செய்யவும், பாதுகாக்கவும், ஒன்றுபட்டு வாழவும், சேர்ந்து சிரித்து மகிழவும், சேர்ந்து அழுதிடவும் கடமைப் பட்டவர்கள். சபையிலுள்ள அனைவரும் ஒரே தகப்பனுக்கு பிறந்த பிள்ளைகள். நாமனைவரும் கிறிஸ்துவின், ஒரே இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டவர்கள். வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஓர் அற்புதமான, மேன்மையான சுதந்திரத்தை அடையப் போகும் உடன் சுதந்தரவாளிகள் நாம்.

மற்ற குடும்பங்களைப்போலவே, இந்த ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய பொறுப்புகள் உண்டு. ஒவ்வொருவரும் இந்த குடும்பத்தின் நலனுக்காகப் பாடுபட வேண்டும். பொறுப்பற்ற சோம்பேறிகளால் நாட்டிற்கும் வீட்டிற்கும் கேடுதானே. மேலும் குடும்பமென்றால் அதில் அன்பும் நம்பிக்கையும் காணப்பட வேண்டும். அன்பின் தேவன், நம் செயல்களில் காணப்பட வேண்டும். தேவன் நம்மிடத்தில் இதனை ஓர் கட்டளையாகவே சமர்ப்பித்திருக்கிறார்.

பிறரிடத்தில் அன்புகூராதவன் தேவனுக்கு உகந்தவன் அல்ல. இந்த உண்மைகள் நம்மிடையே வலியுறுத்தி கூறப்படவேண்டும்.

இவ்விதமாக நாம் ஒரு குடும்பமாக சேர்ந்து முறையாக செயல்படும் போது சொல்லொணா இன்பமும், கோடி நன்மைகளும் வந்து குவியும் என்பதில் ஐயமில்லை. நமது பூமிக்குரிய குடும்பங்கள் ஒருவேளை சிதைந்து கிடந்தாலும், தேவன் நமக்கென்று ஓர் ஆறுதலான குடும்பத்தை ஏற்பாடு செய்திருக்கிறார், கவலை வேண்டாம்!

நாம் தேடும் அனைத்து இன்பங்களையும் அள்ளித்தரும் அற்புத குடும்பம் தான் "தேவனுடைய சபை". நமக்கு நெருக்கமானவர்களை மட்டுமல்ல, அறிமுகமில்லாதவர்களையும் நேசிக்க நாம் கடமைப் -பட்டவர்கள். இத்தகைய அன்பும், ஐக்கியமும், அரவணைப்பும் ஒருங்கே அமையப்பெற்ற ஒப்பற்ற தேவனுடைய குடும்பமாய் நாம் தொடர்ந்து வாழ்வோமாக!.

## CHRISTIANITY CHANGES LIFE-STYLE

*கிறிஸ்தவ மார்க்கம், நம் ஜீவிய முறைகளை மாற்றுகிறது*

*From death to life* - *Rom 6:2,6,7; Luk 9 : 56*
*மரணத்தினின்று, ஜீவனுக்கு*

*From darkness to light* - *I Pet 2:9; II Cor 4:6; Eph 5:8*
*இருளிலிருந்து வெளிச்சத்திற்கு*

*From hatred to love* - *Rom 5 : 8*
*வெறுப்பிலிருந்து அன்புக்கு*

*From weakness to power* - *II Cor 13 : 4*
*பலவீனத்திலிருந்து பலத்துக்கு*

*From bondage to freedom* - *Col 1 : 13*
*அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரத்திற்கு*

*From sin to holiness* - *I John 1 : 7*
*பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்கு*

*From grief to joy* - *Luk 16:25*
*துயரத்திலிருந்து மகிழ்ச்சிக்கு*

*From gloom to light* - *II Cor 4:6; Matt 5:14*
*இருளிலிருந்து வெளிச்சத்திற்கு*

*From defeat to victory* - *Rev 7 : 13, 14, 17*
*தோல்வியிலிருந்து வெற்றிக்கு*

*From fear to faith* - *Heb 2 : 15*
*பயத்திலிருந்து விசுவாசத்திற்கு*

*From I can't to I can* - *Phil 4 : 13*
*முடியாது என்ற நிலையிலிருந்து முடியும் என்ற நம்பிக்கைக்கு*

*From Satan to Christ* - *II Cor 4 : 4 - 5*
*சாத்தானிடமிருந்து கிறிஸ்துவினிடத்திற்கு*

*From evil to good things* - *Romans 12:21*
*தீமையிலிருந்து நற்காரியங்களுக்கு*

*From earth to heaven* - *II Tim 4:6,7,8*
*பூமியிலிருந்து பரலோகத்திற்கு.*

# அர்த்தமுள்ள வாழ்க்கை வாழுங்கள்

- மேக்ஸி B. போரன்

ஒரு மனிதன் இவ்வுலகில் வாழ்ந்து முடித்த வாழ்க்கைபற்றி வேதம் கூறும் சுறுக்கமான விபரத்தைக் கவனியுங்கள்

''மெத்தூசலாவுடைய நாளெல்லாம் 969 வருஷம்; அவன் மரித்தான்''. இதைத்தவிர அவன் வாழ்வில் சொல்லத்தக்க வேறு எந்த விஷயமும் காணப்படுவதில்லை. அவன் அதிககாலம் உயிர் வாழ்ந்தவன் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் நாம் அவன் பெயரை நினைவில் வைத்திருக்கிறோம். ஒரு பறவை தான் பறந்து செல்லும் வான்பாதையில் எந்தச் சுவட்டையும் விட்டுச் செல்லாதது போலவே இந்த மெத்தூசலாவும் வாழ்ந்து மரித்திருக்கிறான்.

இதற்கு நேர்மாறான, இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையை சற்று கவனித்துப் பாருங்கள். அவர் பூவுலகில் மானிடனாய் வாழ்ந்தது வெறும் 33 ஆண்டுகள் தான். ஆயினும் அந்த வாழ்க்கை ஓர் மாபெரும் காலச் சுவடு. அவர் சொன்னவைகளையும் செய்தவைகளையும் விவரமாய் எடுத்துரைக்க நமது ஆயுள் போதாது.

இதுவரை யாரும் கேட்டிராத, இனிமேல் வேறொருவரால் கேட்கக் கூடாத.அற்புதமான உபதேசங்களை அவர் உலகிற்கு அளித்துச் சென்றார். அன்றைய நாட்களில் வாழ்ந்த சில மக்களுக்கு அவரது சொற்கள் சம்மட்டியால் அடித்ததுபோல் இருந்தது. ''...அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசியதில்லை'' என்று பலர் ஆச்சரியத்தில் மூழ்கினர். அன்று முதல் இன்றுவரை பல தலைமுறைகளாக இயேசுவின் வார்த்தைகள் கோடானுகோடி மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்திருக்கிறது. அவர் செய்த செயல்களோ ''விந்தையிலும் விந்தை!''.

புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களில் முழுக்க முழுக்க இயேசுவானவரின் வாழ்க்கைச் சம்பவங்களே சொல்லப்பட்டிருந்த போதிலும் கடைசியாய் இதுபற்றி யோவான் எழுதுகையில், "இயேசு செய்த வேறு அநேக காரியங்களும் உண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாது என்று எண்ணுகிறேன்" எனக் கூறி முடிக்கிறார். (யோவான் 21:25)

பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையும் அர்த்தமுள்ள, பயனுள்ள ஒன்றாக அமையட்டும்! இயேசுவைப்பற்றி பிறர் அறிந்திட உதவிடுங்கள். அவரது சொல்லும் செயலும் பிறர் வாழ்வை மாற்றியமைக்க வழி செய்திடுங்கள். அவரது அன்பும், கருணையும், பரிவும் நம் வாழ்வில் நிறைந்திருப்பதை அநேகர் காணும்படி சிறப்பாய் வாழ்ந்திடுங்கள்!

---

# இயேசு

*விண்ணிலிருந்து, மண்ணகம் வந்து*
*மனுமகன் ஆனவர் இயேசு - நம்*
*மன்னவன் ஆனவர் இயேசு*
*அன்னையுமாகி, தந்தையுமாகி*
*ஆறுதலானவர் இயேசு - நம்*
*ஆதரவானவர் இயேசு*

*மண்ணில் பிறந்து, சிலுவை சுமந்து*
*ஆலய்மானவர் இயேசு - நம்*
*ஆண்டவர் ஆனவர் இயேசு*
*கருவில் தொடங்கும், வாழ்வைத் தொடர்ந்து*
*மேய்ப்பரும் ஆனவர் இயேசு - நம்*
*மீட்பரும் ஆனவர் இயேசு*

*தீபமுமாகி, பாதையுமாகி*
*தோழனுமானவர் இயேசு - நம்*
*தேவனுமானவர் இயேசு*
*வார்த்தையுமாகி, வாழ்க்கையுமாகி*
*வெற்றியுமானவர் இயேசு - நம்*
*வேதமும் ஆனவர் இயேசு.*

# கைவிடாது காக்கும் தேவன்

**-டான் W. வாக்கர்**

"அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை;
கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.
நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்;
ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன்
சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான்
காணவில்லை" (சங்கீதம் 37:24,25)

"தேவன் நம்மைக் கைவிடாமல் காக்கிறவர்" என்பதனை நமக்கு உணர்த்தும் ஏராளமான சம்பவங்கள் பரிசுத்த வேதாகமத்தில் நிறைந்துள்ளன. மேலும் பேதுரு இது பற்றிக் குறிப்பிடுகையில் "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்" என்று அழகாக வலியுறுத்துகிறார் (I பேதுரு 5:7). எபிரெய எழுத்தாளனின் ஆறுதலான வார்த்தைகள் இதோ: "..... நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியம் கொண்டு. கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என்று சொல்லலாமே!" (எபிரெயர் 13:5-6)

சங்கீதக்காரனின் உற்சாகமூட்டும் வார்த்தைகள், கலங்கிப்போன அநேகரை தைரியப்படுத்தியிருக்கிறது. "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்" (சங் 46:1) "கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" (சங் 23:1)

சவால்கள் நிறைந்த ஓர் மாபெரும் பொறுப்பை தம் அப்போஸ்தலர்களிடம் ஒப்படைத்த இயேசுவானவர் அவர்களுக்கு

தெம்பூட்டும் விதமாக, " இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று உறுதி கூறினார். (மத்தேயு 28:20)

கேடுபாடுகள் நிறைந்த இப்பொல்லாத உலகினில் நாம் தைரியமாய் வலம் வர இந்த வேத வாக்கியங்கள் நமக்கு உத்வேகம் அளிக்கின்றன. தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு எது நடந்தாலும் அது நன்மைக்கே என்ற உறுதியான நம்பிக்கை எனக்கிருக்கு மானால், தேவனுக்கு பிரியமாய் நடப்பதையே என் வாழ்வின் குறிக்கோளாக கொண்டு செயல்படுவேன் அல்லவா? (ரோமர் 8:28) அவ்வாறு "தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால்" நமக்கு விரோதமாய் யார் எழும்பினாலும் அவர்களால் நம்மை மேற்கொள்ள முடியாது என்பது நிச்சயம்! (ரோமர் 8:31)

சகலத்தையும் காண்கிறவராகிய தேவன் தமது பிள்ளைகளின் வெற்றிக்காக சகல வசதிகளையும் செய்து வைத்திருக்கிறார் என்ற பூரணமான நம்பிக்கை நமக்கிருக்குமானால் இந்த போராட்டக்களத்தில் சோர்வுக்கு சற்றும் இடமில்லாமற் போகும் (சங்கீதம் 139, I கொரி 15:57)

அன்றாட வாழ்வில் எத்தனை நெருக்கடிகள் நம்மை சூழ்ந்து கொண்டாலும், "பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு... நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்". (எபிரெயர் 12:1)

***கைவிடாமல் காக்கும் தேவன் நமக்குண்டு!***

☆☆☆

# சொன்னபடி செய்யாவிட்டால்

-பில் மெக்பார்லேண்ட்

குஷ்டரோகியான ஒருவனை நம் ஆண்டவர் அற்புதமாக குணமாக்கின சம்பவம் ஒன்று மாற்கு சுவிசேஷத்தில் காணப்படுகிறது. (மாற்கு 1:40-45). அந்த நிர்க்கதியான மனிதன் இயேசுவண்டை வந்து, அவர் தன்னை குணமாக்க வல்லவரென்ற தன் முழு நம்பிக்கையை அறிக்கை செய்தான். ஆண்டவரோ, அவன்மேல் மனதுருகி அவனைத் தொட்டு, குணமாக்கினார். மேலும் அவர் அவனை நோக்கி, "நீ இதை ஒருவனுக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று கண்டிப்பாய் சொல்லி அனுப்பிவிட்டார்.

ஆனால் கர்த்தரின் திட்டவட்டமான எச்சரிப்பைக் கேட்டபின்பும் அவன் போய் "இந்த சங்கதி எங்கும் விளகும்படியாக பிரசித்தம் பண்ணத் தொடங்கினான்" என்று வேதம் கூறுகிறது (மாற் 1:45)

தனது ஆர்வக் கோளாறின் காரணமாகத்தான் இம்மனிதன் அவ்வாறு செய்திருக்க வேண்டும் அல்லது, கர்த்தர் சொன்ன வார்த்தைகளை அவன் வினயமாக எடுத்துக் கொள்ளவில்லையோ என்றும் தோன்றுகிறது.

எப்படியிருப்பினும், ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, கர்த்தரின் வார்த்தைகளை நாம் மீறினால் அதற்குரிய பின் விளைவுகளை ஒருபோதும் தவிர்க்க முடியாது. இந்த சம்பவத்தில் என்னவோ, பாதிப்பு நம் ஆண்டவரின் ஊழியத்துக்குத்தான்! இந்த குஷ்டரோகி போய் ஊரெல்லாம் தம்பட்டம் அடித்துவிட்டதால், அமளிதுமளி உண்டாகி, நமது ஆண்டவர் நகரத்திற்குள் சென்று உபதேசிக்க முடியாதபடிக்கு தடை உண்டாகிவிட்டது.

நாமும் கூட சில நேரங்களில் நமது ஆண்டவரின் வழிகாட்டுதலை அப்படியே பின்பற்றாமல் கவனக் குறைவாய்

இருந்துவிடுகிறோம். அல்லது ஆண்டவரின் கட்டளைகளைவிட நமது சுயபுத்திக்கும், சமயோசித நுணுக்கங்களுக்கும் முக்கியத்துவம் அளித்துவிடுகிறோம்.

கர்த்தர் தமது ஜனத்திற்கு எவற்றையெல்லாம் கட்டளையிடு -கிறாரோ அவற்றை ஒரு காரணத்தோடுதான் அறிவிக்கிறார். அவரது வழிகள் நன்மையானது, புத்திசாலித்தனமானது. அவரது விருப்பத்தை நாம் அசட்டை செய்தால், நமக்கோ அல்லது பிறருக்கோ பெருத்த பாதிப்பை உண்டுபண்ணிவிடும், ஜாக்கிரதை!

---

# இயேசு !

★ சரணென்று வந்தோர்க்கு
அரணாகி அணைக்கின்ற
நாதர் ! - இயேசு
நாதர் ! - தந்தை
இறைவனின் மகனாகி
எங்களை ஆள்கின்ற
நாதர் ! - இயேசு
நாதர் !

★ கேட்கின்ற கரங்களில்
தயவுடன் தருகின்ற
நாதர் ! - இயேசு
நாதர் ! - எண்ணிப்
பார்க்கின்ற பொழுதெலாம்
வள்ளலாய் வருகின்ற
நாதர் ! - இயேசு
நாதர் !

★ நினைக்கின்ற பொழுதினில்
நெஞ்சுக்கு மருந்தாகும்
நாதர் ! - இயேசு
நாதர் ! - பேரை
உரைக்கின்ற நாவுக்கு
உயிர்தரும் அமுதாகும்
நாதர் ! - இயேசு
நாதர் !

# சேவை செய்தலே மேன்மையானது

- டாம் கெல்டன்

பணிவிடைக்காரனாயிருக்க அநேகர் விரும்புவதில்லை. பிறருக்கு பணிவிடை செய்கிறவன் எல்லோருக்கும் கீழ்த்தரமானவன் என்பதுவே பலரது கருத்து. ஆனால் பிறர் சேவை செய்தல் ஒரு கிறிஸ்தவனின் மேலான நற்குணமாகும். ''ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவை -களையும் நோக்குவானாக'' என்று பவுல் அப்போஸ்தலன் அறிவுரை கூறுகிறார். (பிலிப்பியர் 2:3,4)

பெரும்பாலும் நமது நலன்தான் நமக்கு முக்கியமானதாக தோன்றுகிறது. சில நேரங்களில் நாம் செய்யும் பொதுச் சேவையும் கூட நமது சுய விளம்பரத்துக்காகத்தான் என்றும் தோன்றுகிறது. பிறர் நம்மைப்புகழ வேண்டும், மதிக்கவேண்டும், உயர்த்த வேண்டும் என்பதிலேயே கவனமாயிருக்கிறோம். நம்முடைய அந்தஸ்து எவ்விதத்திலும் குறைந்து போக நாம் அனுமதிப்பதில்லை.

மற்றவர்களை நாம் மிஞ்சவேண்டுமென்ற போட்டியில் அநேகரை கீழே தள்ளி விடும் நிலையும் வந்துவிடுகிறது. இயேசுகிறிஸ்து தெரிந்து கொண்ட சீஷர்களும் கூட இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. தங்களில் யார் பெரியவன் என்ற போட்டி அவர்களுக்குள் கடுமையாய் இருந்தது. இயேசு அவர்களை நோக்கி, ''உங்களில் எவனாகிலும் பெரிய வனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு பணிவிடைக் காரனாய் இருக்கக் கடவன்'' என்றார் (மத்தேயு 20:26)

அவர் சொன்னது சரியென்று அவர்கள் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. மூன்று வருடங்களுக்கு மேலாக இயேசுவுடன் உண்டு, உறங்கியும் கூட இந்த போதனையை அவர்கள் புரிந்துகொள்வது கடினமாயிருந்தது.

அவர் காட்டிக் கொடுக்கப்படும் வேளைக்கு சற்று முன்பதாக இயேசு இதனை தமது சீஷருக்கு செயல்முறையில் விளக்கிக் காட்டினார். தமது இடுப்பில் ஓர் துவாலையைக் கட்டிக் கொண்டு, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷர்களின் கால்களைக் கழுவினார். பிறகு அவர்களை நோக்கி, ''நான் உங்களுக்கு செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். .... ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல'' என்று இயேசு கூறினார் (யோவான் 13:15,16) இப்படிப்பட்ட தாழ்மையான பணிவிடையை அவர் செய்து முடித்த சற்று நேரத்தில் ''இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப் படுகிறார். தேவனும் அவரில் மகிமைப் படுகிறார்'' என்று அவர் கூறியதில் ஆச்சரியம் ஏதுமில்லை (யோவான் 13:31).

தாம் யாரென்ற உணர்வு இயேசுவுக்கு ஒருபோதும் மறக்கவில்லை. எனவேதான் அவரால் இவ்வளவு தாழ்மையாய் செயல்படமுடிந்தது. தான் தேவனுடைய பிள்ளை என்ற காரணத்தினால் அவர் தம்மைத் தாழ்த்தி பிறருக்கு பணிவிடை செய்தார் என்றால் நாமும் நம்மைத் தாழ்த்தி பிறர்சேவை செய்ய வேண்டியது நமது கடமையல்லவா? அவர் அடைந்ததுபோல மேன்மையான மகிமையை நாமும் அடைய செயல்படுவோமாக!

# வித்தியாசப்பட்ட இரு கிறிஸ்தவர்கள் தியோத்திரேப்பு, தேமேத்திரியு

-ஜேக் W. கார்டர்

யோவான் எழுதின மூன்றாம் நிருபம் மிகவும் சுவாரஸ்யமானது. காயு எனும் ஓர் அருமையான கிறிஸ்தவனுக்கு யோவான் எழுதின கடிதம் இது. இவன் யாவருக்கும் நன்மை செய்து வந்தவன். அதோடு, சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களைக் கண்டால் அவர்களை அன்புடன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை தாராளமாய்ச் செய்யும் நல் உள்ளம் படைத்தவன். யோவான் காயுவை மிகவும் புகழ்ந்து பாராட்டுகிறார்.

இதே நிருபத்தில் தியோத்திரேப்பு எனும் ஒரு விசுவாசியைப் பற்றியும் யோவான் குறிப்பிடுகிறார். அவன் நல்லவனல்ல. உள்ளூர் சபையிலே தன்னைவிட பெரியவர்கள் யாருமில்லை என்ற மமதை கொண்டவன். சபையிலுள்ளவர்கள் தனக்கு அடங்கியிருக்க வேண்டும்மென்ற வஞ்சக எண்ணம் கொண்டவன். இதற்கு இடையூறாக யார் வந்தாலும் அவர்களைத் தூக்கி எறிந்து விடுபவன். இந்தப்போக்கில் அப்போஸ்தலர்களையும் கூட அவன் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டான்.

மேலும் அவன் அப்போஸ்தலருக்கு விரோதமாக அவதூறான வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தான் என்றும் யோவான் எழுதுகிறார். ஊர் ஊராக சுற்றி அலைந்து ஊழியம் செய்து வரும் சுவிசேஷ ஊழியர்களை அவன் உபசரிக்க மறுத்ததுமல்லாமல் அவர்களை

வரவேற்று உபசரித்த மற்ற விசுவாசிகளையும் சபையிலிருந்து வெளியே தள்ளிவிட்டான்.

ஆனால் இதே சபையில் மெச்சத்தக்க வேறொரு நல்ல விசுவாசியும் இருந்தான். அவன் பெயர் தேமேத்திரியு "தேமேத்திரியு எல்லோராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல், **சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன்.** நாங்களும் சாட்சி கொடுக்கிறோம். எங்கள் சாட்சி மெய்யென்று அறிவீர்கள்" என்று யோவான் அவனைப் புகழ்ந்து பேசுகிறார் (வசனம் 12)

நம்மில் ஒவ்வொருவரும் பல சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட தியோத்திரேப்புவையும், தேமேத்திரியுவையும் பார்த்திருக்கிறோம் அல்லவா? அவனது குறுக்கு எண்ணம்தான் எனக்கு புரியாத புதிராயிருக்கிறது. மக்களின் அபிமானத்தைப் பெறுவதை விட்டுவிட்டு பதவிக்காக அலைவது எதற்காக? மக்களை ஆட்டிப்படைக்க நினைப்பவனைவிட தங்கள் மனதில் இடம் பிடிப்பவனைத்தானே மக்கள் பின்பற்றுவார்கள்?

யோவானின் இந்த வார்த்தைகளை வாசித்துப் பார்த்த பிறகு இந்த தியோத்திரேப்பு திருந்தினானோ என்னவோ தெரியவில்லை. அவன் இந்த நிருபத்தை கட்டாயம் வாசித்திருப்பான். ஏனென்றால் ஏற்கனவே யோவான் சபையாருக்கு எழுதின கடிதத்தை இடைமறித்து வாசித்து தகராறு செய்தவனாயிற்றே!

☆☆☆

# கர்த்தாவே,
# எங்கள் கண்களைத் திறந்தருளும்

-ஜே.சி.சோட்

*(2 இராஜாக்கள் 6:17)*

முன்னுரை :

1. சீரிய இராஜாவின் கைக்கு எலிசா தப்பின சம்பவம்.

2. இந்த சம்பவத்தின்போது எலிசா தனது வேலைக்காரனின் கண்கள் திறக்கப்பட ஜெபிக்கிறான். அவன் கண்கள் திறக்கப்பட்ட போது எதிரியின் பலத்தை விட கர்த்தரின் கரம் மகா பராக்கிரமம் உள்ளது என்பதை உணர்ந்தான்.

3. எலிசா கூறினார் : ''பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்'' பிறகு, ''கண்களைத் திறந்தருளும்'' என்று ஜெபித்தான்.

4. தேவனையும் அவர் சித்தத்தையும் அறியாதபடிக்கு நம் கண்கள் மூடிக் கிடக்கின்றன.

5. நம் கண்கள் திறக்கப்பட்டு ஆன்மீக காரியங்களைக் காணும்படிக்கு நாம் ஜெபிக்கவேண்டும்.

**செய்தி :**

**I. தேவ பிரசன்னத்தை அறிய நம் கண்கள் திறக்கப்பட வேண்டும்.**

A. தேவன் நமக்கு மேலாக இருக்கிறவர் (ரோ 9:5. எபேசி 4:6)

B. அவரது கைகளால் நம்மைத் தாங்குகிறார் (சங்கீதம் 37:24)

C. நமக்கு பின்புறத்திலும் இருக்கிறவர் (சங்கீதம் 139:5)

D. நமக்கு முன்பாகச் செல்கிறவர் (எபி 13:5. சங் 142)

E. நம்மைக் கைபிடித்து நடத்துகிறவர் (சங் 139 : 10)

F. அவர் நமக்குள் நிலைத்திருக்கிறவர் (I யோவான் 4:12)

G. எப்போதும் நம்மோடு கூட இருக்கிறவர் (மத்தேயு 28:20)

H. நம் நடுவில் இருக்கிறவர் (மத்தேயு 18:20)

**II தேவனுடைய வாக்குத்தங்களைப் புரிந்துகொள்ள நம் கண்கள் திறக்கப்படவேண்டும்.**

A. அவர் நமக்கு எண்ணற்ற வாக்குறுதிகளை அளித்துள்ளார் ( II பேதுரு 1:4)

B. தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து காலதாமதமாயிருக்க மாட்டார் (II பேதுரு 3:9)

C. அவர் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவர் (ரோமர் 4:21)

D. வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் (எபி 10:23)

E. கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தங்களுக்கு நாம் உடன் பங்காளிகளாய் இருக்கிறோம். (எபேசி 3:3)

F. அவரது வாக்குத்தத்தங்களில் சிலவற்றைக் காண்போம் :

1. நம் வாழ்வின் அத்தியாவசியமான தேவைகள் நமக்கு கொடுக்கப்படும் (மத்தேயு 6:33)
2. சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும். (ரோமர் 8:28)
3. ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தும் நமக்கு அருளப்படும் (எபேசியர் 1:3)

**III தேவ ஆசீர்வாதங்களை உணர, நம் கண்கள் திறக்கப்பட வேண்டும்** (எபேசி 1:3; I தீமோ 6:6-12)

A. *பி*ரச்சனைகளைப் பற்றியே நாம் எப்போதும் கவலை கொண்டிருக்கிறோம்.

B. *பு*லம்புவதே நமது வாடிக்கையாகி விட்டது.

*1. சிறுவயது முதலே இப்படித்தான்.*

*2. சோகம் தோய்ந்த குரல்*

3. *நடந்து முடிந்த கெட்டவைகளையே திரும்பத் திரும்ப பட்டியல் போடுவது.*

4. *நமது தோற்றத்திலும் நடவடிக்கையிலும் ஒரே சோகமயம் தான்*

C. ஆயினும், சந்தோஷப்பட்டு களிகூர எத்தனையோ ஆசீர்வாதங்கள் நம்மிடம் உண்டல்லவா?

D. உங்கள் ஆசீர்வாதங்களை பட்டியல் போடுங்கள்

1. ஆயுசு நாட்கள்
2. ஆரோக்கியம்
3. குடும்ப உறவு
4. செய்து வரும் தொழில்
5. சுதந்திரம்
6. வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள்
7. இரட்சிப்பு
8. ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்கள்
9. நித்திய வாழ்விற்கான ஓர் நம்பிக்கை.

E. நம்மோடிருந்து நமக்கு உதவி செய்வதாக வாக்களித்த தேவன், நமது தேவைகளை அறிந்து அவைகளை ஏற்ற சமயத்தில் அருளிச் செய்வார் என்பதில் எந்த ஐயமுமில்லை.

முடிவுரை :

1. உங்கள் கண்கள் திறந்துவிட்டதா?
2. இப்பொழுது உங்கள் பார்வையும், அணுகுமுறையும் வித்தியாசமாயிருக்கும்.
3. ஓர் புதிய பார்வையில் உலகத்தைக் காண்பது சுவாரஸ்யமான அனுபவம் அல்லவா?

# கிறிஸ்துவ மார்க்கத்திற்கு ஏற்படும் தடைகள்

- கென் டைலர்

**நோக்கம் :** நம் வாழ்வில் பாவங்களை அனுமதிப்பதால் கிறிஸ்தவ மார்க்கத்தின் வளர்ச்சியை தடைசெய்கிறோம் என்பதைக் காட்டுவது.

**I தற்பெருமை (அகந்தை)**

அ. பெருமைக்காரன் தன்னைத்தான் உயர்த்தி தேவனை தள்ளுகிறான். "பெருமை என்பது தன்னைப்பற்றிய மிதமிஞ்சிய எண்ணம் (அகராதி கூறும் பொருள்)

ஆ. நீதிமொழிகள் 6:16-19; 21:4; 16 :18,19; I பேதுரு 5:5,6

1. பெருமை, ஒரு மனிதன் தன்னை ஒரு பாவி என்று ஒத்துக் கொள்ளவோ, தேவனுக்குத் தன்னைத் தாழ்த்தி கீழ்ப்படியவோ விடாது.

2. லூக்கா 18:9-14-ஐ வாசிக்கவும்.

**II சுயநலம்**

அ. சுயநலவாதி தன்னைப்பற்றியே மிகுந்த அக்கரை உள்ளவனாயிருப்பான்

1. I கொரிந்தியர் 13:5; யாக்கோபு 4:3 பிலிப்பியர் 2:29,30

2. சுயநலமுள்ளவன் தன்னைப்பற்றியே அதிக முக்கியத்துவம் கொடுப்பதால், ஊழியக்காரனாக இருக்க முடியாது.

**III. கோபம்**

அ. கோபம் நமது கட்டுப்பாட்டை இழக்கச் செய்யும்

1. I கொரிந்தியர் 13:5; யாக்கோபு 1:19-21;
நீதிமொழிகள் 15:18; பிரசங்கி 7:9

2. கட்டுப்பாட்டை நாம் இழக்கும்போது, கிறிஸ்துவைப் போல் அல்லாமல் பிசாசைப் போல் செயல்பட வேண்டி வரும்.

**IV அடங்காத நாவு**

அ. வாயின் வார்த்தைகளுக்கு ஆக்கவும் அழிக்கவும் சக்தியுண்டு.

1. நீதிமொழிகள் 18:8; 12:18; 19:5,9; 21:23;
சங்கீதம் 19:14; யாக்கோபு 2:12; மத்தேயு 12:36,37.

2. நாம் என்ன கூறுகிறோமோ, அவைகளினால் சீரிய விளைவுகள் உண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**V. கணவன் - மனைவி சச்சரவு.**

அ. குழப்பம் மிக்க குடும்பங்களால் சமுதாயத்திற்கு ஏன் கிறிஸ்துவ மார்க்கத்திற்கே இழிவு.

1. அமெரிக்காவில் இப்படி ஓர் விளம்பரம் :

"சுமுகமான விவாகரத்திற்கு ஆகும் செலவு 125 டாலர்" என்ன மடத்தனம்!

2. ஆதியாகமம் 2:24 (இசைந்து). I பேதுரு 3:7

**VI. மனந்திரும்பாத பாவங்கள்.**

அ. நாம் மாற விரும்பாதவரை கிறிஸ்தவ மார்க்கம் தழைப்பது அரிது.

1. சங்கீதம் 66:18; ஏசாயா 59:1,2; லூக்கா 13:3-5. அப்போஸ்தலர் நடபடிகள் 2:38; 17:30.

2. அமெரிக்காவின் மிகப்பெரிய பாவம் - மக்கள் மனந்திரும்பாத நிலை.

<u>முடிவுரை:</u> நம்மில் எவருமே கிறிஸ்தவ மார்க்கத்தின் வளர்ச்சிக்கு தடையாயிருப்பதை தேவன் விரும்பமாட்டார். நம் ஜீவியத்திலும் இப்படிப்பட்ட பாவங்கள் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடும் என்று நாம் ஏன் எண்ணிப்பார்ப்பதில்லை. கிறிஸ்தவ மார்க்கம், உங்களிடமிருந்து, என்னிடமிருந்து தானே ஆரம்பம்.

# ஞானஸ்நானம் பெற ஒரு குழந்தைக்கு குறைந்தபட்ச வயது எது?

**- ஜான் தீசன்.**

''என் பிள்ளை எந்த வயதில் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்?'' என்ற கேள்வியை பல பெற்றோர்கள் கேட்பதுண்டு. நம்மில் அநேகரும் இந்த விஷயத்தைப்பற்றி பலமுறை சிந்தித்ததுமுண்டு.

எல்லா பிள்ளைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட வயதை நாம் நிர்ணயித்து சொல்லிவிட முடியாது. ஏனென்றால் இது அவர்களின் ஆத்தும இரட்சிப்பு சம்பந்தப்பட்ட விஷயமாகும். அந்தப் பிள்ளையின் மனதில் விசுவாசத்தை உண்டாக்கும் பெலன் தேவனுடைய சுவிசேஷத்திற்கு மட்டுமே உள்ளதால், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய உந்தித் தள்ளும் பொறுப்பு, தேவனுடைய கரத்திலிருக்கிறது.

**உபதேசத்தின் மூலம் தேவன் அவர்களை இழுக்கிறார்.**

இயேசு ஒருமுறை இதுபற்றி சொல்லும்போது ''என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்'' என்று குறிப்பிட்டார் (யோவான் 6:44). இது பெரியவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பொதுவானது. பரமபிதா எவனை இழுத்துக் கொள்ளுகிறாரோ அவன் மட்டுமே கிறிஸ்துவினிடத்தில் வந்து சேருகிறான் என்பதுவே இதன் கருத்து.

அப்படியானால் அவர் எதைக் கொண்டு மனிதனை இழுக்கிறார்? சுவிசேஷத்தைப் பற்றிய உபதேசமே அவரது இழுக்கும் சக்தியாய் இருக்கிறது. இயேசுவானவர் இதனை மேலும் விளக்குகையில், ''எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே;'' ஆகையால், பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்'' என்றார் (யோவான் 6:45). பிதாவின் வசனங்களுக்கு செவிகொடுத்து, கற்றுக் கொள்ளுகிறவர்கள் மட்டுமே

கிறிஸ்துவை விசுவாசித்து, அவரிடத்தில் வருகிறார்கள். இன்றைய நாட்களில் வாழும் மனிதரை இரட்சிக்க தேவன் பயன்படுத்தும் வழிமுறை இது என்று அன்றே தீர்க்கதரிசிகள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

## பிள்ளைதான் இதில் முடிவெடுக்க வேண்டும்

உங்கள் பிள்ளை, தான் ஒரு பாவியென்று நன்கு உணர்ந்து, தனக்கு கிறிஸ்துவின் மூலம் பாவமன்னிப்புத் தேவை என்று மனப்பூர்வமாக எப்போது தீர்மானிக்கிறானோ, அன்றே அவன் ஞானஸ்நானம் பெற தகுதியுள்ளவனாயிருக்கிறான். இதில் வயதுக் கணக்கு பார்க்க அவசியமில்லை. சில பிள்ளைகள், மற்ற பிள்ளைகளைவிட சற்று முன் கூட்டியே இந்தப் பக்குவத்தை எட்டிவிடுகிறார்கள். சிலருக்கு கிறிஸ்து ஏன் மரித்தார் என்பதும் அவருக்கு கீழ்ப்படிவதனால் கிடைக்கும் பலன் என்ன என்பதுவும் புரிந்து கொள்ள கொஞ்சம் தாமதமாகிறது.

பிள்ளைகளுக்காக பெற்றோர்கள் இதில் முடிவெடுக்க முடியாது. பெற்றோர்கள் அவசரப்பட்டு பிள்ளைகளை வற்புறுத்தி ஞானஸ்நானம் பெற வைத்தால், அந்த செயல் பிள்ளை செய்ததாக அல்லாமல் பெற்றோர் செய்ததாகவே கணக்கில் கொள்ளப்படும். தேவன் இழுப்பதற்கு பதிலாக பெற்றோர் பிள்ளைகளைப்பிடித்து தள்ளி விடுதல் எந்தப் பயனையும் அளிக்காது.

மாறாக, ஞானஸ்நானம் பெற விரும்பும் அந்தப் பிள்ளையிடம் கேள்விகள் கேட்டு, அவனுக்கு இந்த காரியத்தைப் பற்றிய முழு விவரங்களும் புரிந்திருக்கிறதா என்று நன்கு பரிசோதிக்கப்பட வேண்டும். சில சமயங்களில், ஞானஸ்நானம் என்பது எதற்காக என்பதை சரிவர புரிந்து கொள்ளாமல், தவறான அபிப்பிராயங்களுடன் ஞானஸ்நானம் பெற விரும்பும் பிள்ளைகளுமுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில், ஞானஸ்நானத்தை ஒத்திப் போட்டுவிட்டு அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கும் பக்குவம் பிள்ளைகளுக்கு வரும் நாள் வரை காத்திருக்கத்தான் வேண்டும்.

# வீடு என்பது வெறும் செங்கல் கட்டிடமல்ல!

தேவன் யார் என்பதை உங்கள் பிள்ளைகள் அறிந்து கொள்ளும் இடம் அது! உங்கள் மகள் ஓர் நல்ல மனைவியாகவும், தாயாகவும் உருவாகும் இடம் அது! உங்கள் மகன் ஓர் நல்ல கணவனாகவும், தகப்பனாகவும் உருவாகும் இடம் அது!

விட்டுக்கொடுத்து வாழ்வதால் கோடி நன்மை பெறும் இடம் அது!

கிறிஸ்தவ நற்பண்புகளை செயல்வடிவில் கண்டு மகிழும் இடம் அது!

உண்மைக் கிறிஸ்துவத்தின் ஒப்பற்ற பரிசோதனைக் களம் அது!

குடும்பத்தின் குதூகல வேளைகளை டெலிவிஷன் அபகரிக்கும் இடம் அது!

ஆவிக்குரிய நலனும் வளர்ச்சியும் அலட்சியம் செய்யப்படும் இடம் அது!

குடும்பத்தினர் அனைவரும் உத்தம கிறிஸ்தவர் களாயிருந்தால். இன்பம் பொங்கிவழியும் இடம் அது!

# சிரிப்பு

-வியான் கோல்

சிரிப்பென்பது மனிதனின் அன்றாட வாழ்வில் நீங்காத இடம் பெற்ற ஒன்றாகும். இதைப்பற்றி வேத வசனம் கூறுவதென்ன? காண்போம் வாருங்கள்.

நம் ஆண்டவர் இயேசு தமது மலைப் பிரசங்கத்தில் இந்த சிரிப்பைப்பற்றி குறிப்பிடுகிறார். லூக்கா 6:21ல் ''இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்'' என்றும் 25ம் வசனத்தில் மீண்டும், ''இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள்'' என்றும் தொடர்ந்து இருமுறை அவர் கூறுகிறார்.

மிருகங்களுக்கும் மனிதனுக்கும் உள்ள ஓர் பெரும் வேறுபாடுதான் இந்த சிரிப்பும், பேச்சும். சிரிப்பென்பது மகிழ்ச்சியின் ஓர் அடையாளம். சிரித்தால் பக்தி போய்விடும் என்று நினைத்து ''உம்'' என்று முகத்தைக்காட்டி வரும் மதவாதிகள் பலரும் உண்டு. நியாயமான நகைச்சுவைக்கு சிரிக்காதவர்கள் உண்மையற்றவர்கள் என்றே சொல்லலாம்.

சிரிப்பது பற்றி ஓர் அழகிய சம்பவம் சாராளின் வாழ்வில் நிகழ்ந்தது. வயது சென்ற தனக்கு ஓர் குழந்தை பிறக்கப் போகிறது என்ற வார்த்தையைக் கேட்டு அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. (ஆதியாகமம் 18:11,12). இது நடைமுறைக்கு ஒத்துவராத காரியம் என்று தோன்றியதால்தான் சாராள் சிரித்து விட்டாள். ஆயினும், குறித்த காலத்தில் தேவன் தாம் சொன்ன வாக்கை நிறைவேற்றினார். அவளுக்கு பிறந்த மகனுக்கு '' சிரிப்பு'' என்ற அர்த்தமுள்ள ''ஈசாக்கு'' என்ற பெயரை ஆபிரகாம் சூட்டினான். ஆபிரகாமும் சாராளும் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அப்பொழுது சாராள், ''தேவன் என்னை நகைக்கப் பண்ணினார்; இதைக் கேட்கிற யாவரும் என்னோடு கூட நகைப்பார்கள்'' என்றாள். (ஆதியாகமம் 21:1-6)

வெற்றிக் களிப்பில் உண்டாகும் வேறொரு வகை சிரிப்பைப் பற்றியும் வேதம் கூறுகிறது. பொல்லாதவர்களின் கைகளுக்கு தமது பிள்ளைகளை தேவன் விலக்கிக் காத்து, தீயவர்களை முற்றிலும் அவர் அழிக்கையில் நீதிமான்கள் அதைக் கண்டு மகிழ்வுடன் சிரிப்பார்கள் என்று நாம் சங்கீதம் 52:6ல் காண்கிறோம். பிரசித்திபெற்ற "மோட்ச பிரயாணம்" என்ற புத்தகத்தின் ஆசிரியர் இதை மிகவும் அழகாக வருணிக்கிறார். பரம நாட்டை நோக்கி பயணம் செய்யும் மோட்சப் பிரயாணியை, நாத்திகன் கேலி செய்து கொக்கரிப்பதாகவும், முடிவில் அந்த விசுவாசிகள் மோட்சக்கரை சேர்ந்து அவனைப் பார்த்து கை கொட்டி சிரித்து வெற்றிகீதம் பாடுவதாக அந்த புத்தகத்தில் நாம் வாசிக்க முடியும்.

சிரிப்பில் "முட்டாள் சிரிப்பு" என்ற ஒரு வகையும் உண்டு. கிறிஸ்தவ ஜீவியத்தைக் கேலிசெய்து அநேகர் சிரிக்கின்றனர். அவர்களின் சிரிப்பைக் கண்டு நாம் சோர்வடைந்தால் நாமும் அவர்களோடு சேர்ந்து குழியில் விழ நேர்ந்து விடும்.

இவ்வுலகின் சிற்றின்பங்களில் மகிழ்ச்சி காணும் மக்களின் சிரிப்பு தற்காலிகமானது. ஆனால் முடிவில் அவர்களது நிலை கண்ணீரும் கம்பலையும் தான். இவர்களுக்குத்தான் "ஐயோ" என்ற நிலை என்று இயேசு லூக்கா 6:25ல் குறிப்பிடுகிறார். உலக இன்பங்களை மட்டும் சார்ந்து வாழும் ஒருவன் "ஓர் ஆவிக்குரிய பிணம்" என்றால் மிகையாகாது (I தீமோத்தேயு 5:6)

வேதாகமத்தில் "நையாண்டி சிரிப்பும்" குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறு சொல்லியும் கேளாமற்போய் குழியில் விழும் ஒருவனைப் பார்த்து சிரிப்பு வராமல் இருக்குமா? நீதிமொழிகளின் புத்தகத்தில், தேவ ஆலோசனைகளை புறக்கணித்து தங்கள் மேல் அழிவை வருவித்துக் கொள்ளும் மக்களைப் பார்த்து ஞானம் நையாண்டி செய்து சிரிப்பதைப் போன்ற காட்சி ஒன்று வருணிக்கப் பட்டுள்ளது (நீதிமொழிகள் 1;20-27)

கிறிஸ்துவுக்காய் வாழ்பவர்கள்தான் நித்திய பேரின்பத்தையும் மகிழ்ச்சியையும் அடைந்து சுகிப்பார்கள்.

" பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்" என்று வேதம் கூறுகிறது (சங்கீதம் 2:4). " முடிவு சிரிப்பே முத்தான சிரிப்பு" என்ற முதுமொழிக்கேற்ப, தேவனே இறுதியில் சிரிக்கப் போகிறார். பொல்லாத சிறுநரிகள் இன்று தேவனுக்கு விரோதமாய் ஊளையிட்டாலும், முடிவில் அவர்கள் அழிவைக் காண்பர். தேவன் அவர்களை இகழுவார்.. எனவே " இப்போதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள்; பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள்.... அவரை அண்டிக் கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" (சங்கீதம் 2:10,12)

## ஐக்கியம்

*"கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தி யென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத் தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர். (எபே 4:1-6)*

★★★

# " இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால்"

- ராபர்ட் L. மாஸ்

II பேதுரு 1:1-11ல் 'கிறிஸ்தவ குண இலட்சணங்கள்" பற்றி மிகவும் அழகாக விளக்கப்பட்டுள்ளது. இப்பகுதியின் 3,4 வசனங்களில் தேவன் மனிதனுக்கு அருளியுள்ள அற்புதமான ஈவுகளைப் பற்றி வாசிக்க இயலும். அதாவது அவர் "தம்முடைய மகிமையினாலும் காருண்யத் -தினாலும் நம்மை அழைத்திருக்கிறார்"; "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் நமக்குத் தந்தருளியிருக்கிறார்"; "திவ்ய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும்பொருட்டு" வழிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்; அதுவுமல்லாமல், " மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் ......நமக்கு அளிக்கப்பட்டிருக் கிறது"

இப்பொழுது மனிதன் செய்ய வேண்டியதென்ன? என்பது குறித்து பேதுரு விளக்குகிறார். அதாவது நம்முடைய வாழ்வில் நாம் கூட்டிக் கொள்ள வேண்டிய பண்புகளாவன : "விசுவாசம்... தைரியம்... ஞானம்... இச்சையடக்கம்... பொறுமை.... தேவபக்தி.... சகோதர சிநேகம்... அன்பு". மேலும் இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்தால் மட்டும் போதாது. அவைகள் உங்களில் பெருக வேண்டும் என்றும் அவர் கூறுகிறதை தயவாய் கவனியுங்கள்! (வசனம் 8)

சரி, இப்படிப்பட்ட கடினமான சில கட்டுப்பாடுகளை தேவன் ஏன் நியமித்திருக்கிறார் என்று நீங்கள் கேட்கலாம். இதோ அதற்கான விடையை, பின்வரும் சில வசனங்களில் காணலாம்

முதலாவதாக, இந்த நற்பண்புகள் நம்மில் பெருகினால், நாம் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும், கனியற்றவர்களுமாய்...." இருக்க மாட்டோம். (வசனம் 8) அதாவது நாம் சோம்பேறிகளாயிராமல் நீதியின் கிரியைகளில் செயல்வீரர்களாய் திகழ்வோம்.

இரண்டாவதாக, நம்முடைய ''அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படிக்கு'' இந்த நற்பண்புகளில் பெருக வேண்டும் (வசனம் 10). அதாவது, தேவன் நம்மை அழைக்கிறார், அந்த அழைப்பை சற்றும் நழுவவிடாதபடிக்கு அதை ஏற்றுக் கொள்வதுதான் 'தெரிந்து கொள்ளுதல்' ஆகும். தேவன் எவ்வளவு வசதிகளை கொடுத்தாலும் மனிதன் ஜாக்கிரதையாயிராமற்போனால் வீழ்ச்சியடைந்து, ஜீவகிரீடத்தை இழந்துபோக நேரிடும்!.

மூன்றாவதாக, இந்த நற்பண்புகள் நம்மில் காணப்படுமானால் நாம், ''ஒருக்காலும் இடறி விழுவதில்லை'' (வசனம் 10). வீழ்ந்துவிடாமல் நம்மைத் தாங்கிப்பிடித்து நடத்தும் இந்த அற்புத ஈவுகளை தேவன் நமது நன்மைக்காகவே தந்திருக்கிறார்.

நான்காவதாக, இந்த நற்பண்புகள் நம் வாழ்வில் பெருகுமானால், அதன் காரணமாக, ''நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம்... பரிபூரணமாய் அளிக்கப்படும்'' (வசனம் 11). தேவனோடு கூட நித்திய காலமாய் பரலோகத்தில் வாழும் பாக்கியம் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. நம்மில் இந்த நற்குணங்கள் பெருகுவதற்கு இது ஓர் மேலான காரணமாயிருக்கட்டும்.

ஆம், பிரியமானவர்களே! தேவன் நம்முடைய நன்மைக்காகவே இந்த நற்பண்புகளில் பெருகச் சொல்லுகிறார். இவைகள் நம் வாழ்வின் கனியற்ற நிலைமையை மாற்றிவிடும்; தேவ அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்; நம்மை இடறிவிழாமல் பாதுகாக்கும், இறுதியில் அவரது நித்திய இராஜ்யத்திற்குள் நுழையும் பாக்கியத்தை அளிக்கும் என்பது நிச்சயம்.

★★★

# வாழ்க்கை என்னும் புத்தகத்தில் எழுதப்படாத பக்கங்கள்

**– யூலீன் ராம்ஸே**

''அந்தந்த நாளுக்கு அதினதின்பாடு போதும்'' என்று ஜீவிக்கிறீர்களா?''

அன்றன்றுள்ள காரியங்களைப் பற்றி மட்டும் கவலைப் படுபவரா நீங்கள்? சிலர் இந்தக் கலையை கற்றுக் கொள்ளுவதே இல்லை. மற்றவர்கள் தங்கள் வாழ்க்கையில் பேராபத்து ஏற்பட்டு, நிர்ப்பந்தத்தால் இதனைக் கற்றுக் கொள்ளுகின்றனர். நம்மில் அநேகர் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேல் காரியங்களைச் செயலாற்ற முடியாத பலவீனர் என்பது அவருக்குத் தெரியும். ஆகவேதான் நாளை 24 மணி நேரங்களாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறார் என்று நான் ஆச்சரியப்படுவதுண்டு. எழுதப்படாத பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகம் போன்றது என் வாழ்க்கை. அதில் தினமும் ஒரு பக்கத்தை உபயோகிக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்.

காலை எழுந்தவுடன் என் அன்றாட செயல்களை எழுதிட ஓர் பக்கம் திறந்து கிடக்கிறது. அதில் உருப்படியான சில விஷயங்களைப் பதிவு செய்வதற்கு முன் தேவ ஒத்தாசைக்காக ஜெபித்து என் நாளை நான் ஆரம்பிக்கிறேன். அந்தப் பக்கத்தில் பயனுள்ள நல்ல காரியங்கள் இடம்பெற வேண்டும். அதனுள் பிதாவின் உதவி நாடவும், அவர் கொடுத்த மற்ற நாட்களுக்கு நன்றி தெரிவிக்கவும், அவரிடத்தில் ஜெபித்து நாளை துவங்குவது மிக அவசியம்.

விடியற்காலையில் அவரை 'அப்பா பிதாவே' என்றழைத்து ஜெபிக்கையில், நான் அவர் பிள்ளையாய் இருப்பதன் சிலாக்கியத்தை எண்ணி மனம் களிக்கிறேன். மேலும் அவர் பெயருக்கு களங்கமில்லாமல் நான் வாழவேண்டுமென்ற கடமையையும் நான் உணருகிறேன்.

அவர் இந்த நாள் முழுவதும் என்னோடிருப்பார் என்ற எண்ணம் எனக்கு தெம்பூட்டுகிறது. நாள் முழுவதும் எனக்கு கிடைக்கும் வாய்ப்புகளை முறையாய் பயன்படுத்த அவர் எனக்கு உதவி செய்வார். அவசரத்தில் நழுவவிட்ட வாய்ப்புகள் எத்தனை, எத்தனை? பிறருக்கு உதவி தேவைப்படும் நேரங்களில் அதை செய்யத் தவறினால் நியாயத் தீர்ப்பின் நாளில் நம் ஆண்டவர் நம்மைக் கடிந்து கொள்வாரே! ''பசியாயிருந்தேன், எனக்கு போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலில் இருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்'' என நாம் இயேசுவின் பாராட்டுக்குரியவர்களாயிருக்க வேண்டுமே! (மத்தேயு 25:35, 36). எளியவர்களுக்கு நாம் எதைச் செய்கிறோமோ அதை இயேசுவுக்கே செய்கிறோம்.

இந்த வெற்றுப் பக்கத்தை நான் நிரப்புவதற்கு முன் ஓர் முக்கிய தீர்மானத்தைச் செய்து கொள்ளுகிறேன். நான் சந்திக்கிற நபர்களின் வாழ்வில் நான் நன்மை செய்திட வேண்டுமானால், ''மனுஷர் உங்களுக்கு எவைகளை செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' என்று இயேசு கூறியபடி நடந்து கொள்ள வேண்டும் (மத்தேயு 7:12). இந்த எண்ணத்தோடு நான் தொடர்ந்து செயல்படும்போது, காலப்போக்கில் எனது சுபாவமே அவ்விதமாய் மாறிப்போகும். பின்னர் என் வாழ்வில் சச்சரவுகளுக்கே இடமில்லாமற் போய்விடும்.

சரி, இந்த நாளின் பெரும்பகுதியில் என் குடும்பத்திற்கு உள்ளேயே, வட்டமடிக்க வேண்டியிருப்பதால், குடும்பத்தின் சமாதானம், அன்பு, ஒற்றுமை ஆகியவை சேதப்படாமல் நான் நடந்துகொள்ள

வேண்டியது அவசியம். அதற்கு, என் நாவுக்கு கடிவாளம் தேவை, குழப்பத்தில் பொறுமை தேவை, குறைகூறி புண்படுத்தாமல் அனுசரித்து நடக்கும் தன்மை தேவை. இந்த விஷயத்தில் அவரது உதவியை நான் நாடிட வேண்டும். உலகம் இன்று கிறிஸ்தவ குடும்பங்களை உன்னிப்பாய் கவனிக்கிறது; எனவே, நான் மிகுந்த ஜாக்கிரதையாய் என் பங்கை செய்திடல் வேண்டும்.

நாள் முழுவதும் நான் செய்த செயல்கள் என் வாழ்க்கைச் சுவடியின் இன்றைய பக்கத்தை நிறைத்து விட்டது. இனி அவற்றை மீண்டும் ஒருமுறை பரிசீலித்துப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். அவ்வாறு செய்தபிறகு மீண்டும் பரம தகப்பனிடம் சென்று, இந்நாள் முழுவதும் அவர் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்தி ஜெபிக்க வேண்டும். குறைகள் இருக்குமாயின் அவற்றை மேற்கொள்ள பெலன் தருமாறு அவரிடம் மன்றாடுவேன். யாரிடமாவது நான் தவறுதலாய் நடந்திருந்தால் இரவு உறங்கப் போவதற்கு முன்னர் அவர்களோடு சமரசம் அடைந்திடுவேன். ஜெபத்தின் வல்லமை அளவிட முடியாதது. ஆசீர்வாதங்களை அள்ளித்தரும் ஜெப உரிமையை நான் கைநழுவவிட்டால் என்னைவிட மதியீனன் வேறெவரும் இருக்க முடியாது.

வாழ்க்கைச் சுவடியின் ஒரு பக்கத்தை (நாளை) நிரப்ப ஆரம்பிக்கும் போதும் ஜெபத்தோடு தொடங்கி, முடிக்கும்போதும் ஜெபத்தோடு நிறைவு செய்ய வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் மட்டுமே, அப்பக்கத்தின் கடைசியில், "இனிதே முடிந்தது" என்று எழுதிட இயலும். நாளைய பொழுதும் இனிதே விடியும்!

☆☆☆

# அவள் புகழப்படுவாள்

– ஜெரில் கிளைன்

சரி, வீட்டுக்கு வந்துவிட்டேன் - இனி என்ன?

நீதி 31-ம் அதிகாரத்தில் கூறப்பட்ட ஸ்திரீ அதாவது ஒரு தகுதியுள்ள மேலாளரைப் (Manager) பார்ப்போம்.

உங்கள் வேதாகமத்தை திறந்து, அந்த நபரின் உள்ளான மற்றும், புறம்பான மனுஷனின், செயல்களை குறிப்பிடும் வார்த்தைகளைக் கோடிட்டு வைத்துக்கொள்ளுங்கள்.

அவள் நன்மையையே செய்கிறாள், கொண்டு வருகிறாள், வேலை செய்கிறாள், படியளக்கிறாள், வாங்குகிறாள், நாட்டுகிறாள், பலப்படுத்துகிறாள், அறிந்திருக்கிறாள், கைகளை வைக்கிறாள், கரங்களை நீட்டுகிறாள், பயப்படாள், உண்டு பண்ணுகிறாள், பேர் பெற்றவளாய் இருக்கிறாள், ஒப்புவிக்கிறாள், மகிழுகிறாள், வாயைத் திறக்கிறாள், கண்ணோக்கமாயிருக்கிறாள்.

இங்கே, ஒரு கனி கொடுக்கின்ற, நோக்கத்தோடு செயல்படுகிற, திருப்தியுள்ள ஸ்திரீயைப் பார்க்கிறோம். அவள் அநேக காரியங்களைச் செய்வதில் சுறுசுறுப்பாயிருக்கிறாள். எல்லாமே வீட்டிலிருந்து கொண்டே, வீட்டை நிர்வகிக்கும் காரியங்கள்.

முதலில் அவளுடைய புருஷனோடு வைத்திருந்த உறவை குறித்து, ஆரம்பத்திலும், முடிவிலும் குறிப்பிட்டுள்ளதை கவனியுங்கள் வச 11, 28. அவர்களிருவருக்கிடையே ஒருவருக்கு ஒருவர், பாராட்டின அன்பு, நம்பிக்கை, கனம் பண்ணுதல், இவைகளே அந்த இல்லத்தின் வெற்றிக்கு அடிப்படை.

இல்லத்தில், எல்லாவற்றையும் நிர்வகிக்கும் திறன், மனைவி -யிடத்தில் இருப்பதை எண்ணி, புருஷன் பாதுகாப்படைகிறான். அவளுடைய வார்த்தை (அவளுடைய நாவில் அன்பின் பிரமாணம்

இருக்கிறது)யும் செயலும் (உயிரோடிருக்கும் நாளளவும் அவனுக்கு நன்மையே செய்கிறாள்). அவள் புருஷனின் பலவீனத்தையும், சொந்த பலவீனத்தையும் காப்பாற்றுகிறாள். ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்திருப்பதினால், தேவன் அவளுக்கு, மற்றும் அவனுக்கு கொடுத்திருக்கும் ஸ்தானத்தை நிறைவேற்றும் முயற்சியில் நன்றாக செயல்பட முடிகிறது.

அதிகாலை முதல், இரவு வரை (15 வசனம், 18) அவளுடைய நேரம், வீட்டிலுள்ளோரை, ஜாக்கிரதையாக கவனிப்பதிலும், ஏழை எளியவரை கவனிப்பதிலும் செலவழிக்கப்படுகிறது (வச 20).

ஆதலால் புறங்கூறுவதற்கும், டெலிவிஷனில் வீணான காட்சிகளைப் பார்ப்பதற்கும், அல்லது தன்னைத்தானே நொந்து கொள்ளுவதற்கும் நேரமில்லை. மத்தேயு 25:22ம் வசனத்தில் கூறப்பட்டுள்ள, தாலந்து உவமையில், இரண்டு தாலந்தைப்பெற்ற மனிதனைப்போல, தேவன் தன் வசம் ஒப்புவித்த பொறுப்புக்களை, திறமையோடு செயலாற்றுகிறாள்.

அவள் நிமித்தம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. (வச 30)

எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதை அறிந்திருந்தாள். ஆகவே தான் அதிகமான நன்மையை செய்ய முடிந்தது. அவளுடைய உழைப்பை, அவள் ஆசீர்வதிக்கிறாள்.

யோசேப்பு போத்திபார் வீட்டில் சகல காரியங்களையும் நன்றாக நிர்வாகம் செய்ததினிமித்தம், தேவன் அவ்வீட்டை ஆசீர்வதித்திருக்கிறார் என்பதைப் போத்திபாரும், அவருடைய மனைவியும் அறிந்திருந்தனர்.

அவள் பிள்ளைகள் எழும்பி அவளை பாக்கியவதி என்கிறார்கள். இது தற்செயலாக வந்த பாராட்டு அல்ல. பிள்ளைகள் அவளுடைய

நகுதியையும், மதிப்பையும் புரிந்து கொள்ளும்படியாக, அவர்கள் முன்னே வாழ்ந்து காண்பித்தாள். கடுமையான உழைப்பு வாழ்க்கையில் சந்தோஷத்தையும், ஆதாயத்தையும் தரவல்லது.

இவைகள் தான் ஒரு அருமையான தாயாரை உருவாக்கும். இவள் வீட்டை கட்டுகிறவளாக மாத்திரம் இருப்பதினால், தன் வளர்ச்சியை தருகிறார்கள் என்று நினைப்பதில்லை. தன் குழந்தைகளை மனமுறிவடையச் செய்கிறதில்லை. தன் கடமைகளை நிறைவேற்றாமல் போனவள் என்றும் நினைப்பதில்லை.

உலகம் நினைக்கிற அந்த வெற்றியை நாடுவதில்லை. அவள் தன்னைத்தானே வஞ்சித்துக் கொள்வதில்லை. தேவன் அவள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறாரோ அப்படியே அவள் இருப்பதில் சந்தோஷம் அடைகிறாள். தேவன் அவளுக்குக் கொடுத்த ஸ்தானத்தை நிறைவேற்றுவதில் திருப்தியடைகிறாள்.

நான் அவளிடத்திலிருந்து கற்றுக்கொள்ள முடியுமா? அவள் செய்த அனைத்துக் காரியங்களையும் நானும் செய்ய வேண்டுமா! ஆம், (அல்லது) இல்லை.

# தேவன்

*தேவனால் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய வார்த்தை யில்லாமல், மனிதன் தேவனுடைய சித்தத்தை அறியவும் முடியாது. அல்லது தீமையை விட்டு விலகுவது எவ்வாறு என்று தெரிந்து கொள்ளவும் முடியாது.*

*வேதாகமம், தேவனுடைய வார்த்தைகள் அடங்கியது. மனிதனுடைய எல்லாத் தேவைகளையும் வேதாகமம் பூர்த்தி செய்யக் கூடியது. மத சம்பந்தப்பட்ட எந்த கேள்விகளுக்கும் விடை காணலாம். ஆத்துமா தொடர்பான எல்லா ஞானமும் அதில் அடங்கியிருக்கிறது. மனித அறிவுக்கு அப்பாற்பட்ட தெளிந்த தத்துவங்களும் உண்டு. அதற்கு இணையான புத்தகம் உலகில் கிடையாது. எந்த மனிதனும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. சாதாரண மனிதனை ஞானியாக்கும் வல்லமை வேதாகமத்திற்கு உண்டு ●*

# அவசரப்படாமல் செயல்படு

– டாம் நிக்கல்ஸ்

பொறுமை, அடக்கம், நிதானம் ஆகிய இவைகள் எல்லாம் விலைபோகாத உலகில் நாம் வாழ்ந்து வருகிறோம். உணர்ச்சி வேகத்தில் பலரது அறிவுக் கண்கள் குருடாகிப்போயின. ஆவேசத்தில் செயல்பட்டுவிட்டு, அதற்கு காரணமானவர்கள் மேல் பழியைப் போடுவதும் சிலரது வாடிக்கை.

நமது செயல்களை உலகம் கண்டுகொள்ளாமற்போனாலும் தேவன் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறாரே! தப்பு செய்ய யார் நம்மை சீண்டினாலும், நிலைமையை சீர்தூக்கிப்பார்த்து நிதானத்துடன் செயல்படும் திறனை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். பொறுத்திருந்து செயல்படுவதால் நித்திய விளைவுகளைத் தவிர்த்திடலாமே. "தூண்டுதலுக்கும் செயல்படுதலுக்குமிடையே உள்ள கால இடைவெளிதான் நம்மைக் குற்றவாளியாகவோ அல்லது நிரபராதியாகவோ நிர்ணயிக்கிறது" என்று சொல்லுகிறார்கள்.

தூண்டுதல்கள் வரும்போது அவசரப்பட வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. பேச்சிலும் செயலிலும் நிதானமிழந்து, அவசர கதியில் செயல்பட்ட சந்தர்ப்பங்கள் நம் வாழ்வில் பல உண்டு. வேகம் விவேகம் அல்ல என்பதற்கு இணங்க, நம் உணர்ச்சி வேகத்திற்கும், நடவடிக்கைக்கும் இடையே விரிவான கால இடைவெளி கண்டிப்பாய் தேவை. (நீதி 6:18, ரோமர் 3:15, யாக் 1:19).

'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று செயல்படுவதால் உண்டாகும் பின் விளைவுகளைச் சற்று யோசித்துப் பாருங்கள். உங்கள் குடும்பம், சபை, நண்பர்கள் மற்றும் உங்கள் நற்பெயரும் கூட வெகுவாய் பாதிக்கப்படக் கூடுமல்லவா? "கெட்டபின் ஞானி" என்பார்களே, அதனால் பிரயோஜனமென்ன? காலமெல்லாம் கண்ணீர்தானே!

சிக்கல் வரும்போது, தீர்வுகளை பொறுமையாய் தேடிப் பாருங்கள். "அவசரக் காரனுக்கு புத்திமட்டு" என்பார்கள். இந்தப் பூமியில் நமக்கு பல வழிகள் இல்லாமலில்லை. நிச்சயம் சரியான வழியொன்று கிடைத்திடும். (1 கொரி 10:13).

அவசர செயல்களால் உண்டாகும் நித்திய விளைவுகளும் ஏராளம் (வெளி 21:8). இவ்விஷயத்தில் பயமுறுத்தி பணிய வைக்க சிலர் எண்ணுகின்றனர். ஆனால் நம் தேவன் கண்டிப்புடன் தயவும் உள்ளவர் என்பது மகிழ்வைத் தருகிறது. (ரோ 11:22). தேவ கோபத்துக்குப் பயந்து நாம் தீமைக்கு விலகினாலும் அதுவும் நல்லது தானே!

தேவனுடைய தயவை எப்போதும் எண்ணிப் பாருங்கள். அவர், நன்மையின் பிறப்பிடமாயிற்றே (யாக் 1:17). உங்களுக்கு வாழ்வு கிடைக்க, தமது மகனுக்கு சாவைக் கொடுத்தவரல்லவா? (யோவான் 3:16). எதை நீ செய்வதற்கு முன்னும், அவர் உனக்கு செய்த நன்மைகள் நினைவுக்கு வரட்டும்.

அவசரப்படுவதற்கு முன் தேவனுடைய வார்த்தையைச் சற்று எண்ணிப்பார். தீங்கு உன்னை அணுகாமல் காக்கும் நல்ல ஆலோசனைகள் அதில் உண்டு. (சங். 119: 9-16). கோபமும், ஆவேசமும் கொந்தளிக்கும்போது வேதத்தைப் படிக்க மனமில்லாமற் போகிறது. ஆனால் அப்படிப்பட்ட நேரங்களில்தான் வசனத்தின் உதவி நமக்கு அதிகமாய் தேவைப்படுகிறது என்பதை மறந்து போகலாகாது. அமைதியில்லாத வேளைகளில் தான் "நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" என்ற நமது பரம தகப்பனின் குரலுக்கு கவனமாய் செவி கொடுக்க வேண்டும். (சங்கீதம் 46 :10).

☆☆☆

# சபையும் இராஜ்யமும் ஒன்றா?

**- வில்லியம் உட்சன்**

மேற்கண்ட இந்தக் கேள்வி பலரது உள்ளங்களில் உறுத்திக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் ''ஆயிர வருட அரசாட்சி'' என்ற ஓர் மதக்கோட்பாட்டின் அடிப்படையில் சில தவறான கருத்துக்கள் எழும்பி மக்களை குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கின்றன. அதாவது, இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக இயேசு இவ்வுலகத்திற்கு வந்தாராம்; ஆனால் ஜனங்கள் அவரை புறக்கணித்து விட்டபடியால், அவர் தமது திட்டத்தை மாற்றிக்கொண்டு, இராஜ்யத்திற்குப் பதிலாக சபையை பூமியிலே உருவாக்கி விட்டு போய்விட்டாராம்; பின்னர் ஒரு நாளில் அவர் வந்து பூமியில் ஆயிரம் வருடம் அரசாளப் போகிறாரென்றும், அதற்காகவே தேவமக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் பலர் கூறி வருகின்றனர். ஆனால், இந்த இராஜ்யத்திற்கும் சபைக்குமுள்ள சம்பந்தமென்னவென்பதை நாம் இப்போது தெளிவாக அறிந்து கொள்ளப்போகிறோம்.

''இராஜ்யம் சமீபத்தில் வந்திருக்கிறது'' என்று முன்னுரைக்கப் பட்டது நாம் யாவரும் அறிந்ததே (மத்தேயு 3:1,2. மாற்கு 1:14, 15), அவ்வாறு எதிர்பார்க்கப்பட்ட இராஜ்யம் இங்கே வந்துவிட்டதா? ஆம்! ஏனென்றால் நாம் அந்த அன்பின் குமாரனின் இராஜ்யத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது (கொலோ 1:13). வராத ரயிலுக்குள் ஒருவன் எவ்வாறு போய் அமர்ந்திருக்க முடியும்? சற்று சிந்தியுங்கள்! யோவான் அப்போஸ்தலன், நம்மோடு கூட தானும் இந்த இராஜ்யத்தில் உடன் பங்காளியாய் இருப்பதாகக் குறிப்பிடுகிறார் (வெளி 1:9). சில மக்கள் தவறுதலாக காத்திருக்கும் ஆயிர வருட அரசாட்சிக்கும், தேவனுடைய இராஜ்யத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

அப்படியானால் சபைக்கும் இராஜ்யத்திற்கும் உள்ள தொடர்புதான் என்ன? சபைக்கு பல்வேறு காரணப் பெயர்கள் உண்டு அல்லவா? ''கிறிஸ்துவின் சரீரம்'', ''தேவனுடைய ஆலயம்'', ''தேவனுடைய குடும்பம்'' என்பன போன்ற பல உவமானங்களில் ''தேவனுடைய இராஜ்யம்'' என்பதுவும் ஒன்றாகும். பல்வேறு கோணங்களிலிருந்து சபையை கண்ணோக்கும்போது அது சரீரமாக, ஆலயமாக, குடும்பமாக, திராட்சைத் தோட்டமாக, மந்தையாக, இராஜ்யமாக காட்சியளிக்கிறது.

தேவன் தமது சுவிசேஷத்தால் நம்மை அழைத்து, இரட்சித்து, தேவஜனமாக மாற்றி, அவரது ஆட்சிக்கு அடிபணிந்து வாழும் குடிமக்களாக ஏற்படுத்தியிருக்கிறார். இதுவே அவரது இராஜ்ஜியம்!

மேலும், கர்த்தருடைய இராப்போஜன பந்தியானது தேவனுடைய இராஜ்யத்திலே நடந்தேறும் என்றும், அதில் கிறிஸ்துவும் அந்தப் பந்தியில் பானம் பண்ணுவார் என்றும் அவரே கூறியிருக்கிறார் (லூக் 22:16, மாற்கு 14:25). அவர் சொன்ன பந்தி இன்று சபையில் நடந்தேறி வருகிறது. (1 கொரி 11:23-28). இந்த மக்களோடுதானே தேவ இராஜ்யத்தில் இயேசு இந்த பந்தியில் பங்குபெறுவார் என்று சொல்லப்பட்டிருந்தது? சபையின் விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் சரீரமாகவும், தனித்தனியே அவரது அவயவங்களாகவும் இருப்பதால், (1 கொரி 12:27) இன்று இயேசு கிறிஸ்துவும் அவர்கள் மூலமாக இந்த பந்தியில் புசிக்கிறார் என்பதுவே இதன் பொருள். எனவே, இந்த பந்தி நடந்தேறுகிற சபை தான் தேவனுடைய இராஜ்யம் என்பது மிகத் தெளிவாக காணப்படுகிறது.

சபையை பூவுலகில் ஸ்தாபிக்க இயேசு வாக்களித்த போதும் கூட, இதனை பரலோக இராஜ்யம் என்று அவர் சுட்டிக் காட்டுவதையும் நாம் உன்னிப்பாய் கவனித்துப் பார்க்க வேண்டும். (மத்தேயு 16:18, 19). அந்த உன்னதமான இராஜ்யத்தின் பெருமைமிகு மக்களாய் நாம் தலை நிமிர்ந்து நிற்போமாக.

# கிறிஸ்துவுக்குள் உண்மையாய் இருத்தல்

– டான் நார்வுட்

கர்த்தருக்கு உண்மையாய் இருத்தல் என்றால், கர்த்தரை முழுமையாக நம்பவேண்டும். மேலும் இந்த நம்பிக்கையை காண்பிக்க, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட உண்மையாக இருத்தலுக்கு, கிறிஸ்துவே நமக்கு முன் உதாரணமாக இருக்கிறார் (எபி 3:1 - 6).

கிறிஸ்துவுக்குள் தேவனோடு ஒப்புரவாகுமுன் ஒருவன் (கணக்கொப்புவிக்கத்தக்க பருவம் வந்த ஆணும், பெண்ணும்) தான் பாவி என்பதை உணர வேண்டும். தான் காணாமல் போன (கெட்டுப்போன) நிலையில் இருக்கிறேன் என்று உணர வேண்டும். (ரோம 3:23). (யோவா 3:14-18, எபே 2:1-3, யோவா 3:36).

நிர்க்கதியான தன் நிலையை உணர்ந்த அவன், சுவிசேஷத்தின் உண்மைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து எல்லோருக்குமாக ஜீவனை கொடுத்தார் என்பதை கற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவன் பிறகு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட தேர்வு செய்ய வேண்டும். அல்லது, சுவிசேஷத்தைத் தள்ளுபடி செய்தால் தொடர்ந்து கெட்டுப்போன நிலையிலே இருக்க நேரிடும்.

கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய தீர்மானிக்கும்போது, இந்த மனுஷன், முழு மனதோடு சமூலமாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று உணரவேண்டும். (லூக்கா 14:25-33. மத் 16; 24, 25).

அடுத்தபடியாக, ஒருவன் தேவனிடத்தில் திரும்பி அவருடைய சித்தத்தைக் கற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிய வாஞ்சையுள்ளவனாய்

இருக்க வேண்டும் (மத் 7:21, ரோமர் 12:1,2). கர்த்தருடைய சித்தத்தின்படி நடப்பதால் நம்முடைய வாழ்க்கைப் பாதையில் கொஞ்சம் துன்பப்பட வேண்டி வரும். (1 பேதுரு 1:3-9 ; 5:5-11 ; 4:16-18). இப்படிப்பட்ட துன்ப காலங்களில் ஒருவன் கர்த்தருக்கு உண்மையாய் இருக்க வேண்டும். பொறுமையோடும் இருக்க வேண்டும். (யாக் 1 : 12).

கர்த்தருக்கு உண்மையாய் இருத்தல் என்று சொன்னால், ஒருவன் தன்னுடைய சில மனோபாவங்களை விட்டு விட்டு, கர்த்தர் போதிக்கின்ற மனோபாவத்தை உடையவனாய் இருக்க வேண்டும். (கொலோ 3: 5-17) (எபே 4:17-32).

கிறிஸ்துவுக்குள் உண்மையாய் இருக்க மாம்சத்தின் கிரியைகளை விட்டுவிடவேண்டும் (கலா 5 : 19 - 21)

பரிசுத்த ஆவி போதித்த கிரியைகளை செய்ய வேண்டும். (கலா 5:22-24, தீத்து 3:3-8).

கர்த்தருக்கு உண்மையாய் இருத்தல் என்றால் ஒவ்வொருவரிடத்திலும் (பகைவரிடத்திலும் கூட) அன்பு கூர கற்றுக்கொள்ள வேண்டும். (மத் 5: 43 - 48).

இந்த அன்பு (கிரேக்க பாஷையில் 'அகாபே') மற்றவர்களுக்கு, எது சிறந்தது என்பதை யோசித்து அவர்கள் அதை பெறுவதற்கு அபாத்திரராய் இருந்தாலும் கூட அவர்களுக்கு நன்மையே செய்ய நாடும். கிறிஸ்துவுக்கு உண்மையாயிருத்தல் என்றால், ஒருவன் (1) பிராந்திய சபையாருடன், தவறாமல் ஒழுங்காக, தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். (யோவான் 4:23,24; எபி. 10:23-30; 1 கொரி 14:14,15). (2) தேவனுடைய சித்தத்தைக் கற்றுக்கொள்ள கிடைக்கும் ஒவ்வொரு சமயத்தையும் உபயோகிக்க

வேண்டும். (எபேசி 5:15-17 ;2 தீமோ2:15). ( 3) கர்த்தருடைய வசனத்தை மற்றவர்களுக்கு போதிக்க வேண்டும் (2 தீமோ. 2:2, 24-26). (4) நம் சகோதரர்கள் பக்தி விருத்தி அடைய நம்மால் ஆனதை செய்ய வேண்டும் (எபே 4:15,16; கலா 6:2-5).

5. கர்த்தருடைய சபையில், ஒரு அங்கத்தினன், மிகவும் வியாதிப்பட்டிருந்தாலொழிய, சபை கூடி வருதலை விட்டு விடக் கூடாது. அப்படி செய்பவன் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாக இருக்க முடியாது. கிறிஸ்துவின் வார்த்தை (புதிய ஏற்பாடு) நமக்கு சுயாதீன பிரமாணமாகும். (யாக் 1:25; 2:12). நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (1 யோவான் 3:4) நாம் மனப்பூர்வமாய் பாவஞ் செய்கிறவர் களானால், பாவத்திலிருந்து நம்மைக்கழுவும் அவருடைய ரத்தத்திற்கு நீங்கலாகிவிடுவோம். (எபி 10 :26). தொடர்ச்சியாக ஆராதனையை ஒருவன் அசட்டை செய்தால், கர்த்தருடைய வார்த்தையை படிக்க மறந்தால், அப்படிப்பட்ட மனிதன் மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசியாமலும், அவருடைய ரத்தத்தை பானம் பண்ணாமலுமிருப்பான். (யோவான் 6:48-58). அதாவது, அவருடைய வார்த்தையை கற்றுக் கொண்டு, மனதில் அதை ஏற்றுக்கொண்டு, அவர் சிலுவையில் மரித்து நமக்காக பலியானதை நினைவு கூறுவதாகும். (யோவான் 6:52 - 58).

ஆம்! நாம் மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருத்தல் அவசியம் (எபி 3:12-14). அப்படி இருந்தால் நித்திய ஜீவனாகிய கிரீடத்தை சுதந்தரித்துக் கொள்வோம். (யாக். 1:12 ; 2 தீமோ 4:6-8).

நாம் இவ்வளவு பெரிதான ரட்சிப்பைக் குறித்து அலட்சிய மாயிருக்க வேண்டாம். (எபி. 2 : 4).

★★★

# மன்னிக்க முடியாத பாவத்தை செய்தவன் யாருமில்லை !

– டேவிட். டபிள்யூ. சாட்வெல்

''தேவன் என்னை மன்னிக்க மாட்டார். இயேசு ஒருபோதும் என்னை இரட்சிக்க முடியாது! என் பாவங்களோ மன்னிக்க முடியாதவை''.

ஒரு மனிதன் இப்படிப்பட்ட குற்ற உணர்வோடு, ஜீவிப்பானே யானால், அவனை தீமையினின்று தேவன் இரட்சிக்க முடியாது என்ற முடிவுக்குத்தான் வருவான்.

இந்த குற்ற உணர்வோடு ஜீவிப்பதால் முடிவில் ஆவிக்குரிய துயரத்தைத்தான் அடைய முடியும். யோவா 3:16- 18-ல் இயேசு இதனை எளிமையாக கூறியிருக்கிறார்;

''தேவன் இவ்வுலகத்தின் மீது அன்பு கூர்ந்ததினால் அவருடைய குமாரனை அனுப்பினார்''.

தேவனுடைய நோக்கம், மனுக்குலத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பது அல்ல. தங்களுடைய பாவத்தினால் மனுக்குலம், தங்களையே அழித்துக்கொள்கிறார்கள்.

தேவனுடைய நோக்கம், இயேசு கிறிஸ்து மூலம் மனுக்குலத்தை இரட்சிப்பதே. இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து, அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிவதன் மூலம் ஒருவன் இந்த ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து, காப்பாற்றப்படுகிறான்.

பாவத்தில் அழிந்து கொண்டிருக்கும் ஒரு பாவி, இது சாத்தியமா? இது உண்மையாகுமா? என்று எண்ணுகிறான். ஆனால் இது உண்மை தான்; இது சாத்தியமே! பாவ நிவாரண பலியாக இயேசு தம்முடைய ஜீவனையே அர்ப்பணித்த போது ஒவ்வொருவருடைய பாவத்தையும் நிவர்த்தி செய்கிறார்.

ஆதாம், ஏவாள் தேவனுடைய கட்டளையை மீறி (ஆதி 3) பாவம் செய்த அந்த நாளிலிருந்து, நித்திய நியாயந்தீர்ப்புக்கு முன்னால், மனிதன் செய்கிற கடைசி பாவம் வரை, எல்லா பாவங்களுக்குமாக இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது. (ரோமர் 3:25, 26).

ஒவ்வொரு சந்ததியிலும், வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும், இயேசுவுக்குள் தேவனுடைய மன்னிப்பை ஏற்றுக்கொண்டாலும், தேவனுடைய மீட்கும் கிருபையும், இரக்கமும், தீர்ந்து போகாது.

விசுவாசிக்கவும் மனந்திரும்பவும், தகுதியுள்ள எந்த மனிதனும், தேவனுடைய மன்னிப்பை பெற முடியும் என்று இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழியத்தில் திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருக்கிறார்.

ஐந்து பேரை விவாகம் செய்து, விவாகம் ஆகாமல் இன்னொரு மனிதனுடன் வாழ்ந்து கொண்டிருந்த ஒதுக்கப்பட்ட சமாரிய ஸ்திரீக்கு, ஜீவ தண்ணீரை குடிக்க, ஒரு வாய்ப்பினை தந்தார். (யோவா 4:10-18).

ஊருக்கெல்லாம் தெரிந்த ஒரு வேசி அவள் மனந்திருந்திய போது, அவளைப் பார்த்து, ''ஸ்திரீயே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது; சமாதானத்துடனே போ என்றார். ஒரு ஆயக்காரனை (மத்தேயு) தம்முடைய 12 சீஷர்களில் ஒருவனாக (மத் 9: 9 - 13) தெரிந்து கொண்டார்.

அந்நாட்களில் இந்த ஆயக்காரர்கள் (சுங்க வரி வசூலிப்பவர்கள்) பேராசைக்கும், திருட்டுக்கும் பேர் போனவர்களாக இருந்தார்கள்.

ஆகவே ரோமருக்காக வரி வசூல் செய்யும் எந்த யூதனையும், மிகவும் மோசமான பாவிகளின் வரிசையில்தான் சேர்ப்பார்கள்.

அந்நாளைய மத பெரியவர்கள், ஒரு போதகனாக இருந்து ஆயக்காரர்களோடும், பாவிகளோடும், போஜனம் பண்ணுகிறதென்ன? என்று இயேசுவை கண்டனம் பண்ணினார்கள்.

''அவர்கள் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கையில், பிணியாளிகளுக்கு, வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை'' என அவர் கூறினார்.

இவ்விதமாக இயேசு செய்த போதனைகள், சுகமாக்குதல் மற்றும் சமூகத்தில் தள்ளப்பட்டவர்களிடம் சவகாசம் வைத்தல், இவைகளை குறித்து கடுமையான கண்டன குரல் எழுந்தது.

அப்படிப்பட்டவர்களை இயேசு அரவணைத்துக்கொண்டு அசுத்த ஆவியை துரத்துதல் உள்பட, எல்லாவிதமான தீமையிலிருந்தும் மக்களுக்கு விடுதலை கொடுத்தார்.

ஆனால் மதத்தலைவர்களோ! அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

அதற்கான ஒரு பெரிய சாட்சியம், ஒரு மோசமான மத நம்பிக்கையற்ற தர்சு பட்டணத்தானான சவுலை தேவனும், கிறிஸ்துவும் அப்போஸ்தலனான பவுலாக மாற்றியிருக்கின்றனர்.

இந்த மனிதனுடைய தீமையை அதிகம் கூற வேண்டியதில்லை. தேவனுடைய நாமத்தைச் சொல்லி கிறிஸ்தவ மார்க்கத்தையே அழிக்கப் பார்த்தவன். (இந்தப் பவுல்)

முழுமனதோடு சாட்சிக்காரரின் வஸ்திரங்களை வாங்கி வைத்துக்கொண்டு, ஸ்தேவான் அவர்களால் கல்லெறியப்படுவதை கண்டு ரசித்தவன். (அப் 7:58, 8 அதி 1 முதல்).

அவன் வீடுகள் தோறும் நுழைந்து கிறிஸ்தவர்களைத் தேடி இழுத்துக் கொண்டுபோய் காவலில் போட்டு, எருசலேமிலே கிறிஸ்தவ மார்க்கமே இல்லாதபடி, முழுவதுமாக அழிக்கப் பார்த்தான். (அப் 8:3).

இன்னும் கர்த்தருடைய சீஷரை பயமுறுத்தி கொலை செய்யும்படி சீறிப்பாய்ந்தான்.

இந்தக் கொலை வெறியால், கிறிஸ்தவ மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும், ஸ்திரீயையாகிலும் தான் கண்டு பிடித்தால்

அவர்களை கட்டி, எருசலேமுக்கு கொண்டு வரும்படி தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், கிறிஸ்துவுக்காக கைது பண்ணப்பட்ட நிலையில் முந்தின நாட்களில் தான் செய்த காரியங்களைக் குறித்து பவுல் கூறும் பொழுது, ''நான் கிறிஸ்தவ மார்க்கத்தாராகிய புருஷரையும், ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலையில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன் என்று கூறினான். (அப். 22: 4,5). அந்நாட்களில் இயேசுவின் நாமத்திற்கு விரோமாக அநேக காரியங்களை செய்தான். அவன் பரிசுத்தவான்கள் அநேகரை சிறைச்சாலைகளில் அடைத்தான். அவர்கள் கொலை செய்யப்பட ஒப்புதல் அளித்தான். ஜெப ஆலயங்களில் தேவதூஷணம் சொல்ல பரிசுத்தவான்களை கட்டாயப்படுத்தினான். கிறிஸ்தவர்களை வெறுத்து, அவர்களின் பேரில் மூர்க்க வெறி கொண்டிருந்தான். (அப் 26 : 9 - 16).

தமஸ்குவிற்குப் போகும் வழியில் உயிர்த்தெழுந்த இயேசுவை முகமுகமாக தரிசித்து, அவரோடு பேசினான் (அப் 9: 1-9, அப். 26 : 12 - 18).

தேவனை எதிர்த்து, தேவனோடு போராட்டம் பண்ணின பவுல் கணப்பொழுதில், இயேசு தேவனுடைய குமாரன் என்பதை உணர்ந்து கொண்டான். இயேசு பவுலிடம் அனனியா என்கிற சீஷனை அனுப்பி, அவன் பவுலுக்கு சத்தியத்தைப் போதிக்க அதை அவன் விசுவாசித்து, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றான்.

அவன் செய்த அனைத்து பாவங்களிலிருந்தும் கழுவப்பட்டான். (அப் 22:16).

அநேக வருடங்களுக்குப்பிறகு, பவுல் எழுதுகிறபோது பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு வந்தார் என்பதற்கு, அவனுடைய இரட்சிப்பே அசைக்க முடியாத சாட்சி என்றான்.

ஏனெனில் அவனே தான் பாவிகளில் பிரதான பாவி என்றும், இயேசு கிறிஸ்துவினுடைய முழுமையான பொறுமைக்கு, உலகத்திலேயே பயங்கரமான பாவியாகிய, "தானே அதற்கு சாட்சி" என்றும் கூறுகிறான்.

தேவனுடைய உயிர்த்தெழுந்த குமாரனை விசுவாசிப்பவனை இயேசு இரட்சிக்கிறார், என்பதற்கு பவுலே மறுக்க முடியாத நிரூபணமாய் இருக்கிறார். (1 தீமோ 1:12-17). உயிர்த்தெழுந்த இயேசுவின் மீது விசுவாசம் வைத்து, பாவத்தை விட்டு மனம் திரும்பிய எந்த மனிதனும், ஞானஸ்நானம் பெற்ற தர்சு பட்டணத்தானாகிய சவுலைப் போல, தானும் பாவ மன்னிப்பைப் பெறலாம்.

இயேசு கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பைப் பெறாத அளவுக்கு மன்னிக்க முடியாத பாவத்தைச் செய்தவன் யாருமில்லை.

✯✯✯

---

**கிறிஸ்தவ ஓட்டத்தில், விசுவாசி, பாரமான அனைத்தையும், தடையாக நிற்கும் எதையும் தள்ளி விட வேண்டும். ஆனால், இது மட்டும் வெற்றியைத் தந்து விடாது. அதற்குப் பிறகு தனக்கு முன்பாக நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓட வேண்டும்.**

*"கிறிஸ்தவன் தன் ஓட்டத்தில் தன்னுடைய கண்களைக் கிறிஸ்துவுக்கு நேராகச் செலுத்த வேண்டும். எதற்கு? அவரைப் போல பொறுமையோடே ஓடுவதற்கு. இயேசு கிறிஸ்துவின் முன் மாதிரி, ஒரு கிறிஸ்தவன் தன் ஓட்டத்தில் தொடர்ந்து பொறுமையோடு செல்ல உற்சாகப்படுத்துகிறது. கிறிஸ்தவர்கள் இயேசுவையே நோக்கிப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்."*

# நீங்கள் கேட்பது இன்னது என்று உங்களுக்கு தெரியவில்லை!

– ஓவன் காங்குரோவ்

அடுக்கடுக்காய் சம்பவங்கள் நடந்தேறிவிட்டன. நம் இயேசுவின் சிலுவை மரணமும் வெகுவிரைவில் கிட்டி வந்து கொண்டிருக்கும் நேரம் அது. சீஷர்களும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு வார்த்தை வாய்ஜாலம் காட்டிக்கொண்டிருந்தனர். "நமக்குள் யார் பெரியவன்?" "என் கால்களை நீர் கழுவ வேண்டாம்," "இந்த வீண் செலவு என்னத்திற்கு? தரித்திரருக்கு இதைக் கொடுத்திருக்கலாமே", "எல்லாரும் இடறலடைந்தாலும் நான் இடறலடைய மாட்டேன்" அப்பப்பா, இயேசுவுக்கு போதும் போதுமென்றாகிவிட்டது.

இதுபோதாதென்று இப்போது செபதேயுவின் மனைவி வேறு இயேசுவை தொந்தரவு செய்கிறாள். அதாவது தன் மகன்கள் இருவருக்கும் இயேசுவின் இராஜ்ஜியத்தில் துணை ஜனாதிபதி பதவி வேண்டுமாம். இதைக்கேட்டு சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை. பல சமயங்களில் நமது எண்ணங்கள் எவ்வளவு தரம் தாழ்ந்து போகிறது பாருங்கள்.

இதைக் கேட்ட இயேசு அவர்களைப் பார்த்து, "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?" என்றார். சற்றும் சிந்திக்காமல் "கூடும்" என்று அவர்கள் பதிலளித்தார்கள். (மத்தேயு 20:22) கெத்சமெனே தோட்டத்து வேதனையின் வேளையில் இயேசுவோடுகூட ஒரு மணி நேரம் கூட கண்விழித்திருக்க முடியாத இவர்கள் அவரது கசப்பான துக்கப்பாத்திரத்தில் எவ்வாறு பானம் பண்ணப்போகிறார்களோ, தெரியவில்லை. யூதரின் துரோகம், பேதுருவின் மறுதலிப்பு, ஜனக்கூட்டத்தின் எதிர்ப்பு, வழக்கு விசாரணை, சாட்டையடி, முள்முடி, தடியடி, பரியாசம், அவமானம், கைவிடப்பட்ட தர்ம சங்கடம், களைப்பு,

கொடூரமான வேதனை போன்ற இவ்வளவு கசப்பான பாடுகள் அவருக்கு எதிராக காத்துக்கொண்டிருந்தன. ஆம், பிரியமானவர்களே, பிறரது உண்மையான வேதனைகளையும், பாடுகளையும் பல நேரங்களில் நாம் உணர்ந்து பார்க்கத் தவறிவிடுகிறோம். சிலுவைப் பாதையை சிலர் உல்லாசப் பயணம் என எண்ணிக்கொண்டு ஏமாந்து போனதுண்டு. "கிறிஸ்துவின் இராஜ்யத்தில் பணி செய்யும் தாழ்மை மிக்க ஊழியர்களாய் இருப்பதற்குப் பதிலாக, பெரும்புள்ளியாக இருப்பதையே எல்லோரும் விரும்புகின்றனர். புற ஜாதியார் பெருமைமிக்க பெரும்பதவிகளையே நாடுகிறார்கள். ஆனால் உங்களுக்குள் அப்படியிருக்கலாகாது. எனவே நீங்கள் பணிவிடைக்காரராக வாழப் பழகுங்கள்" என்ற கருத்தில் இயேசு அவர்களுக்கு கட்டளையிட்டார். (மத்தேயு 20:25-27).

இது நடந்து 10 வருடங்களில் யாக்கோபு என்ற அப்போஸ்தலனின் தலையை ஏரோது வெட்டி சாய்த்தான். சில வருடங்கள் கழித்து யோவான் அப்போஸ்தலன் பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டு, அங்கிருந்து ஓர் பிரமாண்டமான, அலங்காரமான, உன்னத நூலை எழுதி அனுப்பினார். ஆரம்ப காலம் முதற்கொண்டு கிறிஸ்தவர்களுக்கெதிராய் நடந்த கசப்பான சித்திரவதைகளும், அடக்குமுறைகளும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

"பரம பிதாவே, எங்கள் மனமேட்டிமையை தகர்த்திடும்
சக்தியை. தாரும். எங்கள் அகந்தையையும்,
வீண் பெருமையையும் விட்டு ஒழித்திடும் வல்லமையைத்
தாரும். உமக்கென்று என்ன பாடுகளை நாங்கள் சகிக்க
நேர்ந்தாலும் உமது அன்பு எங்களுக்குப் போதும். எங்களின்
பாடுகள் எங்கள் இரட்சகரின் பாடுகளை விட குறைவு தானே
என எண்ணி பெருமிதம் கொள்ளுகிற கிருபையைத் தாரும்.
இயேசுவின் நாமத்தில் எங்கள் ஜெபம் கேளும் பிதாவே" ஆமென் •

# அந்திரேயா எங்கே?

**– சி.எல்லிஸ் மெக்காகே**

இயேசுவைப்பற்றி அறிந்து கொண்ட அந்திரேயா, சற்றும் தாமதியாமல் தன் சகோதரனாகிய பேதுருவைக் கண்டு இவ்விஷயத்தைச் சொல்லிவிட்டான். வெகு காலமாய் மக்கள் எதிர்பார்த்த மேசியா வந்து விட்டார் என்று அவனிடம் கூறினான். இயேசு மூலம், தான் பெற்ற சந்தோஷத்தை தன் சகோதரனும் பெற்று அனுபவிக்கட்டுமே என்ற நல்ல எண்ணம் இவனுக்கு.

அந்திரேயாவின் முயற்சி பலித்தது. கிறிஸ்துவைப் பற்றிய செய்தி மிகவும் சுவாரஸ்யமாயிருந்தபடியால் பேதுரு அதனால் கவரப்பட்டான். ஏற்கனவே இந்த செய்திக்காய் அவன் காத்திருந்தவனைப் போல உடனே அவரைச் சந்திக்க சென்றான். அன்றைய நாள் இந்த இருவரின் வாழ்விலும் ஓர் பொன்னான நாள்.

அந்திரேயாவால் அறிமுகம் செய்யப்பட்ட பேதுரு கர்த்தருக்கு மிகவும் பயனுள்ள கருவியாய் மாறினான்.

இந்த அந்திரேயாவின் பிரசங்கம் எதுவும் வேதத்தில் இல்லை. அவனது ஊழியப் பிரயாணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. அவன் எழுதிய நிருபங்கள் எதுவும் புதிய ஏற்பாட்டில் இல்லை. அவன் செய்த சாதனை எதுவென்றால், பேதுருவை இயேசுவிடம் கூட்டிக் கொண்டு வந்தது தான்! (யோவான் 1:40 - 42).

வேதத்தை ஆழமாய் அறியத் துடிப்பவர்களின் மனதைக் குளிரவைக்கும் தனி நபர் ஊழியத்தின் ஒரு முன்மாதிரி இந்த அந்திரேயா. நமது கைக்கு எட்டும் தூரத்தில் உள்ளவர்களையெல்லாம் சந்திக்க ஓடிச் செல்லும்படி இவன் நம்மை உற்சாகப்படுத்துகிறான். நமது உடன்பிறப்புகள், நண்பர்கள், சக மாணவர்கள், உடன் வேலையாட்கள் போன்றோருக்கு நீங்கள் ஒரு அந்திரேயா ஆகிட வேண்டாமா?

இன்றைய சபைகளில் அந்திரேயாக்களைக் காணோம். இயேசுவண்டை தங்களை அழைத்து வரும் அந்திரேயாக்களுக்காக இன்று அநேகர் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

எனக்கு அன்பான நண்பனே, உன்னால் மட்டுமே இயேசுவைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் பலர் இருக்கக் கூடுமே! இதற்காக நீ என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறாய்? நீயும் ஒரு அந்திரேயா அல்லவா?

---

## கிறிஸ்துவுக்குள் ஒன்றுபடுவோம்

*மண்ணுலகில் நமக்காக வந்தார் - வந்து*
*இன்னுயிரை நமக்காக தந்தார்,*
*இரத்தம் சிந்தி நம்மை மீட்டார் - நாமோ,*
*அவர் சித்தம் மறந்திடலாமா?..........*

***கிறிஸ்துவுக்குள்***

*யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை,*
*அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை,*
*ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, - நாம்,*
*அனைவருமே அவருக்குள் ஒன்று!....*

***பிதாவிடம்***

*கிறிஸ்து வேண்டினார் அன்றே!...*
*நாம் ஒன்றாயிருப்பதே நன்று,*
*அதை மறந்து விட்டோம் நாம் இன்று - சிந்திப்போம்!...*
*நாம் வாழ்வது சரியா என்று!!!...*

*கிறிஸ்துவுக்குள் ஒன்றுபடுவோம்,*
*தீய சிந்தனைகளை வேரோடு களைவோம்,*
*பிரிவினைகள் நமக்குள் ஏனோ !.... பாரினில்*
*நாம் அனைவரும் கிறிஸ்துவின் பிள்ளைகளன்றோ !...*

*பிரிவினைகளை நாம் களைந்து - நிதம்*
*கிறிஸ்துவையே நாம் நினைத்து,*
*ஏக மனதுடனே வாழ்ந்திடுவோம் - சகோதர*
*சிநேகத்திலே நிலைத்திடுவோம்!....*

# கிறிஸ்துவைப் பற்றி சொல்லத் துடிக்கும் அவருடைய பிள்ளைகள்

– ரான் பிரயண்ட்

தேவனுடைய பிள்ளையாயிருப்பது ஓர் மாபெரும் பாக்கியம். இந்த ஆனந்த பாக்கியம் பெற்றவர்களால் தங்கள் அளவில்லா மகிழ்ச்சியை அடக்கிக் கொள்ள இயலாது. யாரிடமாவது சென்று இதனைச் சொல்லி மகிழலாமே என்ற பேராவல் அவர்களை எப்போதும் துடிதுடிக்கச் செய்யும்.

சுவிசேஷத்தின் வல்லமை இரண்டு விஷயங்களைச் சார்ந்திருக்கிறது. ஒன்று, நமது மீட்பிற்காக இயேசு செய்தவைகள், இன்னொன்று, இந்த நல்வாழ்விற்கு வழியாய் இயேசு சொன்னவைகள்.

அவர் நமக்காக செய்தவைகள் அதிமுக்கியமானவைகள். (1 கொரி 15:1-4ல் காண்க). அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலின் வல்லமையைப் பெறுவது நமது செயல்களைப் பொறுத்ததாயிருக்கிறது. அவரது போதனைகள் நம் வாழ்க்கையை முற்றிலும் மாற்றவல்லவை. அவைகள் நமக்கு ஜீவனையும் அழியாமையையும் அருளிச் செய்கின்றன. (2 தீமோ 1:7-11; எபி 5 : 8,9). சுவிசேஷத்தின் மிக இயல்பான சத்தியங்கள் தான், கிறிஸ்தவ விசுவாசத்தை, மற்ற மதங்களை விட விசேஷித்ததாக்குகின்றன.

தேவனுடைய பிள்ளைகள் தங்கள் வாழ்வில் பெற்ற நன்மைகளோடு, பிறர் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றும் செய்தியையும் உடையவர்களாயிருக்கிறார்கள். இந்த அற்புதமான செய்தியான சுவிசேஷத்தை பிறருக்கு அளிப்பதை விட மேலான மகிழ்ச்சி வேறு என்ன இருக்க முடியும்? பிறர் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டிய செய்தி இது. அதை தேவனுடைய பிள்ளைகள் அறிவிக்கவில்லையெனில் வேறு யார் இதை அறிவிக்க பாத்திரமானவர்கள்? இது நமது விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்ட விஷயமல்ல, நாம் கட்டாயம் செய்திட வேண்டிய பணியாகும். தெய்வீக கட்டளையான சுவிசேஷ பணிதான் நமது வாழ்வின் முக்கியக் குறிக்கோளாகக் காணப்பட வேண்டும்.

நாம் கிறிஸ்துவை நேசித்தால் அவரது சொல்லுக்கு நாம் கீழ்ப்படிவோம். அவர் மேல் உண்மையான அன்புள்ளவர்களால் அவரைப் பற்றி அடுத்தவருக்கு சொல்லாமல் இருக்க முடியாது. இயேசுவைக் குறித்து நாம் பிரசங்கிப்பது, நமக்காகவோ, பிறருக்காகவோ அல்ல, மாறாக அது நம் அன்பின் ஆண்டவருக்காகவே! அவருடைய அன்பு நம்மை நெருக்கி ஏவுவதினாலேயே நாம் அவரைக் குறித்தும் அவர் விருப்பம் குறித்தும் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர் நமது எஜமானன், நாம் அவர் வேலையாட்கள்; நாம் அவரை கனப்படுத்த வேண்டியவர்கள். அவரது புகழ் எங்கும் பரவிட வேண்டுமானால், அவரது வாழ்வும், போதனைகளும் நம்மால் பறைசாற்றப்பட வேண்டும். பிற மக்களும் அவருக்கு அடிபணிந்து அவரை உயர்த்திட வழி வகுப்போமாக!

---

# யார் இந்த இயேசு?

*இயேசு ஒரு நல்ல மனிதன் மட்டுமா? ஒருதீர்க்கதரிசி மட்டுமா? தேவனுடைய அவதாரங்கள் என்று கூறிக்கொள்பவர்களில் இவரும் ஒருவரா? பரலோகத்திலிருந்து தேவன், "இவர் என் நேச குமாரன்" என்றார் (மத் 3 : 17).*

*"நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா? நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்" என்று பிறவிக் குருடனிடத்தில் இயேசு சொன்னார் (யோவான் 9:35, 37). இயேசு ஒரு பொய்யரா? அப்படியானால் அவர் ஒரு நல்லவராக இருக்க முடியாது. ஆனால் அவர் சத்தியத்தை பேசுகிறவர் என்பது உண்மையானால், அவர் வெறும் தீர்க்கதரிசியாக மட்டுமே இருக்க மாட்டார், தம்முடைய கர்த்தத்துவத்தை யாருடனும் பகிர்ந்து கொடுக்க மாட்டார். மாறாக, என் மூலமாக மட்டுமே ஒருவன் பரலோகத்திலிருக்கிற பிதாவை சென்றடைவான், என்று வெளிப்படையாக கூறி உள்ளார். இயேசுவின் காலியான கல்லறை அவரைப்பற்றிக் கூறுவது, "சிலுவையிலறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" (மத்28:5,6) இதுவரை எந்த மனிதனும் மரணத்தை வென்றது இல்லை.*

# சாராள் தன் கணவனை "ஆண்டவனே" என்றழைத்தாள்

– பெட்டி பர்ட்டன் சோட்

''ஊர்'' எனும் கல்தேயரின் பட்டணத்துப் பெண் இந்த சாராள். அவள் மிகுந்த அழகுள்ளவளாயிருந்தாள். ஆபிரகாமின் உறவினளான இவள் அவனுக்கு மனைவியானாள்.

இந்த சாராள் எப்படிப்பட்ட பெண்? வெறும் அழகு தான் இவளுக்குப் பெருமைக்குரிய காரியமா? அல்லது வேறு எந்த விஷயங்களை நாம் இவள் மூலம் கற்றுக்கொள்ள முடியும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

***1. கணவன் மேல் அன்பும் மரியாதையும் கொண்டவள்***

1 பேதுரு 3:6-ல், ''........ சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்கு கீழ்ப்படிந்திருந்தாள்'' என்று சொல்லப்பட்டுள்ளது. மெய்யாகவே தன் கணவனாகிய ஆபிரகாமுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்திருந்தாள். ஆபிரகாமை தேவன் அழைத்தபோது சாராள் மறுப்பேதும் சொல்லாமல் அவன் பின்னே மனமுவந்து கிளம்பிச் சென்றாள். வசதியாய் வாழ்ந்த இந்த அழகிக்கு, வனாந்தர வழியாய் பல்வேறு இடங்களில் சுற்றியலைந்தபோது, வெயிலிலும், தட்டுப்பாட்டிலும் எவ்வளவு சிரமமாயிருந்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். ஆபிரகாம் சென்ற இடமெல்லாம் அவனோடு கூட கூடாரங்களில் முறுமுறுப்பில்லாமல் வாழ்ந்து வந்தாள். நிலையான ஒரு சொந்த வீட்டைக் கண்ணாரக் காணாமலே மரித்துப் போனாள். அவள் யாரையும் ஒருபோதும் குறை கூறவே இல்லை.

இவளைப் போலவே கிறிஸ்தவ பெண்மணிகள் அனைவரும் தங்கள் கணவன்மாருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டியது அவசியம். (1 பேதுரு 3:5).

### *2. அழகியாயிருந்தாலும் அடக்கமுடையவள்*

கிறிஸ்தவ பெண்களின் பயபக்தியான வாழ்க்கை பற்றி பேதுரு மிக அருமையான அறிவுரைகளைக் கூறுகிறார் பாருங்கள். "அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர் களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப் படுவார்கள். மயிரைப் பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளு தலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாகிய சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாய் இருக்கக் கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது" (1 பேதுரு 3:1-4).

### *3. ஆபிரகாமின் மிரட்டல், உருட்டலுக்குப் பயந்து தான் சாராள் கீழ்ப்படிந்திருந்தாளா? இல்லையே!*

சமயத்தில், ஆபிரகாம் சாராளிடம் கெஞ்சி நிற்பதையும் நம்மால் காண முடிகிறதே! இருவேறு சந்தர்ப்பங்களில், அவர்கள் வெளி நாடுகளில் அந்நியராய் தங்கியிருக்கையில், சாராளின் அழகினால் தன் உயிருக்கே ஆபத்து வரலாம் என்று அவன் அஞ்சி நடுங்கினான். அப்போது அவன் தன் மனைவியிடம், "நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன். எகிப்தியர் உன்னைக் காணும் போது, "இவள் அவனுடைய மனைவி" என்று சொல்லி, என்னைக் கொன்று போட்டு, உன்னை உயிரோடே வைப்பார்கள், ஆகையால் உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும் படிக்கும் நீ உன்னை என் சகோதரி என்று சொல்" என்று ஆபிரகாம் கேட்டதையும் வேதம் அழகாக எடுத்துரைக்கிறது. (ஆதி 12:11-13).

அப்படியானால், சாராள் ஆபிரகாமால் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்ததினால் தான் அவள் அவனை "ஆண்டவனே" என்று அழைத்து கீழ்ப்படிந்திருந்தாள் என்று நாம் தவறாக எண்ணிவிடக்கூடாது.

மேலும் ஆபிரகாமின் அச்சமும் அர்த்தமற்றதே. ஏனென்றால் அவனை பேர் சொல்லி அழைத்த தேவன் போகச் சொன்ன இடங்களில் அவனைக் காப்பாற்ற அவரால் முடியாதா? ஆக, சாராளுக்கு தலைவனாயிருக்க வேண்டிய ஆபிரகாம், பயத்தினால், அவளிடம் கெஞ்சும் நிலைக்கு மாறிப்போனான்.

தேவபக்தியுள்ள பெண்மணியான சாராளோ, பொய் சொல்வதால் தன் உயிர் போனாலும் பரவாயில்லை, என்று எண்ணி, தன் கணவனின் உயிரைக் காக்க ஆபிரகாமின் சொற்படி நடந்து கொண்டாள்.

***4. சாராளின் வாழ்விலும் குறை இல்லாமல் இல்லை.***

'தவறு செய்வது மனித இயல்பு' என்ற முதுமொழிக்கேற்ப, சாராளின் வாழ்விலும் ஓர் தவறு நடந்து விட்டது. சாராள் மூலம் ஆபிரகாமுக்கு ஓர் ஆண் பிள்ளையைக் கொடுப்பதாக தேவன் வாக்களித்திருந்தார். ஆனால் 10 வருடங்கள் காத்துப் பார்த்தும், அது நடப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் சாராள் இதற்கு ஓர் குறுக்கு வழியைக் கண்டுபிடித்தாள். பிள்ளைப் பெற்றெடுக்கும் வயதைத் தான் தாண்டிவிட்டதால், அந்நாளைய வழக்கப்படி, தன் அடிமைப் பெண்ணான ஆகாரை ஆபிரகாமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்து, அவள் பெறும் பிள்ளையைத் தன் பிள்ளையாக்கிக் கொள்ள சாராள் திட்டமிட்டாள்.

இவ்வகையில் அந்த அடிமைப்பெண் ஆகார் கர்ப்பவதியான வுடன் அவளுக்கும் சாராளுக்குமிடையே ஓர் சக்களத்திப்போர் ஆரம்பித்து விட்டது. சில காலம் சென்ற பின் இவள் மகனாகிய இஸ்மவேல், சாராளுக்கு பிறந்த ஈசாக்கை கேலி செய்து அவள் மனதை வேதனைப்படுத்தும் நிலை வந்தது. பின்னர் இந்தப் பகை வளர்ந்து

வளர்ந்து இன்று வரை சுமார் 3500 வருடங்களாக இஸ்மவேலின் சந்ததியும் ஈசாக்கின் சந்ததியும் பரம விரோதிகளாக ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டிருக்கும் நிலை உருவாகிவிட்டது. (அராபியருக்கும், இஸ்ரவேலருக்குமிடையே இன்று வரை உள்ள நிலை).

இவ்விதமாய் பக்தியுள்ள சில பெண்களும் கூட சில சமயங்களில் "தேவனை நோக்கி காத்திருக்க" விசுவாசமும், பொறுமையும் இல்லாமல் அவசரப்பட்டு விடுகின்றனர். தேவன் செய்ய வேண்டிய காரியத்தை அவசரப்பட்டு நாம் செய்து விட்டால் பின்னர் அவதிதான். "கர்த்தருக்கு காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு" என்ற வசனத்தின்படி வாழ்வதுதான் அறிவுப்பூர்வமானது (சங்கீதம் 27:14).

***5. விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றவள் சாராள் !***

எபிரெய நிருபத்தின் 11-ம் அதிகாரத்தில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த விசுவாச வீரர்களைப் பற்றிய விபரம் உண்டு. அதில் ஆபிரகாமின் விசுவாசம் மட்டுமல்ல, சாராளின் விசுவாசமும் பாராட்டப்பட்டிருக்கிறதை நாம் காணலாம். "விசுவாசத்தினாலே சாராளும், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்றெண்ணி, கர்ப்பம் தரிக்க பெலன் அடைந்து வயது சென்றவளாய் இருந்தும் பிள்ளை பெற்றாள்". (எபிரெயர் 11:11). ஆபிரகாமின் விசுவாசம் எவ்வளவு அவசியமோ, அதுபோலவே இவ்விஷயத்தில் சாராளின் விசுவாசமும அவசியமாயிருந்தது.

ஒரு கணவனின் விசுவாசமும் பக்தியும் மனைவியின் கணக்கில் சேராது. மனைவியின் தனிப்பட்ட விசுவாசமும், தெய்வீக உறவும் தான் வாழ்நாள் முழுவதும் அவளைக் காத்து நிற்கும்.

✦✦✦✦✦

# மூத்த குமாரன்

– பிராங்க் செஸர்

கள்ளமில்லா பச்சிளம் குழந்தையாய் ஒரு வீட்டில் பிறந்தவன் இவன். தலைப்பிள்ளையாய் பெற்ற ஆண்பிள்ளையாயிற்றே; இவன் பெற்றோருக்கோ எல்லையில்லா ஆனந்தம். இதுபற்றி பேசுகையில் அன்றைய ரூபனின் தகப்பன் சொன்ன வார்த்தைகள் நம் நினைவுக்கு வருகின்றன; "ரூபனே, நீ என் சேஷ்ட புத்திரன்; நீ என் சத்துவமும், என் முதற்பெலனுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும், வல்லமையில் விசேஷமுமானவன்" (ஆதி 49:3). கைக்குழந்தையாயிருந்தபோதே இவன் தன் பெற்றோருக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டு பண்ணினவன். தொடர்ந்து இவனது பிஞ்சு முகத்துச் சிரிப்பும், மழலைப் பேச்சும், தத்திச் செல்லும் தளர் நடையும் பெற்றோரை பரவசமூட்டி பெருமிதம் கொள்ளச் செய்திருக்கும்.

இரண்டாவது மகன் பிறந்தபோது பெற்றோருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியும், தனக்கொரு தம்பி கிடைத்த சந்தோஷம் இவனுக்கும் உண்டாயிருக்கும். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது கூடவே சுதந்திர உணர்வும் தலைதூக்குகிறது. பல சமயங்களில் இந்த சுதந்திர தாகம், அழிவின் பாதைக்கு இழுத்துச் சென்றுவிடுகிறது. வீட்டு வாழ்க்கையில் சலிப்புண்டான இளைய குமாரன், வெளி வாழ்க்கையின் உல்லாசங்களில் நாட்டமடைந்து, தகப்பனிடம் தனக்குரிய ஆஸ்தியைப் பிரித்துத் தரும்படி கேட்டான். "சில நாளைக்குப் பின்பு இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்கு புறப்பட்டுப் போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான்" (லூக்கா 15:13).

காலம் கடந்தது; பாவ வாழ்க்கையில் கிடைத்த அற்ப சுகத்தை, வறுமையும் பசியும் தட்டிப் பறித்துக் கொண்டது. வீட்டு ஏக்கமும் பெற்றோரை பிரிந்த சோகமும் இவனை வாட்டி வதைத்தது. தன் தவறுகளை உணர்ந்து மனஸ்தாபப்பட்டவனாக, தன் சொந்த வீடு நோக்கி

அடிமேல் அடியெடுத்து வைத்து நடந்தான். அவனை வழியிலேயே கண்டு மனதுருகிய அன்பு தகப்பன், அவனைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு, அவன் செய்த தவறுகளையெல்லாம் மன்னித்து அவனை ஏற்றுக்கொண்டான். பின்னர், மகிழ்ச்சிக் களிப்பும், விருந்துக் கொண்டாட்டமும் விமரிசையாக நடந்தது.

இந்தக் கோலாகலக் காட்சியைக் கண்டு கோபமடைந்த மூத்த குமாரன், தனது தகப்பன் வருந்திக் கேட்ட பிறகும் கூட அந்த வைபவத்தில் கலந்து கொள்ள மறுத்துவிட்டான். அந்தோ, ஒரு காலத்தில் கள்ளமற்றிருந்த இவன் மனதை இப்போது பாவ அழுக்கு மூடிக் கொண்டது; உடன்பிறந்த பாசத்தை இப்போது அவ மரியாதை மேற்கொண்டு விட்டது; அன்று பிள்ளையைக் கண்டு ஆனந்தித்த பெற்றோரின் களிப்பை துயரமும் ஏமாற்றமும் சூழ்ந்து கொண்டது. இப்போது மூத்த குமாரனை ஆட்டிப்படைத்த கொடும் பாவங்களை சற்று கூர்ந்து கவனியுங்கள்.

### *ஆணவம்*

தன்னை உயர்த்தி தன் தம்பியை மட்டம் தட்டிப் பேசுகிறான், மேலும் தன் வாழ்க்கையில் இதுவரை ஒரு தவறும் வந்ததில்லை என்கிற ஆணவம் அவன் பேச்சில் தொனித்தது. ''ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும்...'' என்ற அவனது வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள். (லூக்கா 15:29). கருணையற்ற வாழ்க்கை ஒரு போலியான வாழ்க்கை என்பதை அவன் மறந்து போனான். மனிதன் இன்று உயிரோடிருப்பதே கருணையினால் தான்! உலகில் நமக்கு கிடைத்த அனைத்தும் தெய்வ கருணையால் தானே! அவரது கருணை எல்லையற்றது அல்லவா?

''அவர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்கு தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்து சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை'' என்று

வேதம் கூறுகிறது. (அப் 14:17). அவரது கருணைக்கு நாம் என்றுமே கடனாளிகள் என்பதை ஒருபோதும் மறந்து போகக் கூடாது.

இந்த மூத்த குமாரனைப் பாருங்கள், தன்னுடைய நீதியின் கிரியைகளின் மேல்தான் சாய்ந்து கொள்ளுகிறானே தவிர, தெய்வீக கருணையில் அவனுக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை. 'எனக்கு யார் தயவும் தேவையில்லை' என்பதுவே அவனது எண்ணம்! அகந்தை, தற்பெருமை, ஆணவம் ஆகியவை அவனை முற்றிலும் ஆட்கொண்டிருக்கிறது.

## *நன்றி கெட்ட குணம்*

தகப்பன் இளைய மகனுக்கு மட்டுமல்ல, மூத்த குமாரனுக்கும் அவனது ஆஸ்தி பாகத்தைப் பிரித்து கொடுத்திருந்தான். (லூக் 15:12). மூத்த மகன் என்ற வகையில் இவனுக்கு இரட்டை மடங்கு சொத்தும் கிடைத்திருக்கிறது. இதை அந்த தகப்பன், ''எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினான் (லூக் 15:31). என்றபோதிலும், தகப்பனுடைய அன்பிற்கோ, அவன் அருளிய நன்மைகளுக்கோ சற்றும் மதிப்பில்லாமற் போயிற்று. தகப்பனுடைய சொத்தை தன் கையில் வைத்து அனுபவித்துக் கொண்டே ''நீ எனக்கு என்ன செய்தாய்?'' என்று தகப்பனை நோக்கி கேட்குமளவிற்கு நன்றி கெட்டவனாய் மாறிவிட்டான். ''என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக் குட்டியையாவது கொடுக்கவில்லை'' என்று குறை கூறுவதிலேயே குறியாயிருக்கிறான். (லூக்கா 15:29).

## *கல்நெஞ்சம்*

கெட்டுத் திருந்திய தம்பி மீண்டும் திரும்பி வந்து பெற்றோருக்கு நல்லபிள்ளையாய் மாறிவிட்ட செய்தியை விட இனிக்கும் செய்தி வேறு ஏதேனும் உண்டோ? அண்ணனின், கண்களில் ஆனந்தக் கண்ணீர்

வழிந்திருக்க வேண்டுமே! உதடுகள் துடிதுடிக்க தேவனுக்கு நன்றி செலுத்தியிருக்க வேண்டுமே! ஆனால் இவன் வார்த்தைகளில் கசப்பும் கொடூரமும் அல்லவா வெளிப்படுகின்றன? (லூக்கா 15:28-30)

பாவம் எங்கேயோ அங்கே மனக்கடினம் உண்டு. எனவே தான், ''உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப் பட்டுப் போகாதபடிக்கு, நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்'' என வேதம் கட்டளையிடுகிறது. (எபிரெயர் 3:13). பாவமானது, மனிதனின் சுபாவத்தையும், உணர்வுகளையும், பண்பையும் மழுங்கச் செய்கிறது. மூத்த குமாரனின் மனமானது தொடர்ந்து பாவத்தின் சூடுபட்டு, முற்றிலும் மறத்துப் போயிருந்தது.

ஒரே குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு ஒரே விதமான போதனையும், பயிற்சியும் கிடைத்த போதிலும் வளரும் பிள்ளைகளின் பக்திக்கும், பண்பிற்கும் நாம் உத்திரவாதம் அளிக்க இயலாது. ''இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்ட புத்திரன்'' என்று தேவன் கூறுகிறார் (யாத் 4:22). ஆக, அவன் தகப்பனாகிய தேவன், எந்த விதத்திலும் குறை சொல்லமுடியாத ஓர் அருமையான தகப்பன்! தெய்வீக சத்தியங்களை அவனுக்குப் போதித்து அவனை நீதியின் பாதையில் நடத்தியவரும் அவரே. அப்படியிருந்தபோதிலும் இஸ்ரவேல் அவருக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கிற மகனாய் காணப்பட வில்லையே! இதுபற்றி தேவனுடைய ஆதங்கத்தைச் சற்று கேளுங்கள்; ''நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்; அவர்களோ எனக்கு விரோதமாய் கலகம் பண்ணினார்கள்'' (ஏசாயா 1:2).

எனவே பிள்ளைகள் வளர்ந்து, தங்கள் சுயவிருப்பத்தின் பேரில் பாவச் சீர்கேட்டின் வழியைத் தெரிந்து கொள்ளும்போது அவர்களது நல்ல பெற்றோரைக் குறைசொல்வதில் எவ்வித நியாயமுமில்லை.

✦✦✦✦✦

# சரியானதோர் சபை

– ஜெரி ஜென்கின்ஸ்

தப்பானவைகளையே எங்கும் கண்டு சலித்துப் போன நமக்கு, சரியானதொன்றைக் காண்பதில் ஓர் புத்துணர்வும் புதுத் தெம்பும் உண்டாகுமல்லவா? குறைகளையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தால், நம் கண்களுக்கு நிறைகளே தென்படாமல் போய்விடும். மோசமானவைகளையே பார்த்து வெறுப்படைந்த வர்களுக்கு சரியானவைகளை அடையாளம் காண முடியாமற் போய் விடுவதுமுண்டு. இந்தச் சூழ்நிலையில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சபையைப் பற்றிய சில சரியான விஷயங்களை சீர் தூக்கிப் பார்க்க உங்களை அன்புடன் அழைக்கிறேன், வாருங்கள்!

### *சரியானதோர் திட்டம்*

சபையென்பது, உலகத்தோற்றத்துக்கு முன்பே தேவனுடைய மனதில் உதித்த ஓர் திட்டமாகும். இது பிற்காலத்தில் தற்செயலாய் திட்டமிடப்பட்ட ஒன்றல்ல. "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி (நித்திய) தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக.... எல்லோருக்கும் வெளிப்படையாக காண்பிக்கிறதற்கு இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" என பவுல் கூறுகிறார் (எபேசியர் 3:9-11).

பாவம் உலகத்தில் நுழைந்து விட்டபோது அதற்கெதிரான வல்லமை வாய்ந்ததோர் சுவிசேஷ செய்தியை தேவன் மனுக்குலத்திற்கு அனுப்பி வைத்தார். இந்த ஒப்பற்ற செய்தியை தேவ குடும்பமாகிய சபையார் இவ்வுலகில் பிரசித்தம் பண்ணினார்கள். அந்த வேளை மிகவும் சரியானதாக இருந்தது (கலா 4:5).

### *சரியானதோர் விலைக்கிரயம்*

சபைக்கு விலைக்கிரயமாக தேவன் தம்முடைய ஒரே மகனாகிய இயேசுவைக் கொடுத்தார். இயேசுவோ, அவரது உயிர் நாடியான இரத்ததையே சபைக்குரிய விலைக்கிரயமாக செலுத்தி அதனை தமக்கென்று மீட்டுக்கொண்டார். (அப் 20:28, 1 கொரி 6:20).

### *சரியானதோர் தேவ ஜனம்*

கர்த்தருடைய வழியில் தகுதியாய் நடந்து வராத சிலரைப் பார்த்து விட்டு, எல்லோருமே தப்பானவர்களென்று எண்ணிவிட முடியாது. தேவனுடைய ஜனங்கள் சரியானவர்கள், ஏனென்றால் இவர்கள் தான் சரியான இரட்சிப்பைப் பெற்றவர்கள் (அப். 2:47). காயப்பட்டவர்களை குணமாக்கும் மருத்துவமனை போன்றது சபை. உலகின் தலைசிறந்த பண்பாளர்கள் இந்த சபைக்குள்ளிருக்கிறார்கள் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடலாகாது.

### *சரியானதோர் கொள்கை*

நாங்கள் மட்டுமே புத்திசாலிகள் என்றோ, கொள்கை பிடிப் புள்ளவர்கள் என்றோ இங்கு சொல்ல வரவில்லை. நேர்மையானவர்கள் எங்குமிருக்கலாம். ஆனால் எங்களால் இயன்றவரை கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் மாறாமல் நடப்பதுவே எங்கள் கொள்கையாயிருக் கிறது. ஆரம்ப நாட்களில் சபையானது எவ்விதம் இருந்ததோ அதே தூய்மையான சபையை இன்றும் நிலைநாட்டுவதே எங்கள் அயராத முயற்சியாகும்.

### *சரியானதோர் நோக்கம்*

தேவ நாம மகிமைக்காக வாழ்வதும், அவரது அன்பின் செய்தியை மாளும் மாந்தருக்கு அறிவிப்பதுவுமே சபையின் மேலான நோக்கமாயிருக்கிறது.

*சரியான வாக்குத்தத்தங்கள்*

பாவமன்னிப்பு, ஜெபத்திற்கு பதில் கிடைத்தல் போன்ற சகல ஆசீர்வாதங்களும் தேவனுடைய பிள்ளைகளுக்கு வாக்களிக்கப் பட்டுள்ளன.

எனக்கு அன்பானவர்களே, சபையைப் பற்றி சொல்லவேண்டிய சரியான விஷயங்கள் இன்னும் பல உண்டு. நீங்களும் எங்களோடு சேர்ந்து இந்த மாபெரும் புண்ணியப் பணியைத் தொடர்ந்து செய்திட உதவுவீர்களா?

## வாலிபனின் ஜெபம்

*பரலோகத்தில் இருக்கும் தேவனே, நான் இளைஞன், பெற்றோர் ஸ்தானம் என்பது என்ன என்று தெரியாது. அது மிக கடின மானது. ஏனெனில் இந்த நாட்களில் அநேகர் தோல்வியடைந்துள்ளனர். நான் என் அம்மா, அப்பாவுக்காக ஜெபிக்கிறேன். தேவனே, அவர்கள் நல்ல பெற்றோராக இருக்க உதவி செய்யும். நீர் விரும்புகிற வழிகளில் பலமுள்ளவர்களாக இருக்க உதவி செய்யும். நானும் இன்ப உணர்ச்சி யுடன் அவர்களைப் பார்த்து அவர்கள் புத்திமதி சரி என்று உணர்வேன்.*

*அன்பான கர்த்தாவே, என் பெற் றோரை புரிந்துகொள்ள உதவி செய்யும். என் வழியில் செல்ல அனு மதிக்கப்பட முடியாதபோது, அவர் கள் அன்பினால் அதைச் செய்கின்ற னரே ஒழிய, என்னை அற்பமாக நினைத்து என் நல்ல நேரத்தைக் கவர்ந்துகொள்ள அல்ல என்று எனக்கு நினைவு படுத்தும்.*

*தேவனே, பிடிவாதமாக, அவர்கள் பேச்சை கேட்க மறுக்கும் பொழுது, அவர்களுக்கு ஞானம் உண்டு, அனுபவம் உண்டு; ஏனெனில் அவர்களும் ஒரு காலத்தில் வாலிப வயதில் இருந்தவர்கள்; ஆனால் நான் இன்னும் பெற்றோராக இருந்த தில்லை என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள உதவி செய்யும்.*

*அநேக வருடங்களாக கடின உழைப்பு, தியாகம் காரணமாக என் உள்ளத்தில், என் மரியாதைக்குரிய வர்கள் ; அவர்கள் தங்களாலான மட்டும் என்னை சிறந்தவனாக வளர்த்தியவர்கள் ; அதற்கு ஈடாக அவமானத்தையும், துயரத்தையும் அவர்களுக்கு நான் கொடுக்காதபடி எனக்கு கீழ்ப்படிதலையும் மரியாதை யையும் கற்றுக்கொடும். எல்லா வற்றுக்கும் மேலாக, இங்கே இன்ன மும் என் பெற்றோர்கள் பூமியில் இருக்கும் போது, அவர்களை பாராட்ட உதவி செய்யும், அதை அவர்களும் அறியட்டும் ●*

# விவாகரத்து தேவையா?

**– டேய்டன் கீசி**

"குடும்ப வாழ்க்கை ஒத்துவரவில்லையெனில் விவாகரத்து தான் சிறந்த வழி" என்று உளவியல் நிபுணர்களும், மனநல மருத்துவர்களும் இருபது ஆண்டுகளுக்கு முன் கருத்து தெரிவித்தனர். ஆனால் இன்றோ அவர்களில் அநேகர் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொண்டுள்ளனர். ஏனென்றால், ஒழுக்க நெறி சீர்குலைவினாலும், இந்த மனநல மருத்துவர்கள் அன்று சொன்ன ஆலோசனையினாலும், சமீப காலங்களில் விவாகரத்து எண்ணிக்கை இருமடங்காகி விட்டது. விவாகமுறிவு என்கிற முட்டாள்தனமான தீர்வினால் விளைந்த பயங்கரமான வேதனைகள் எல்லோருக்கும் வெளிப்படையாய் தெரிய வந்திருக்கிறது. எனவே, குடும்பச் சிக்கலுக்கு ஓர் தெளிவான புதிய தீர்வை கண்டுபிடிக்கவேண்டிய கட்டாய சூழ்நிலை உருவெடுத்திருக்கிறது.

இந்த விஷயத்தை தீர்க்கமாக ஆராய்ந்த பிரைஸ் ஜே.கிறிஸன்ஸன் எனும் நிபுணர், விவாகரத்தினால் உண்டாகும் தீமைகளை விவரிக்கிறார்.

### *1. விபரீத விளைவுகள்!*

விவாகரத்து சம்பந்தமான சட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் பின்விளைவுகள், மனிதனின் உடலையும், மனதையும், ஆவியையும் மிக மோசமாய் பாதிக்கின்றன என்று கண்டு பிடித்துள்ளனர். ஏற்கனவே பலர் சொன்னது போல இது தனிப்பட்ட முன்னேற்றத்திற்கோ, மன நிம்மதிக்கோ வழிவகுப்பதில்லை.

### *2. வாழ்க்கைத்தரம் மோசமாகிறது!*

பத்து வருட காலம் இதுபற்றி ஆராய்ச்சி செய்த ஜூடித் வாலர்ஸ்டீன், மணமுறிவு பெற்ற பத்தில் ஒருவர் தான் சற்று உருப்படியாக வாழ்ந்து வருகிறார்கள் என கூறுகிறார். 20 சதவீதம் பேர் உருக்குலைந்து போயிருக்கிறார்களாம். தாங்கள் ஏமாற்றப்பட்டு மோசம் போனதாக 40

சதவீதம் பெண்களும், 30 சதவீதம் ஆண்களும் கூறிக்கொண்டு எரிச்சலும் புகைச்சலுமாய் அலைந்து கொண்டிருக்கிறார்களாம்.

### *3. பிள்ளைகளின் பாடு படு மோசம்.*

விவாகரத்து பெற்றவர்களின் பிள்ளைகள்தான் வெகு மோசமாக பாதிக்கப்படுகிறார்கள் என்பது பலர் கண்ட உண்மை. மீண்டு வர முடியாத பல படுகுழிக்குள்ளும் பிள்ளைகள் சிக்கித் தவிக்கின்றனராம். படிப்பில் நாட்டமின்மை, பொறுப்பின்மை, கவனக்குறைவு மட்டுமின்றி, போதைப் பழக்கம், மனநோய், உடல்நலமின்மை போன்றவைகளால் பல பிள்ளைகள் பாதிக்கப் பட்டு, அநேகர், வாலிப வயதிலேயே தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள் என்ற தகவல் அதிர்ச்சியூட்டுகிறது.

இத்தனை பாதிப்புகளையும் கண்ணாரக் கண்ட அறிஞர் கிறிஸன்ஸன், "நல்லது நடக்குமென்று நினைத்து விவாகரத்தை நாடாதே, அது உன் நிலைமையை மேலும் சிக்கலாக்கி சீரழித்துவிடும்" என்று கடுமையாக எச்சரிக்கிறார். வேதத்தை நேசிக்கிற தேவனுடைய பிள்ளைகள் இதுபற்றி என்றோ தீர்க்கமான முடிவெடுத்திருக்க வேண்டும்; ஏனென்றால் "***தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்***" என்று தேவன் திட்டவட்டமாக சொல்லியிருக்கிறாரே! (மல்கியா 2:16). எனினும், ஏற்கனவே விவாகரத்து பண்ணிக் கொண்டவர்களையும் தேவன் கிருபையால் மனமுவந்து ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். அவர்கள் தேவனை மதித்து அவரது நீதியை நிறைவேற்றினால் அவர்களது வாழ்வையும் அவர் செழிக்கச் செய்வார். (எரேமியா 3:1-15; 2 கொரி 5:14-17; அப் 10:34, 35).

நமது பரம தகப்பனின் நல் விருப்பம் நம் வாழ்வில் நிறைவேற இடம் கொடுப்போமாக! இன்னலில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு நாம் நல்வழி காட்டவேண்டியவர்களாயிற்றே! எனவே, கர்த்தரால் இணைக்கப் பட்டவர்கள் அனைவரும், மரணம் பிரிக்கும் வரை சேர்ந்தே வாழ தீர்மானிப்போமாக!

விவாகரத்து தேவை இல்லை.

✦✦✦✦✦

# கசப்பாயிருந்தாலும் மருந்து நல்லது!

**– கேரல் எல்.போர் ஹேரன்ட்**

நாட்கள் செல்லச் செல்ல நமது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் ஓர் முன்னேற்றம் காணப்பட வேண்டும். வளர்ச்சியும் அபிவிருத்தியும் மெய்யான கிறிஸ்தவ வாழ்வின் அடையாளச் சின்னங்களாகும். அவ்விதமாய் நாம் முன்னேறிச் செல்கையில், சிறுபிள்ளைத்தனமான காரியங்களை ஒதுக்கித் தள்ள வேண்டும். 'நான் குழந்தையாய் இருந்த போது குழந்தையைப் போல பேசினேன், குழந்தையைப் போல சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனான போதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்து விட்டேன்' (1 கொரி 13:11). சில விஷயங்கள் நமக்கு சுவையுள்ளதாயிராமற் போனாலும், அவை நம் உடலுக்கும் வாழ்விற்கும் நல்லதுதானே என்பது வளர்ந்தவர்களுக்குத் தெரியும். இதன் அடிப்படையில், இன்று விசுவாசிகளின் மத்தியில் உள்ள ஒரு மாபெரும் குறைபாட்டை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

அன்புடன் சத்தியத்தைச் சொல்ல வேண்டுமென்ற கருத்தை நாம் அதிகமாக வலியுறுத்திப் பேசிவந்தபடியால் இன்று அநேகர், ''எனக் கேற்றபடி பண்போடு பேசாவிட்டால் நான் யார் சொல்லும் சத்தியத்திற்கும் செவி சாய்க்க மாட்டேன்'' என்ற நிலைக்கு வந்து விட்டனர். பிரசங்கிமாரின் பேச்சை ''கர்ணகொடூரம்'' ''ரொம்ப போர்'' என்றெல்லாம் அநேகர் குறை சொல்லுகின்றனர். சொல்லுகிற பாணி சரியில்லை என்று காரணம் காட்டி, பலர் நழுவப் பார்க்கிறார்கள். இந்தக் கண்ணோட்டம் மிகவும் ஆபத்தானது.

நாம் அறிவிக்கிற தேவ செய்தி அன்பு கலந்ததாக காணப்பட வேண்டுமென்பது உண்மைதான். அதற்கு சற்று அனுபவமும் முதிர்ச்சியும் அவசியமாயிருக்கிறது. சொல்பவர் பொறுப்பில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தால் யார் அதைக் கேட்பார்கள் என்பதும் நியாயம் தான்.

ஆனால் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். அன்பில்லாமல் சத்தியத்தை ஒருவன் அறிவித்தாலும் கூட அந்த தேவ வசனங்கள் கேட்கின்ற ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாய் இருக்கிறது. பவுல் இதைக் குறித்து பிலிப்பிய விசுவாசிகளுக்கு எழுதுவதை சற்று கவனியுங்கள். ''சிலர் பொறாமையினாலும், விரோதத்தினாலும், சிலர் நல் மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையும் கூட்ட நினைத்து, சுத்த மனதோடே, கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள். இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன்'' (பிலிப்பியர் 1:15-18).

இன்றும் கூட போட்டி, பொறாமை, விரோதம் இவைகளை அடிப்படையாகக் கொண்டு சிலர் கிறிஸ்துவை அறிவித்து வருவதை நாம் காணும்போது முறுமுறுக்க வேண்டிய அவசியமில்லை. யார் என்ன நோக்கத்தில் சொன்னாலும் சத்தியம் சத்தியமே!

சொன்னவன் சரியில்லை என்பதற்காக சத்தியத்தைப் புறக்கணிக்க நமக்கு என்ன உரிமையிருக்கிறது? யாராயிருந்தாலும் என்ன விலை கொடுத்தாவது சத்தியத்தை வாங்கிக் கொள்ள வேண்டும். (நீதி 23:23). சத்தியத்தை நாடி ஓடுவதில் நாம் மற்றவர்களுக்கு முன்மாதிரிகளாய் இருக்க வேண்டுமல்லவா?

பிரசங்கிக்கிற ஆளிடத்திலே உத்தமம், அன்பு, நேர்மை, தயவு போன்ற எதுவுமே இல்லாவிட்டாலும், தேவனுடைய இரட்சிப்பின் வசனமானது தானாகவே கிரியை செய்வதில் எவ்வித தடையுமில்லை. இப்படிப்பட்ட மாய்மால போதகர்கள் வலம் வந்த நாட்களில், சத்தியத்தைத் தேடுவோர்க்கு இயேசு சொன்ன வழி என்ன தெரியுமா? ''வேதபாரகரும், பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால் நீங்கள் கைக்கொள்ளும்படி

அவர்கள் உங்களுக்கு சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்களின் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யா திருக்கிறார்கள் " (மத்தேயு 23 : 2, 3).

சத்தியத்தை யார் நமக்கு போதித்தாலும், அதைக் கேட்டுக் கீழ்ப்படிய வேண்டியது நமது கடமை; போதிக்கிற ஆளைப் பற்றிக் கவலை வேண்டாம். ***ஏனென்றால், நல்ல விதைகளை எந்த அலட்சியக்கார விவசாயி விதைத்தாலும், அவை முளைத்து கர்த்தருக் கேற்ற கனி கொடுப்பது நிச்சயம்.*** தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ள ஆவியின் பட்டயமாயிற்றே! எனவே இரட்சிக்கப்படுவதற்கு தேவ வசனம் தான் முக்கியமே ஒழிய பேசுகிற ஊழியரின் தகுதி ஒரு பொருட்டல்ல.

சிலர் பேசுகிற தொனியும் பாணியும் வித்தியாசமாய்க் காணப் படலாம். அதனால் அவர்கள் அன்பில்லாத அக்கரை யில்லாத நபர்கள் என எண்ண வாய்ப்புண்டாகிறது. அன்றைய தினத்தில் இயேசுவான -வரின் பேச்சைக் கேட்ட சீஷர்களுக்கே கூட இந்த தடுமாற்றம் இருந்ததே. "அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து; பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா?" என்று இயேசுவிடமே கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

தங்களுக்குப் பிடித்தமான விதத்தில் இயேசு பேசவில்லை என்பதை காரணம் காட்டி, பரிசேயர்கள் தப்பித்துக்கொள்ள முடியுமா? அல்லது எங்களை "விரியன் பாம்புக் குட்டிகளே" என்று யோவான் பேசினது எங்களுக்குப் பிடிக்கவில்லை, அதனால் தான், நாங்கள் அவர் பேச்சைக் கேட்கவில்லை என்று சொல்லி அன்றைய யூதர்கள் தப்பித்துக் கொள்ள முடியுமா?

எனவே, அன்புடன் சத்தியத்தைச் சொல்ல வேண்டியது நமது கடமை, இதை மறுப்பதற்கில்லை. நம்மால் இயன்ற அளவு அன்புடன் சாந்தத்துடன் சத்தியத்தை அறிவிக்க வேண்டும். சபையிலுள்ள சிலரது இந்தக் குறைபாட்டை நான் ஆதரிக்கவில்லை. ஆயினும் "மிட்டாய் கொடுத்தால் தான் நான் சாப்பாடு சாப்பிடுவேன்" என்று அடம்பிடிக்கிற தன்மையை விட்டு விட்டு "கசப்பாயிருந்தாலும் மருந்து நல்லது" என்ற முடிவுக்கு வருவோமாக. இனிமேலும் "இனிக்காத மருந்து எனக்கு எதற்கு?" என்று சொல்லாதிருப்போமாக!

✦✦✦✦✦

# ஒரே தடவை

*மால்கம் ஜேம்ஸ் மக்லீயட்*

நான் இந்த உலகத்தை கடந்து ஒரே தடவை தான் செல்லக் கூடும். ஆகையால், நான் செய்யத்தக்க நன்மை ஏதாகிலும் உண்டானால், ஏதாவது ஒரு மனிதனுக்கு காட்ட வேண்டிய தயை உண்டானால், இப்பொழுதே நான் செய்ய வேண்டும். அதை நான் தள்ளி வைக்கவும் வேண்டாம், ஒத்திப்போடவும் வேண்டாம்.

உன் இதயத்தை வெறுப்பில்லாமல் வைத்துக்கொள்ள உன் மனதை கவலையில்லாமல் வைத்துக்கொள். எளிமையாக வாழு, குறைவாக எதிர்பார். அதிகமாக கொடு. அடிக்கடிபாடு, எப்பொழுதும் ஜெபி.

உன் வாழ்வை அன்பால் நிரப்பு, சூரிய ஒளியை பரப்பு. தன்னை [சுயத்தை] மற. மற்றவரை நினை. மற்றவர் உனக்கு செய்ய விரும்புவதை, நீ முன்பு அவர்களுக்குச் செய்.

இவைகள் பரீட்சிக்கப்பட்ட திருப்தியின் தங்க சங்கிலியிலுள்ள இணைப்புகள் ஆகும் ●

# பொதுவான இரட்சிப்பு

– கிளாரன்ஸ் டலோச் ஜூனியர்

"பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில்..." (யூதா 3). நாம் யாவரும் பெற்று அனுபவிக்கிற இரட்சிப்பு, ஓர் "பொதுவான இட்சிப்பு" என யூதா குறிப்பிடுகிறார். இதனை "பொதுவான இரட்சிப்பு" என்று அழைப்ப தற்கு காரணமென்ன?

***1. பொதுவானதோர் வியாதியை இது குணமாக்குகிறது.***

எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களான படியால், இந்த பாவமெனும் வியாதியிலிருந்து இந்த இரட்சிப்பு நமக்கு விடுதலை அளிக்கிறது (ரோமர் 3:23). தொலைந்து போன ஆட்டைப்போல நாமெல்லாரும் வழி தப்பிப் போயிக்கிறோம். தேவ உறவு முற்றிலும் துண்டிக்கப்பட்டுவிட்டது. (ஏசா 59: 1,2). மனிதனாய்ப் பிறந்த எல்லோருடைய நிலையும் இதுதான்.

போலி மருத்துவர்களைப் போன்ற கள்ளப் போதகர்கள் ஏராளமாய் இன்று சுற்றி அலைகின்றனர். கல்வி தான் தேவை, சமுதாய மாற்றம் தேவை, சுற்றுச்சூழல் சீரமைக்கப்பட வேண்டுமென பல்வேறு சிகிச்சைகளை அவர்கள் கூறுகின்றனர். ஆனால் மனிதனின் வியாதியோ அவன் இதயத்தில் புகுந்துள்ள வியாதி என்பதை அவர்கள் அறியவில்லை.

**2. பொதுவானதோர் அருமருந்து இங்கே அளிக்கப்படுகிறது.**

பாவநோயை நீக்கும் பரம வைத்தியராம் இயேசுவின் சுவிசேஷம் எல்லோருக்கும் பொதுவானதோர் அருமருந்தாய் விளங்குகிறது. ஆம், பாரபட்சமின்றி எல்லோருக்கும் ஒரே மருந்துதான். அம்மருந்தை நாடி கூட்டம் கூட்டமாய் வந்த மக்களை அப்போஸ்தல நடபடிகளில் காண்கிறோம். இந்த கிறிஸ்துவால் மட்டுமே மனித வாழ்வை செழிப்பாக்கிட முடியும் (யோவான் 10:10). அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை (அப். 4:12). மனித குலம் வியாதிப்பட்டு, இருளில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. நம்பிக்கையின் ஒளிவிளக்காம் இயேசு நம் நடுவில் இருக்கிறார். (கொலோ 1:27).

**3. பொதுவானதோர் விசுவாசத்தால் இந்த இரட்சிப்பு உண்டாகிறது.**

தேவன் தரும் ஆன்மீக சுகத்தைப் பெற விசுவாசமென்பது முதல் தகுதியாயிருக்கிறது. (எபிரெயர் 11:6). இந்த விசுவாசம் என்பது தேவனுடைய வசனத்தின் வாயிலாக உருவாகிறது. அவ்வாறு உருவான விசுவாசம் கீழ்ப்படிதலின் மூலம் செயல்படுகிறது. இறுதியில், இந்த விசுவாசத்தின் பயனாக தேவனுடைய கிருபையைப் பெற்று இரட்சிக்கப்படுகிறோம். (எபேசி 2:8).

இவ்விதமாக உலகெங்குமுள்ள கிறிஸ்தவ விசுவாசிகள் எல்லோரும் பொதுவானதோர் விசுவாசமுள்ளவர்களாய், பொதுவான-தோர் இரட்சிப்பைப் பெற்று சுகித்து வருகிறார்கள்.

✦✦✦✦✦

# தீர்மானிப்பது உங்கள் பொறுப்பு

**– டால்டன் கீ**

முடிவெடுக்க வேண்டிய பல கட்டங்கள் நம் வாழ்வில் வருவதுண்டு. நாம் முடிவெடுக்கும் தீர்மானங்கள்தான் இம்மைக்குரிய நம் வாழ்வையும், நமது நித்திய வாழ்வையும் நிர்ணயிக்கின்றன. மேலும், சரியா தவறா என்று முடிவெடுக்கும் தீர்மானங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

முடிவெடுக்க வேண்டியது நமது மேலான கடமையாகும். இதில் நழுவுவதற்கு இடமேயில்லை. சரியான முடிவுகளைத் தீர்மானிக்க கீழ்க்கண்ட சில விதிமுறைகள் உங்களுக்கு உதவும் என நம்புகிறோம்.

***வேதவசனம் இந்த விஷயத்தை கண்டிக்கிறதா அல்லது ஆதரிக்கிறதா?***

எடுத்துக்காட்டாக, 1. விபச்சாரம் மற்றும் வேசித்தனம் (எபி. 13:4). 2. பொய் சொல்லுதல் (கொலோ 3:9; வெளி 21 :8).

***வேதத்தின் நியதிக்கு இது ஒத்துவருகிறதா?***

எடுத்துக்காட்டாக, வேலை செய்து, சுய உழைப்பில் தான் மனிதன் வாழ வேண்டுமென்று வேதம் கூறுகிறது (ஆதி 3:19; 2 தெச 3:10). ஆக, பிறன் பொருளில் சுகமாய் வாழ நினைப்பதோ அல்லது குறுக்கு வழியில் ஆதாயம் தேடுவதோ, இந்த நியதிக்கு எதிரானது.

***இது என் உடலுக்குத் தீங்கானதா?***

நம்முடைய உடல் நமக்குச் சொந்தமானது அல்ல; அது கர்த்தருக்குரியது என்று வேதம் கூறுகிறது. (1 கொரி 6:19, 20 ; ரோம 14:7,8)

***இது என் கிறிஸ்தவ நற்பெயரை களங்கப்படுத்துமா?***

நாம் எதைச் செய்தாலும் பிறருக்கு அது முன்மாதிரியானதாக இருக்க வேண்டும். (1 தீமோ4:12; பிலிப் 2:15; மத் 5:16).

***எனது சக கிறிஸ்தவர்களை இது பாதிக்குமா?***

''ஆனபடியால், சமாதானத்துக்கு அடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக் கடவோம்''. (ரோமர் 14:19).

***பிறர் நலத்தையும் புகழையும் இது சேதப்படுத்துமா?***

''அன்பானது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது'' (ரோமர் 13:10).

***எனது உள் நோக்கம் தூய்மையானதா?***

கிறிஸ்தவனின் நடவடிக்கைகள் மட்டுமல்ல, அதன் பின்னணியில் உள்ள அவனது உள் நோக்கங்களும் முக்கியமானவை ஆகும். (1 கொரி 13:1-3; கலா 5:26; மத் 6:1-18).

***கிறிஸ்தவ ஜீவியத்தில் இது என்னைப் பலப்படுத்துமா?***

ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனற்ற, தடை செய்கின்ற எதுவாயினும் அதைத் தவிர்ப்பது அவசியம்.

பத்து வருடங்கள் கழித்து இந்தத் தீர்மானங்களை பின் நோக்கிப் பார்க்கையில் துக்கப்படுவாயா? அல்லது சந்தோஷப்படுவாயா?

''நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்'' (நீதி 10:7).

***கிறிஸ்து இதைச் செய்வாரா?***

இது ஓர் முக்கியமான கேள்வியாகும். கிறிஸ்துவின் பண்புகள் நம்மில் பிரதிபலிக்கட்டும். (பிலிப் 2:5). எல்லா விஷயங்களிலும் அவரே நமது மாதிரியாய் இருக்க வேண்டும். (1 கொரி 11:1) (1பேதுரு 2:21) ●

# மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்

**- பிரான்சிஸ் பார்**

"நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது,.... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்ற யாக்கோபின் அறிவுரையானது ஒரு கிறிஸ்தவனின் நடைமுறை வாழ்க்கையில் ஓர் கடினமான அனுபவமாகும் (யாக்கோபு 1:2,3). அன்பிற்குரிய நம் உறவினர் ஒருவர் மரித்திருக்கையில், நமது வீடு எரிந்து சாம்பலாகும் போது, பிழைப்பிற்குரிய ஒரு வேலையை நாம் இழக்கும்போது, இவ்வுலகின் அசம்பாவிதங்கள் நம்மைத் தாக்கும்போது, எவராவது மிகுந்த சந்தோஷத்துடன் காணப்பட முடியுமா?

இயேசுவை உத்தமமாய் பின்பற்றும் விசுவாசிகளின் வாழ்வில் கொடூரமான அசம்பாவிதங்கள் திடீரென நேரிடும்போது நாம் செய்வதறியாது திகைக்கிறோம். இயேசு "நானே அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்றாரே! அப்படியானால், இயேசு கூறியதற்கும் யாக்கோபு கூறியதற்கும் முரண்பாடு காணப்படுகிறதா?

யாக்கோபின் நிருபத்தின் முதல் அதிகாரத்தில் தொடர்ந்து நாம் வாசிக்கையில் ஓர் திட்ட வரையறையைக் காணமுடிகிறது. அதாவது, கல்லூரிகளில், மொழிப்பயிற்சி பாட வகுப்புகளில் ஒரு சொற்றொடரின் பின்பகுதி, அடுத்த சொற்றொடரின் முதற்பகுதியை விளக்கும் என்று கற்பிக்கின்ற ஒரு முறை உண்டு. இவ்வகையில் அந்த வாக்கியத்தின் முழுக் கருத்தையும் இலகுவாக அறிந்து கொள்ள முடியுமாம். இதே பாணியைத் தான் யாக்கோபு இங்கு பயன் படுத்துகிறார். (யாக்கோபு 1:2-6). ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் ஏற்படும் சீரான வளர்ச்சி இங்கே காட்டப்பட்டுள்ளது. உபத்திரவங்கள் நம் விசுவாசத்தை உரசிப் பார்க்கும் பரீட்சையாயிருக்கிறது. பரீட்சையில் தாக்குப்பிடிக்கும் விசுவாசம் பொறுமையை, அதாவது சகிப்புத்

தன்மையை உருவாக்குகிறது. அந்த சகிப்புத்தன்மை முதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. முதிர்ச்சியடையும் போது ஞானம் பிறக்கிறது.

அத்தகைய ஞானம் ஒருவனிடத்தில் குறைவுபடுமானால், அவன் தேவனிடத்தில் கேட்கக்கடவன். ஞானம் என்பது ஓர் அற்புத வரம் அல்ல. நாம் அவரிடம் கேட்கும் போது, மேற்சொன்ன முறையில் நமக்கு அதனைப் படிப்படியாக கற்றுக்கொடுப்பார். உலகப் பிரகாரமான தொழிற்சாலைகளில் இதனைப் ''பயிற்சிக்காலம்'' என்பர் . பயிற்சியின் மூலம் ஞானத்தைக் கற்றுக் கொள்ளுதலே தேவன் வகுத்த திட்டமாயிருக்கிறது.

தேவனுக்கு நிகராயிருந்த இயேசு மாம்சமும் இரத்தமும் உடையவராய் இவ்வுலகில் அவதரித்தார். மனிதன் படும் பாடுகள், உபத்திரவங்கள், யாவற்றையும் தாமே அனுபவிக்கும்படியாகவும் ஓர் மானிடனாய் வாழ முடிவெடுத்தார். அவர் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டு பாடுபட்டவரானபடியால், நம்முடைய பலவீனங்களைப் புரிந்து கொண்டு, எந்த சிக்கலிலும் சிக்கித் தவிக்கிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.

கிறிஸ்துவானவர் பரலோகத்திற்கு மீண்டும் சென்ற பிறகு 'மனுஷருக்கு வரங்களை அளித்தார்' என்று பவுல் குறிப்பிடுகிறார். (எபேசியர் 4:7-16). அத்தகைய வரம் பெற்றவர்கள் தான் அன்றைய அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர் மற்றும் போதகர்கள் ஆகியோர். சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக தேவ ஜனத்தை ஆயத்தப்படுத்துவதே இவர்களின் பணியாயிருந்தது.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒன்றுபட்டு, சபையானது முதிர்ச்சியை எட்டிப்பிடிக்கும் வரையில் அவர்களது இந்தப் பணி தொடர வேண்டியதாயிருந்தது.

இவ்வுலக வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்து வரும் ஓர் கடின பாதை தான். ஆயினும் இந்த தொழிற் பயிற்சியை நாம் ஏற்றுக்கொண்டு நாம் கற்ற படிப்பினைகளை, அநேகருக்கு பயனுள்ளவை

களாய் பகிர்ந்திடலாமே! பெற்ற பிள்ளையை இழந்து தவிக்கும் ஓர் தாய்க்கு, அதே சோகத்தை ருசிபார்த்த ஒருவரால் தான் தக்க ஆறுதலைச் சொல்ல முடியுமல்லவா?

வேலையை இழந்து வருமானம் பறிபோன ஒருவரால் தான், சோற்றுக்கு வழியின்றி, பிள்ளை குட்டிகளோடு தவிக்கின்ற ஒருவரின் உணர்வை சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்பது நிதர்சனம். கிறிஸ்துவின் குடும்பமாகிய சபையிலும் கூட, துயரங்களை ருசிபார்த்தவர்களுக்குத்தான் துன்புறும் மக்களின் உண்மையான வேதனையின் ஆழம் புரியும். இதற்காகவே பலவகையான துன்ப பாதைகளில் பயணம் செய்யும் அனுபவத்தை தேவன் நமக்களிக்கிறார்.

தேவன் தமது மக்களைப் பல்வேறு வழிகளில் பரிசோதிக்கிறார் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகளை நாம் வேதத்தில் காணமுடியும். நம்முடைய பலத்தையும் பலவீனத்தையும் நாம் அறிந்து கொள்வதற்காகத்தான் இந்த பரீட்சைகள். வகுப்புகளில் மாணாக்கரின் தரம் அறிந்துகொள்ள பரீட்சைகள்; இட்லி வெந்திருக்கிறதா என்று பரிசோதிக்க விரல் குழி பதித்து ஓர் சோதனை; வீட்டுக் கதவுகள் ஜன்னல்கள் சரிவர அடைக்கப்பட்டிருக்கிறதா? என்று தினசரி சரிபார்த்தல் என்று இந்தப் பரிசோதனை அட்டவணை நீண்டு கொண்டே போகிறது. வேத வகுப்புகளையும் கூட இந்த பரீட்சை விட்டு வைக்கவில்லையே.

நாம் துன்பத்தில் சிக்கிக் கஷ்டப்படும் வேளைகளில் தேவன் அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருப்பதாக எண்ணிவிட வேண்டாம். மாறாக, நமக்கு நேரிடும் துன்பம் எதுவாயிருந்தாலும் அதனை நமக்கு நன்மையாக முடியப்பண்ணுகிறவர் நம் அன்பின் தேவன் (ரோமர் 8:28) என்பதை நாம் மறந்து போகக் கூடாது.

மற்றவர்களுக்கு சேவை செய்யும் பயனுள்ள ஓர் கருவியாக என்னை மாற்றுவதற்காகத் தான் இந்தத் துன்பத்தின் பயிற்சி என்பதை நாம் புரிந்து கொண்டோமானால் அதை ''மிகுந்த சந்தோஷமாக'' எண்ண முடியும்.

நெஞ்சை உலுக்கும் வேதனைகள் தீண்டும் போது எவராலும் சந்தோஷமாயிருக்க இயலாது. ஆனால் இந்த அன்றாட வேதனைகள் நம்மை 'எஜமானுக்கேற்ற பாத்திரங்களாக' மாற்றுகின்றன என்று எண்ணும்போது நம் உள்ளங்களில் மகிழ்ச்சி குடிகொள்ளும் (2 தீமோ 2:21).

> ''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்ச காலம் பாடு அனுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக!'' (1 பேதுரு 5:10, 11)

# பரிசுத்த ஆவி

*பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகின்ற ஞானஸ்நானத்தை இயேசு கிறிஸ்து ஒருவரே கொடுக்க முடியும். பரிசுத்த ஆவி ஞானஸ்நானம் ஒரு வாக்குத்தத்தம்.*

*இந்த வாக்குத்தத்தம், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இரண்டு கட்டங்களில் நிறைவேறியிருக்கிறது.*

1. *கிறிஸ்து உயிர்த்தெழுந்ததைத் தொடர்ந்து வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளில், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும்,*
2. *அடுத்து கொர்நெலியு வீட்டாரும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகின்ற ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

*இந்த இரண்டு சம்பவங்களைத் தவிர பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதாக வேறு எந்த ஆதாரமும் இல்லை. இந்த ஞானஸ்நானத்திற்கு தற்போது அவசியம் இல்லை. இந்த இரண்டு சம்பவங்கள் மூலம் தேவனுடைய ராஜ்ஜியம், யூதர், புற ஜாதியார் ஆகிய இருவருக்கும் திறக்கப்பட்டு விட்டது, தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டார் என்பதற்கு இவைகள் சாட்சிகளாக இருந்தன.*

✦✦✦✦✦

# உப்பும் ஒளியும்

– வெயின் பேரியர்

வேத வசனங்களில் கிறிஸ்தவர்களைப் பற்றிய பல அடை மொழிகள் காணப்படுகின்றன. ''பரிசுத்த ஜாதி'', ''பரிசுத்தவான்கள்'', ''ஸ்தானாபதிகள்'' என்பவை போன்று இன்னும் பல. கிறிஸ்துவை பின்பற்றும் மக்களின் ஆராதனை முறை, வாழ்க்கை பாணி, மனப் பக்குவம், பிறருடன் உள்ள உறவு முறை போன்ற அநேக சத்தியங்களை இந்த அடைமொழிகள் நமக்கு விளக்கிக் காண்பிக்கின்றன. பெருந்திரளான மக்களின் நடுவில் வாழும் சிறுபான்மை கிறிஸ்தவர்கள், எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதை மத்தேயு 5:13-16 மிகவும் அழகாக சித்தரித்துக் காட்டுகிறது.

''நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப் படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி, மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக் கடவது'' என்று இயேசு குறிப்பிட்டார்.

கிறிஸ்தவர்கள் எப்போதுமே சிறுபான்மையினர் தான் என்பதை சுட்டிக் காட்டும் பல வசனப் பகுதிகளில் இதுவும் ஒன்றாகும். மற்றவர்கள் மேல் ஓர் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்கு பெரும் பான்மை பலம் வேண்டுமென்பதுவே மனிதனின் யூகம். ஆனால் நமது ஆண்டவரின் கருத்தோ இதற்கு முற்றிலும் எதிர்மாறானதாக காணப் படுகிறது. கிறிஸ்தவர்களல்லாத திரளான கூட்டத்தின் நடுவில் போராடிக்

கொண்டிருக்கும் நமக்கு இயேசுவானவரின் இந்த வார்த்தைகள் ஓர் உற்சாகத்தையும் தைரியத்தையும் அளிக்கிறது அல்லவா?

உணவுப் பண்டங்களுக்கு ஓர் சிறிதளவு உப்பினால் மிகுந்த ருசி கிடைப்பதைப் போல நீங்களும் நானும் கூட ''சாரமுள்ள உப்பாக'' செயல்பட்டு ஓர் பெரிய மாறுதலை உருவாக்கிட முடியும். பெரும் பான்மையினரை சிறுபான்மையினரால் மாற்றிட முடியும் என்பதற்கு இது ஓர் நல்ல எடுத்துக்காட்டாகும். தேவனுக்கு விசுவாசமுள்ளவர்களாய் நாம் எவ்வளவு காலம் நிலைத்திருக்கிறோமோ அதுவரை நமது சாரமும், சுவையும் மாறாமல் நிலைத்திருக்கும். ஆனால் பல சமயங்களில் நாம் நம்முடைய சிறுபான்மை நிலையை எண்ணி சோர்ந்துபோய் பின்வாங்கிப் போகிறோம். நமது சமுதாயத்தில் நமக்குள்ள இந்த மாபெரும் பொறுப்பை நாம் உணர்ந்திட வேண்டும். இல்லையேல், நாமும்கூட அந்த சாரமற்ற உப்பைப்போல வெளியே கொட்டப் படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாத நிலையை அடைய நேரிடும்.

கிறிஸ்தவர்கள் பூமிக்கு உப்பாக மாத்திரமல்ல, அவர்கள் உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறார்கள். இருளில் தடுமாறும் பலருக்கு ஒரு சிறு மெழுகுவர்த்தி வழிகாட்டிட முடியும்; அதுபோலவே ஒரு சில கிறிஸ்தவர்களால் இருள் நிறைந்த இவ்வுலகை ஒளிமயமாக்கிட முடியும். பிறர் வாழ்வு பிரகாசிக்கப்பட வேண்டுமானால் கிறிஸ்தவர் களின் வாழ்வு பிரகாசித்திடல் வேண்டும். இன்றைய உலகம் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. எங்கும் பாவம்; எதிலும் பாவம்! இந்தப் பாவ இருளை நீக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக கிறிஸ்தவர்கள் காணப்படுகிறார்கள். உலகத்தை சீரழித்துக் கொண்டிருக்கும் கொடூர கொலைபாதகம், கொடுமை, துரோகம், அவபக்தி, அவநம்பிக்கை போன்ற அநேக முறைகேடுகளை நம்மால் இயன்ற மட்டும் தடுத்து நிறுத்திடலாமே! ஓர் சமுதாய மாற்றத்தை உருவாக்கிடலாமே!

நாம் வெறுமனே கைகட்டி அமர்ந்திருந்தால் நமது ஒளி அநேகரை சென்றடையாது; நமது சுவையும், அநேகரில் கலந்திடாது. எனவேதான் செயல்படவேண்டிய பொறுப்பு நமக்குண்டு! ''ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன்'' என்ற நமதாண்டவரின் கட்டளை நம்மைத் தட்டி எழுப்பிடட்டும் (மத்தேயு 28:19,20).

உலகமெங்கும் போய் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க நம்மிடையே அர்ப்பணிப்பும், முழுமுயற்சியும் அவசியமாயிருக்கிறது. இருள் நிறைந்த உலகிற்கு ஒளிகாட்டவும், நம்பிக்கையிழந்து அலையும் மாந்தர்க்கு நம்பிக்கையூட்டவுமே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இன்று இப்பணியைச் செய்திட நமக்கு முன்பாக ஓர் பிரகாசமான வாய்ப்பு உள்ளது. சிறுபான்மையினர் என்பது ஓர் குறைபாடு அல்ல. தேவ ஒத்தாசை நமக்கு என்றுமே உண்டு என்ற உண்மையை நாம் நினைவில் கொண்டு செயல்படுவோம்.

---

## கிறிஸ்துவில் ஐக்கியம்

| | | |
|---|---|---|
| கிறிஸ்து அதற்காக ஜெபித்தார் | - | யோவான் 17:20-21 |
| பிரிவினை என்பது தவறு | - | 1 கொரி 1:10-13 |
| ஐக்கியத்தின் அடிப்படை | - | எபேசியர் 4: 4-6 |

கர்த்தர் போதிக்கிற பிரகாரம் மாத்திரம் நாம் எல்லோரும் செய்திருந்தால்,
நாம் எல்லோரும் அந்த ஒரே சரீரத்தில் இருப்போம் அல்லவா?

உங்களுக்காக தேவனுடைய சித்தம் இது அல்லவா?

# நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்

**– ஜீன் கேரல்**

''விருந்து வீட்டுக்கு போவதிலும் துக்க வீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும்; உயிரோடிருக்கிறவன் இதைத் தன் மனதிலே சிந்திப்பான்.

நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்; முக துக்கத்தினாலே இருதயம் சீர்படும். ஞானிகளின் இருதயம் துக்க வீட்டிலே இருக்கும்; மூடரின் இருதயம் களிப்பு வீட்டிலே இருக்கும்'' ( பிரசங்கி 7:2-4).

மேற்கண்ட வசனப்பகுதி விநோதமாய்த் தெரிகிறதல்லவா? களிப்பு, கொண்டாட்டம், சிரிப்பு, உல்லாசம் எங்கே உண்டோ அங்குதான் சந்தோஷம் குடியிருக்கிறது என்றுதானே நாமனைவரும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்? மங்களகரமான நிகழ்ச்சிகளைத்தானே நாம், ''இனிய நினைவுகள்'' என குறிப்பிடுகிறோம்? அழுமூஞ்சிக் குழந்தையின் ஒட்டாரத்தை ரசிப்பவர் எவரேனும் உண்டா? முகம் பார்த்து சிரிக்கும் குழந்தையின் முதல்சிரிப்பை யாரால் தான் மறக்க முடியும்? இவ்வாறு நமது ரசனை ஒருபுறமிருக்க, பழைய ஏற்பாட்டு ஞானியின் கணிப்பைப் பாருங்களேன். ''நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்'' என்கிறாரே!

அப்படியானால் நம் வாழ்வில் சுபிட்சமும், நிறைவும், செழிப்பும் இருந்தால் அது கெடுதி என வேதம் சொல்லுகிறதா? இல்லவே இல்லை.

மாறாக, களிப்பும் சிரிப்பும் உள்ள வேளைகளை விட துயர வேளைகள் நமக்கு அநேக பாடங்களையும், பயனுள்ள அனுபவங்களையும் கற்றுத்தரும் என சாலமோன் சுட்டிக் காட்டுகிறார். மேலும் ''விருந்து வீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம்'' என்றும் சொல்லுகிறாரே!

இந்த இரண்டு வகை நிகழ்ச்சிகளிலும் நான் பங்கேற்றதுண்டு, ஆனால் விருந்து வீடு கொண்டாட்டமாகத்தான் இருக்கிறது. நண்பர்கள், சுற்றம். சுவாரஸ்யமான அவர்களின் இனிய நினைவுகள் மற்றும் விருந்து

ஆகியவை யாருக்குத்தான் கசக்கும்? ஆனால் அந்தக் கொண்டாட்டம் முடிந்த பிறகு, நாம் கொண்டு செல்லத்தக்க பயனுள்ள அனுபவங்கள் ஏதுமில்லையே!

ஆனால், ஆஸ்பத்திரியில், உயிர் பிரியும் இறுதி நிலையில் துடித்துக் கொண்டிருக்கும் தங்கள் அன்புக்குரியவர்களுக்காய் காத்து நிற்கும் என் நண்பர்களின் கரங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு கழித்த இரவுகள் உண்டு. என்ன செய்வது, என்ன பேசுவதென்றே தெரியாமல் நான் ஊமையாய் நின்ற வேளை அது. அந்தத் துயர சம்பவங்கள் வாயிலாக எனக்கு ஏதேனும் நன்மை கிடைத்திருக்கிறதா என்றால் ''நிச்சயம் உண்டு'' என்பேன். பிரிவு, வேதனை என்பவை எவ்வளவு ஆழமானவை என்பதையும், நித்திய வாழ்விற்கு நாம் தயாராவது எவ்வளவு முக்கியமானது என்பதையும் என்னால் உணர முடிந்தது. ஒருவர் மேல் ஒருவர் உயிரையே வைத்திருப்பதைக் காண முடிந்தது. வாழ்க்கை என்பது எவ்வளவு நிலையற்றது, குறுகியது என்பதையும் ''இறைவனில்லா வாழ்க்கை இனிமையற்றது'' என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது.

மற்றொரு சந்தர்ப்பத்தில், ''புசிப்பதும், குடிப்பதும் மகிழ்வது மேயல்லாமல் சூரியனுக்குக் கீழே மனுஷனுக்கு வேறொரு நன்மையும் இல்லை'' என்றும் ஞானி கூறுகிறாரே; (பிரசங்கி 8:15) இது எவ்வகையிலும் முரண்பாடு அல்ல. வாழ்வில் மகிழ்ந்திருப்பதும், சிரித்திருப்பதும் தவறு என்று வேதம் கூறுவதில்லை. ஆனால் பல சமயங்களில் இவ்வகை கொண்டாட்டங்கள் நித்திய வாழ்வைக் குறித்த நிர்விசாரத்தை உண்டு பண்ணி விடுகின்றன. ஆனால் துக்க வீட்டில் தான், வாழ்க்கையின் உன்னத பாடங்களை நாம் கற்றுக்கொள்ள முடிகிறது! நமது ஆண்டவர் இயேசு கூறியது நினைவிருக்கிறதா?

***துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்*** (மத்தேயு 5:4).

''நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்கு போதித்தருளும்'' (சங் 90:12) ●

# பிள்ளை குணம் வேண்டும் !

– ஜோ ரோஷ்

"இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி; நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்"

(மத்தேயு 18:2,3)

மாபெரும் கருத்துக்களை விளக்குவதற்கு மிக எளிய உதாரணங்களை நம் ஆண்டவர் பயன்படுத்தியிருக்கிறார்.

இயேசு தமது இராஜ்ஜியத்தைப் பற்றி சீஷருக்கு போதித்து வந்திருந்தும் அதனை அவர்கள் சரிவர புரிந்து கொள்ளவில்லை. மாறாக, அவரது இராஜ்ஜியத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவரிடமே கேட்டார்கள். அப்பொழுது ஒரு சிறு பிள்ளையை அழைத்து, அவர்கள் நடுவே நிறுத்தி, ஒரு சிறு பிள்ளையின் குணங்கள் உங்களுக்கு இல்லாவிட்டால் என் இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கவே முடியாது என்று உணர்த்திக் காட்டினார். அப்படியானால் சிறுபிள்ளையின் குணம் என்ன?

***தாழ்மை***

சிறுபிள்ளைகள் இயல்பாகவே தாழ்மை குணம் உள்ளவர்கள். பெற்றவர்களையே நம்பி, அவர்களையே சார்ந்திருக்கும் எளிய எண்ணம் படைத்தவர்கள். நம் மேட்டிமையை தூக்கியெறிந்தால்தான் நம் ஆண்டவரின் இராஜ்ஜியத்தில் அனுமதி கிடைக்கும். சுயம் சுட்டெரிக்கப் பட்டு, அவரது வாக்குறுதிகளை மட்டும் நம்பி, அவரையே சார்ந்து வாழப் பழக வேண்டும். அவரே நமது ஆண்டவர். நாம் அவர் சொல்லுக்கு அடிபணிந்து நடக்கும் தாழ்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

***நம்பிக்கை***

பிள்ளைகள், அப்பா அம்மாவின் கரங்களை நம்பிப் பற்றிக் கொள்ளும். தனக்குப் பாதுகாப்பு, ஆறுதல், நம்பிக்கை, ஆலோசனை போன்ற எது தேவைப்பட்டாலும் பெற்றோரையே நோக்கிப் பார்க்கும்.

அதுபோலவே, கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின் அங்கத்தினராக நாமும் எல்லாக் காரியங்களிலேயும் இராஜாதி இராஜாவாகிய இயேசுவையே நம்பிப் பற்றிக் கொள்ள வேண்டும்.

***எளிமை***

பெரியவர்களைப்போல பிள்ளைகள் சுயநலமுள்ளவர்களாய் இருப்பதில்லை. சின்ன விஷயங்களில் இவர்களுக்கு பெரிய சந்தோஷம் கிடைப்பதுண்டு. விலையுயர்ந்த விளையாட்டு சாமான் இவர்களுக்குத் தேவையில்லை - வெறும் அட்டைப் பெட்டியே போதும்! தேவ இராஜ்ஜியத்தின் குடிமகனும் அப்படித்தான். தேவையுள்ளவர்களுக்கு உதவுவதும், பிறர் பணி செய்வதுமே அவனது ஆனந்தம். உள்ளதைக் கொண்டு உள்ளம் மகிழ்வதே இவனது திருப்தி.

***ஆர்வம்***

பிள்ளைகள் எப்போதும் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பார்கள். விளக்கம் சொன்னால் அதைக் கள்ளமில்லாமல் ஏற்றுக்கொள்வார்கள். ஒன்றை முழுமையாய் தெரிந்து கொள்ளும்வரை விடவே மாட்டார்கள். இந்த நற்குணத்தால் தான் பிள்ளையின் மனதில் எதுவும் சட்டென ஒட்டிக் கொள்ளுகிறது. மூன்று வயது பிள்ளை தனது பெற்றோரின் பாஷையை போதுமான அளவுக்குத் தெரிந்து கொள்ளுகிறது. ஆனால் வளர்ந்தவர்களாகிய பெரியவர்களோ, எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆண்டவரின் அறிவில் குறைவுள்ளவர்களாகவே காலம் தள்ளுகின்றனர். ஒரு சிறு பிள்ளைக்குரிய ஆர்வம் நமக்கு வேண்டாமா?

***அன்பு***

சிறுபிள்ளைகள் அன்புக்கு அடிமைகள். மற்றவர்களோடு பாசத்துடன் பழக இவர்கள் எப்போதும் தயார். மொழி, நிறம், ஜாதி போன்ற பெரியவர்களின் தடுப்புச் சுவர்கள் இவர்களை என்றுமே தடுத்து நிறுத்துவதில்லை. எல்லையில்லா இந்த அன்பு யாரிடம் இல்லையோ, அவன் இராஜ்யத்தின் எல்லைக்குள் எட்டிகூடப் பார்க்க முடியாது.

அன்றாடம் நம் கண்முன்னே நடமாடும் சிறுபிள்ளைகளின் வாழ்வில் நாம் அறிய வேண்டிய நல்ல குணங்கள் அநேகம் உண்டு. அவற்றைக் கூர்ந்து கவனித்து பின்பற்றிடுவோம்!